80—பக்கங்கள்.

ஓம் பரப்பிரம்மணே நம :

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும்,
ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
 திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-9.	சென்னை பவஹு வைகாசிமீ 1உ	இதழ் 98.
Vol. 9.	1934-ம்ஹு மேமீ 15உ	No. 98.



"வைய நீ, வானு நீ, மற்று நீ, மலரின் மேல் ஐயனீ, யாழி நீ, யாழிவா ழமலனீ" எங்கள் இறைவா! ஓ கர்த்தனே! இந்த ஞால வாழ்வினில் யாங்கள் பூரண இன்பம் பெற அருள்வாய். எதனிலும் எமாறாதிருக்கக் கருணை செய்வாய். பணமென்றும், சொத்துக்களென்றும், மனைவி மக்களென்றும் பலவாறாகப் பாசத்துடன் நாங்கள் இயற்றும் பொம்மை விளையாட்டினை வெற்றிகரமாக முடித்து. அவற்றிலே பூரிப்பு மிகுந்து அலுத்துச் சலித்த பின்பு நினது பாதாரவிந்தங்களைச் சேர்வதற்கும் தகுதியுடையோ ராகுமாறு திருவருள் புரிவாய். எங்களின் இவ்வுலக விருப்பங்களைச் சித்தி பெறத் திருவருள் கூர்ந்துவிடின், அந்த அவா சாந்தி பெற்று அவற்றினிலேயே யுழன்று திரியும் மனத்தையும் ஒருவழிப்படுத்தி நினது திருவடிக் கமலங்களில் திருப்பிச் செலுத்துதற்கும் சுலபமா யிருக்கும். அங்ஙனம் சுலபப்படுதற்கே பேதையராகிய நாங்கள் எங்களின் விளையாட்டாகிய சிறு அபீஷ்டங்களை நிறைவேற்றித் தருமாறு நின் மலரடிகளைப் போற்றுகின்றோம். அடியோம் நிராதரவாய் ஸ்வப்பன சுஷுப்திகள் ஆகிய அவஸ்தைகட்குட்பட்டு உறங்குங்கால் கருணாகரனாகிய நீயல்லவோ நின் கிருபா கரங்களால் அணைத்துக் காத்தனை. நின்பொருட்டு யாம் இக்காலையம்பொழுதில் செலுத்தும் கடமையாகிய ஸ்தோத்திரத்தை யங்கீகரிப்பாயாக. இந்நாள்

காதலின் கணைகளால் துளைக்கப்பட்டவனுக்குத்தான் காதலின் வல்லமை தெரியுமாம்.

எமது மனத்தையும் புலன்களையும் நன்னெறியிற் செல்லப் புதுப்பித்து, நன் முயற்சிகளைப் பெருக்கி எமது கடமையை நவீனமான ஊக்கத்தோடும் உறுதியோடும் நடத்த அருளியதற்கு நமஸ்கரிக்கின்றோம்.

ஃ

"வந்தருளி என்னெஞ்சிடங் கொண்ட வானவர் கொழுந்தே!" உலகுக் கோர் முந்தைத் தாய்தந்தையே! என் முன் காணப்படுகின்ற யாவும் உன் மகிமையுள்ள திருவுள்ளச் சங்கற்பத்தையும், அளவிறந்த் வாச்சல்லியத்தை யும் அறிவிக்கின்றன. இன்றைய கஷ்ட சுகங்களில் பிரவேசிக்குமுன் நின் அருட் கருணையை முற்றும் நம்பினவராகி, அடியோங்களுடைய திரிகரண முயற்சிகளையும் நினக்கு அற்பிதமாக்குகின்றனம். அக் கஷ்ட சுகங்களைச் சலியாது அனுபவிக்க ஆயத்தப்பட்டிருப்போமாக. எம்மனோ வியாபாரங்களை என்றும் நின் கருத்துக்கு இசையச் செய்வதுடன், நினது அன்பால் அடி யோங்களின் ஹிருதயத்தைப் பூரிக்கவும் செய்வோமாக. நின் பரிசுத்த வியாபகம் யாம் செல்லும் மார்க்கங்கள்தோறும் விளக்கமாகத் தொடரவருள் வாய். எமது அந்தக்கரணங்கள் யாவும் நினையே நாடும்படி சீர்படுத்துவாய். எமக்குள்ள சகல விருத்திகளையும் உண்மையோடும் உல்லாஸத்தோடும் இயற் றுவோமாக. இப்பிரபஞ்சத் தொல்லைகளில் பிரவேசித்திருப்பினும் அதனால் எங்கள் மனது மையலுறாது நினையே பற்றும்படி கடாக்ஷிப்பாயாக. மாயை யாகிய சுழற்காற்றுக்குச் சற்றும் அசையாது நின் பக்தியாகிய மேருவைப் பற்றுவோமாக. எமது வாழ்நாளை வீணாக்காமல் நின்னை யடைவதே புருஷார்த்தமென உணர்த்தி, அதற்கேற்ற முயற்சிகளை யருளிச்செய்வாய். ஓ! கருணாகரனே! நித்திய மித்திரனாகிய நின் பாதாரவிந்தங்களைப் பிரதி தினமும் நாடி நிஷ்களங்க சித்தராய் நினது பக்தியைப் பெருக்கிச் சுகித்து வாழுமாறு கடாக்ஷிக்க வேண்டுகின்றோம்.

ஃ

"ஆறெனக்கு?— நின் பாதமே சரணாகதம்" என்று துதி பாடு. உழை. தைரியமா யுழை. பயமின்றி உழை. சலிப்புக்கு மட்டும் ஒருபொழுதும் இடம் தராதே. மெய்யன்பனாக வேண்டுமானால், லௌகிக சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் இடம் கொடாதே. லோக சம்பந்தமான விஷயமெதுவும் உனது சாந்த நிலையைக் கெடுக்கவிடாதே. ஸர்வ பிரேமைச் சிக்கலான விரிந்த மனதுடன், மாசு, மறு, தன்னயம் இவற்றைத் தொலைத்துவிடுவா யாக. உன்னைப் பெரியனாகப் பிறர் மதிக்கவேண்டுமென் றெண்ணாதே. பரம்பொருளின் ஊழியக்காரனாக உன்னை மதித்து, ஆபத்தைப்பற்றிய எண்ணமே யில்லாமல் எவருக்கும் தொண்டு செய்ய ஆயத்தமாயிரு. ஈச்வர சிந்தனையும், மெய் வாழ்க்கையு முள்ளோனாகுக. இழிசெயல்க ளெதுவும்

மேன்மை என்பது முக்கியமாக குணத்தையே பொருத்திருக்கிறது. உண்மை, சுயநலமின்மை, தூரதிருஷ்டி, அறிவு, விடாமுயற்சி முதலியவை இதற்கு முக்கியமாகும். பெரியவர்கள் தேகபலத்தையும் செல்வத்தையும் ஸமூகத்தின் நன்மைக்காகச் செலவழிக்க ஏற்பட்டவையாகக் கருதுகிறார்கள். ஏழ்மைத்தனத்தையும் வியாதியையும்—தைரியத்தைப் பரீக்ஷிக்க ஏற்பட்ட அவகாசமாகவே நினைக்கிறார்கள். மேன்மை என்பதற்கு ஜாதி வித்யாஸம் கிடையாது.

உன்னைப் பிடித்துத் தம்வழி இழுத்துக்கொண்டு செல்லாதபடி ஸதா காலமும் விழிப்பா யிருப்பாயாக.

ஃ

"இப்பிறப்பை நம்பி யிருப்பையோ நெஞ்சமே" என்றார் பட்டணத்தார். ஆஹா! அவரது பாடல்களைப் பாருங்கள். இனி, அவற்றினும் எளிதான நடை, பதங்கள் மனித ஜாதியின் பேச்சிலுங்கூடத் தேடிக் காண முடியுமா? முடியாதே. எனினும், அந்த வார்த்தைகளில்தானே அருளும், ஜீவனும், நம்பிக்கையும், தைரியமும் நிரம்பிக் கிடக்கின்றன. பக்தி என்ற விருக்ஷத்தின் முளை உனது இருதயத்திலே மௌனமாக வளரட்டும். கள்ளம் கபடற்ற மெய்பக்தியால் வடிக்கும் கண்ணீரையே அதற்கு நீராகப் பாய்ச்சு. "உள்ளன்பினு விடையறு துருகவரு மழைபோலிரங்கும்" கண்ணீரையே இட்டு வளர். பலனை எதிர்பாராதே. வெறும் வார்த்தைகளும் வெளிச் செயல்களும் பயனில்லை. வெளிப்பொருள்களின் துணையை உல்லங்கனம் செய்துவிடு. பேச்சை நிறுத்து. இன்சொல்லும், அழகிய வசனமும், அருள் ஜோதியைக் காண்பதற்குச் சாதனங்களாகா. நடத்தை ஒழுக்க மொன்றே அஃதளிக்கவல்லது. உள்ளத்தையும் உயிரையும் பரிபூர்ணமாக இறைவனின் மெய்த்தொண்டிற்கு அர்ப்பணம் பண்ணு. மெய்யடியார் தமது விடுதலை (முக்தி) யின் லக்ஷ்யத்திற்காகவே வேலை செய்கின்றார். வேறெதற்காகவுமல்ல. அவர் உண்பதும், உடுப்பதும், உலாவுவதும், குடிப்பதும், உறங்குவதும்—இன்னும் அவரது திரிகரணத்தின் ஒவ்வொரு செயலும் தமது இஷ்ட தெய்வத்தின் வணக்கமாகவே காண்கின்றார். அங்ஙனமே பாவிக்கவும் அன்னோரது உள்ளம் தூண்டுகின்றது. எங்கிருந்து எவ்வாறுகப் பார்க்கினும் இறைவனின் சந்நிதியாகவே தோற்றமாகி, மனம் அதிற் கலந்து ஊன்றி விடுகின்றது. இதுவே உண்மையான பக்தியாம்.

ஃ

'சேய்போலிருப்பர் கண்டீருண்மை ஞானந் தெளிந்தவரே" யதார்த்தமான ஞானத்தை யடைந்தோர் குழந்தைகளைப் போன்று நிர்மல சித்தராய் விளங்குவர். ஞானம் என்பது தபால் மூலமாவது, நேருக்கு நேர் சம்பாஷணை மூலமாகவாவது ஒருவரிடமிருந்து ஒருவர் பெற்றுக்கொள்ளக் கூடிய பொருளல்ல. மற்றெப்படித்தான் அதனை சம்பாதிப்பதோவெனில், "உடல், பொருள், ஆவி இம்மூன்றும் ஒருங்கே அதற்கென்று ஸமர்ப்பித்த பின்னுகும். நம் உழைப்புக்குத் தக்கபடி உண்மை நமக்கு வெளிப்படும் என்க. எப்படி காசியை நன்ரு யறியவேண்டுமானால், பிறருடைய வர்ணனைகளைமட்டும் கேட்டால் போதாது. நேரே பார்த்துத்தான் தீரவேண்டும். அப்படியே உண்மையை அறிய விரும்புகிறவன் தன்னுடைய உழைப்பி (கர்

எல்லா பாக்கியங்களும் மனுஷ்யர்களும் சூழ்ந்துநிற்குங் காலத்திலேயே சிலர் அதிர்ப்தி கொள்கிறார்கள். சந்தோஷிக்கத்தக்க அந்தச் சிறுபொழுதை இவ்விதம் அதிர்ப்தியில் போக்கியதும், உடனே வாழ்நாள் முழுமையும் மறவாத ஒரு பேரிடி அன்னோரைச் சூழ்ந்துகொண்டு விடுகிறது. முந்திய சந்தோஷகாலம் இப்போது அருமையாய்த் தோன்றுகிறது. அது திரும்புவது எது இனி?

மம்)ஞலேயே அறியக்கூடும். தன் பசிதீரத் தானே சாப்பிடவேண்டும். அன்பின் பொருட்டு அன்பு கொள்ளும் பருவம் வந்த பொழுதுதான் ஒருவனுக்குப் பக்தியும் ஞானமும் உதயமாயிற்றெனலாம்.

ஃ

"மற்றும் ஓர் தெய்வம் உளதென்று இருப்பாரோடு உற்றிலேன்" தன் இஷ்ட தெய்வத்தின் மீதேதான் ஒருவனுக்குச் சிந்தை செல்லும். மற்ருெரு தெய்வத்தை மனம் நாடாது. ஹிருதய பூர்வமான, ஏகாக்கிர பக்தி தன் இஷ்ட தெய்வத்தின்பேரில் ஒருவனுக்கு ஜனிக்குமாயின், அது பிரவஹித்து அவனிடமுள்ள களங்க மெவற்றையும்—அஞ்ஞானம், அகங்காரம், பயம், சந்தேகம், தன்னயம்—அனைத்தையும் அடித்துக்கொண்டுபோய் விடுகின்றது. பின் அப்பிரவாஹத்தின் முன் எதுதான் மிஞ்சி நிற்கும்? ஒன்றுமில்லை. நின்றது தனது லக்ஷியப் பொருளே. இஷ்ட தெய்வமொன்றுதான் அவனது சித்தத்தில் ஜோதி மயமாய்த் திகழ்ந்துகொண்டு நிற்கும். அதுவே, நித்தியமாய், நிர்மலமாய், நிறைவாய், நீங்காச் சுத்த பரிபூரணமாய் நிர்விகாரியாய் விளங்குவதாகும். சித்த லக்ஷயப் பொருளினிடத்து இத்தகைய பக்தி உண்டான் பொழுது லோக விஷயங்களினின்று விடுபடுவது அவனுக்கு சர்வ சுலபமாகிறது. தனது லக்ஷ்யப் பொருளான இஷ்ட தேவதையினிடத்து ஹிருதய பூர்வமான பக்தி ஜனித்தபொழுது, லோக சம்பந்தமான தெதுவும் சித்தத்தை அசைக்கச் சக்தியற்றதாகிறது. துறவும் அதிக சுலபமாகிறது. இவ்விஷயத்தை இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமோஞல், இறைவனுக்கு நம்மை முற்றும் அர்ப்பணம் செய்து விடவேண்டு மென்பதேயாம். பகவானைப்பற்றிய சிந்தையே நம்மை ஸதா ஆட்சி கொள்ளவேண்டும். இந்த சாதனையினுலே நாம் பரிசுத்தராகிறோம். பரிசுத்தமான பொருளைச் சிந்திக்கச் சிந்திக்க நமது மனத்திருள் எல்லாம் அகன்றோட, நாமும் பரிசுத்தராவது இயல்பேயல்லவா? எது பாவனையோ அதுவே சித்திக்கிறது. எம்பெருமானது திருவடிகளைச் சரணெனக்கொண்டு, நமது பாரத்தை அவனிடம் ஒப்புவிக்கும்பொழுது பக்தி அவன்மீது உதயமாகிச் சித்தத்தை அவன் வசம் ஒப்புவித்தவராகிறோம். பிறகு லௌகீகக் கவலைகளொன்றும் நம்மைப் பீடிப்பதில்லை. நமது சுமையும் விழுந்து விடுகின்றது. இந்நிலைதான் மெய்த்துறவு எனப்படும். இதுவே முக்தி. இதுவே விடுதலை.

ஃ

"அழுவன் தொழுவன் ஆடிக் காண்பான் பாடி யலற்றுவன்" தன்னையே மறந்து நிற்பன். பக்தி யமிர்தமுண்டு களிப்பன். இத்தகைய பக்தனொருவனே தேவாம்சத்தின் சாமீப்யத்தையும், சாக்ஷாத்காரத்தையும் உணரவல்லவன். அன்பின் மூலமாகவேதான் மனுஷ்யன் ஈசுவரனோடு இரண்டறக்

கடல்நீர் மட்டத்தின்கீழ் ஆற்று ஓட்டம்போல் தண்ணீர் இழுத்துக்கொண்டு போகிறது. கடலில் நீந்தத் தெரிந்தவர்கள் திடீரென்று இந்த ஆற்று ஓட்டத்தினுல் இழுக்கப்பட்டவுடன் அதிலே விழுந்து சிக்கிக்கொள்கிறார்கள். எதிர்பாராமல் இவ்விதமாகத் தள்ளப்பட்டவுடன் நீந்தித் தப்பித்துக்கொள்ள எண்ணம் வாராதபடி அவ்வளவுக்கு அதைரியம் மேலிட்டுப்போய் விடுகிறதோ என்று சந்தேகிக்க நேருகிறது.

கலக்கலாம். மெய்ப் பக்தி ஒருவனுக்கு உதயமானதும் அவன் எவருக்கும் எளியனுய் எவற்றையும் நேசிக்கிருன். அவனது காதலனுன ஸர்வாந்தர்யாமி எங்கு மிருக்கின்ருன். அகங்காரம் குடியோட, அவன் எங்கும் தன் இனிய காதலேயே காண்கின்ருன். ஆகவே, அவன் எவருக்கும் அடிமையாகின்ருன். எந்த ஜீவனுக்குத் தொண்டு செய்யினும், தன் காதலனுக்குத் தொண்டு செய்ததாகவே, அவன் நினைக்கின்றன். நினைப்பானேன்? செய்தவனே யாகிருன். புல்லிதழிலும் கீழ்ப்பட்டு, விருக்ஷமெனப் பொறுத்து, தனக் கெனச் சிறிதும் பெருமை தேடாது, எவருக்கும் பெருமை யுண்டுபண்ணு கின்றவனெவனே, அவனே எல்லாரும் ஏத்திப் புகழும் ஈசுவரனது பெயரை ஏற்றுக்கொள்ள அருகனுகிருன். ஜெனன மரண துக்கத்தை நிவர்த்திக்க ஈசுவரத்தியானமே ஒப்பற்ற ஸஞ்சீவியாயிருக்கிறது. ஆதலின், ஒவ்வொரு வரும் பக்தி செய்து அந்த ஆநந்தத்தை யடைவார்களாக.

குணமிருப்பின் அதைக் கண்டு களித்தலும், குற்றமிருப்பின் அதைக் களைதலுமே மதிவல்லோரின் கடமை.

அமிர்தகுணபோதினி

பவ௵ வைகாசி௴ 1௳

நமது பூர்வ லக்ஷ்யங்களின் உண்மைகள்

ஆதரித்துச் சேர்த்து வைத்து அன்புடன் காத்தருளிய அரிய குணங்கள் நிறைந்திருந்தது நமது பழய காலம். நமது பூர்வீகர்கள் தமது இலையில் பரிமாறப்பட்டதுபோன்று பக்கத்திலிருந்த இலையிலும் சரிவர வட்டித்திருக்கிறதாவென்று முதலில் கவனித்துவிட்டுப் பிறகே தாம் உண்பாராயினர். தமது நலத்துடன் மற்றவரது க்ஷேமத்தையும் கருதியவாறு வாழ்ந்தனர். எங்கு நோக்கினும் இன்பமே ததும்பி நிற்கும் வண்ணமாக ஜாதிஸமூகக் கோட்பாடுகளை நன்கமைத்து நலம் கனியச் செய்தனர். தங்களின் ஜீவியத்தை உயர்ந்த லக்ஷ்யங்களுக்கு உறைவிடமுள்ளதாக்கிக் கொண்டனர். பற்றுதலுடனும், பற்றுதலற்றும் இருக்கப் பயின்று வந்தனர். எதில் எது முக்கியமென்பதையும், எந்தெந்தக் காலத்தில் எதெதைக் கைவிட்டு எதெதைப் பற்றவேண்டுமென்பதையும் தெளிவாகத் தெரிந்திருந்தனர். நமது புராதனர்கள் நிர்மாணித்துச் சென்ற ஆலயங்களிலேயே இன்றைக்கும் நாம் இறைவனை வணங்கி வருகின்றோம். அன்னோர் ஏற்படுத்திய ஒழுங்கின் முறையிலேயே நாம் இப்போதும் நடந்து வருவதாக நம்பிக்கொண்டிருக்கிறோம். நமது முன்னோர்களின் பெருமைகளைச் சொல்லியே நாமும் பெருமை பெறுகிறோம். ஒருவனுக்குப் பெண் பார்க்கச் செல்லுகையில், அவனது மூதாதைகளைப்பற்றிய கேள்விகளே முதலில் தோன்றிக் கொள்கின்றன. நமது பூர்வீகர்களின் உயர்நலங்களைப் பொருத்தே நம்மையும் உலகம் மதிக்கத் தொடங்குகின்றது. நமது முன்னோர்களின் இரத்தம் நமது தேகத்தில் இன்றைக்கும் ஓடிக்கொண்டிருக்கின்றதென்பது உண்மை.

ஃ

ஒரு தந்தை காலக்கொடுமையால் க்ஷீணித்து, தனது மதிப்பில் தாழ்ந்து விடும்பொழுது குமாரனுக்கும் கௌரவம் கெடுகின்றது.

நினைத்தபோது நடுவிலே உடைத்துக்கொள்ளுகிற "அண்ணு பிரியம்" இருந்தாலென்ன? குழிதோண்டிப் புதைத்தாலென்ன? P. G. K.

ஓர் தேசத்தார் பல காரணங்களால் சக்தி குறையும்போது, அந்த சக்திக் குறைவின் சின்னம் ஆயிர விதங்களிலே காணப்படும். அவர் களுக்கு மறுபடி சக்தியேற்படும்போது அந்தச் சின்னங்களெல்லாம் மாறுபட்டுப் புதிய சின்னங்கள் தோன்றும். இவ்வுண்மையைப் பாஷை விஷயத்திலும் பரீக்ஷித்துப் பார்க்கலாம். ஒரு நாட்டினர் சக்திஹீனர்களாகும்போது, தமது முன்னோர்கள் உபயோகித்து வந்த பல பதங்களை முன்னத்தனை அர்த்த புஷ்டியும் அர்த்த பலமு மில்லாது நொய்ந்த—வாடிப்போன—பதங்களாக்கி விடுவார்கள். பொறுமைக்கும்—கோழைத்தனத்திற்கும், கண்டிப்புக்கும்—நாய்க் குணத்திற்கும், சோம்பேரித்தனத்துக்கும்-ஓய்வுக்கும், நட்புக்கும்-அறிமுகத்திற்கும், காதலுக்கும்-காமத்துக்கும் உள்ள பேதங்களைத் தெரிந்துகொள்ளாமல் இரு பதங்களையும் ஒன்றுகவே எண்ணிவிடு வார்கள். ஆரம்பத்தில் அந்த உயர்ந்த பதங்களுக்கிருந்த பொருள் விரிவில்லாமற் போய் சுருங்கிய அர்த்தமுண்டாய்விடும். கற்பூரத் தையும் கடலுப்பையும் ஒன்றுகவே கருதி மயங்கிடுவர். அப்பால், அந்த நாட்டினர் மீளவும் எழுச்சிபெறத் தொடங்கும்போது அப் பதங்களுக்கெல்லாம் முன்னிருந்தபடியே பொருளின் ஆழமும், விரிவும், கனமும், கௌரவமும் திரும்ப ஏற்பட்டுவரத் தொடங்கும். இஃதெல்லாம் வாஸ்தவமென்பதற்கு நமது சொந்த விஷயங்களே தக்க திருஷ்டாந்தமாகும்.

ஃ

நமது முன்னோர்கள் 'தர்மம்' (தவம்) என்ற பதத்தை என்ன பொருள்களில் எவ்வித லக்ஷயத்துடனும் வழங்கிவந்தனரென்பதை யும் ஒப்பிட்டு நோக்கும்போது வியப்புண்டாகிறது. தர்மம் என்ற ஸம்ஸ்கிருத பதம், 'த்ரு' என்ற பகுதியிலிருந்து பிறந்தது. அப் பகுதிக்கு 'பிணைப்படுத்து'—'பிடித்துக்கோள்'—'தாங்கு' முதலிய பொருள்களுண்டு. இந்த 'தர்மம்' என்ற பதத்தை நமது முன் ஞேர்கள் 'ஆத்மக் கோட்பாடு' என்ற பொருளில் வழங்கி வந்தனர். சைவ தர்மம், வைஷ்ணவ தர்மம் என்றும்சொல்வார்கள். அதாவது, சைவர்கள் கொண்டிருக்கும் முக்தி மார்க்கம், வைஷ்ணவர்கள் கொண்டிருக்கும் முக்தி மார்க்கம் என்று அர்த்தம். இப்போது இப்பொருளைக் குறிப்பிடுவதற்கு நம்மவர்கள் 'மதம்' என்ற சோர் வையுடைய பதத்தை வழங்கி வருகிறார்கள். 'மதம்' என்றால் 'அபிப்பிராயம்' என்றர்த்தம். 'ஆத்மாவின் லக்ஷயம்' என்ற கம்பீர மான (ஆழமான) பொருளைக் குறிப்பிடுவதற்கு 'அபிப்பிராயம்' என்ற சொல் போதுமா? 'ஹிந்து மதம்' என்று தற்காலத்தவர்கள்

பிரபஞ்சவாழ்வில் அளவிடற்கரிய மகிழ்ச்சியில் மயங்கும் வேளையில் தான், மற்றேதோ ஒருவகை ஸஞ்சலம் இடையிற் புகுந்துகொள்கின்றது. உள்ள ஸந்தோஷத்தையும் அது குறைத்துவிடுகின்றது.

சொல்லும் மஹா தர்மத்திற்கு நமது முன்னோர்கள் வைத்திருக்கும் பெயர் "ஸநாதன தர்மம்" என்பதாகும்.

ஃ

'தர்மம்' என்ற சொல்லைக் 'கடமை' என்ற பொருளில் இரண்டாவதாக வழங்கி வந்தனர். "ஸ்வதர்மத்தைப் பாதுகாப்பதில் ஒருவன் இறந்துவிடினும் நன்றேயாகும்" என்று கீதையில் பகவான் சொல்லியிருக்கிறார். "ஒருவன் தனக்குரிய கடமையைச் செலுத்தி வருவதினிடையே மரணம் நேரிடினும் அதற்கு அஞ்சலாகாது" என்பது இவ்வாக்கியத்தின் குறிப்பு. இப்போதுகூட வடநாட்டில் 'தர்மம்' என்ற பதத்தை ஸாமானியமாக இந்தப் பொருள்களிலேதான் உபயோகித்து வருகின்றனர். இவற்றைத் தவிர, 'ஒரு வஸ்துவின் குணம்'—'செயல் முறை'—'மூல தத்துவம்' முதலிய பல வேறு பொருள்களும் இச்சொல்லுக்குண்டு.

ஃ

இக்காலத்தில் நம்மவர்கள் இந்த மாட்சிமை கொண்ட 'தர்மம்' என்ற பதத்தை மிகவும் புண்ணாக்கிச் சுருக்கிச் சிறுமைப்படுத்திப் 'பிச்சை யிடுதல்' அல்லது திருவாங்கூர் இராஜாவைப்போல் 'ஊட்டுப் புரை' வைத்து அன்னதானம் செய்தல் என்ற பொருளில் உபயோகப் படுத்துகிறார்கள். இப்படியே நமது தேசத்தார் சக்திஹீனமடையத் தொடங்கியதிலிருந்து தாமும் சக்தி குன்றிப்போன பதங்களாக யாகம், யஞ்நம், (யக்ஞம்), அத்தியயனம், மந்திரம், ஆராதனை, அன்பு, சிரத்தை, வீர்யம் முதலிய எண்ணிலாதன காணப்படுகின்றன. இவற்றின் பழமைப் பொருள்களையும், தற்கால ஸாமானியப் பிரயோகங்களையும் விஸ்தரித்துக்கொண்டுபோனால் விரிவாகி விடுமென்றஞ்சி விடுக்கின்றோம்.

ஃ

இப்படிப்பட்ட பதங்களிலே 'கர்மம்' என்பதொன்று. இந்தச் சொல்லுக்குச் 'செய்கை' என்பது பொருள். சில ஸமயங்களில் 'நிலைத்த பயனுடைய செய்கை' என்ற பொருளில் இப்பதத்தை நம் முன்னோர்கள் வழங்கினர். 'கர்மப் பயன்கள்' என்று சொல்லுமிடத்தே, போர்க்களத்தில் உயிர் துறப்பது முதலாகச் சிரங்கு சொரிதல் வரையுள்ள எல்லாவிதமான பயனுணர்ந்த செய்கைகள் மாத்திரமே

நம் வீடுகளில் வந்து பிச்சைகேட்பவர்கள்கூட தங்களின் கௌரவத்தை விட்டுக்கொடுக்க விரும்புவதில்லை. அவர்களுக்கும் ஒரு கௌரவம் இருந்து கொண்டிருக்கிறது. "அக்ஷய பாத்திரை" என்ற வைணவப் பெயருடன் பிச்சை எடுப்போர் எவ்வளவோ கௌரவமாய் மதிக்கப்படுகின்றனர்.

யல்லாமல், தூங்கும்போது காலை யசைத்தல் முதலிய பயனுணரப் படாத செய்கைகளும் குறிப்பிடப்படுகின்றன. ஏனென்றால், நாம், பயன் கருதினும், கருதாவிடினும் எல்லா விதமான செய்கைகளுக் கும் பயன் விளைக்கும் இயற்கை யுண்டாதலினென்க. இப்போதோ 'கர்மம்' என்ற பதம் மிகவும் சுருங்கிய குறிப்பில் வழங்கப்படுகிறது. ஒருவன் இறந்தபின்பு அவன் பிணத்துக்குச் செய்யப்படும் சடங்கு களும், அதுபோன்ற வேறு சில செய்கைகளுமே இப்பொழுது 'கர் மங்கள்' என்று சொல்லப்படுகின்றன. கர்மசாஸ்திரமாகிய பகவத் கீதைக்கு உரை எழுதியிருக்கும் சில பிற்காலத்துப் பண்டிதர்கள் கூட இதில் பெருந்தவறிழைத்திருக்கிறார்கள். 'கர்மங்கள்' என்ற பிரயோகம் வருமிடத்திலெல்லாம் அவர்கள் 'வைதிகச் சடங்குகள்' என்று வியாக்கியானம் செய்துள்ளார்கள். அர்ச்சுனனோ ஒப்பற்ற கம்பீரன், வீரர் திலகம், க்ஷத்திரியர்களின் ஆதர்சம், ஞானக்குன்று. இத்தன்மைகொண்ட அர்ச்சுனனுக்கும், அவன் வாயிலாக மனித ஜாதி முழுமைக்கும் பகவான் சொல்லிய கர்ம சாஸ்திரத்திலே 'கர் மங்கள்' என்பதற்கு சிரார்த்தம்போன்ற வைதிகச் சடங்குகள் என்று பொருள் செய்தல் பொருந்துமோ?—தக்கதாகுமோ?

ஃ

"கர்மம்" என்பது செய்கை. அருச்சுனன் முதலாக, உஸ்மான் சாயபுவின் வியாபார ஸ்தலத்தில் கூலிக்குப் பாடுபடும் சிறு கணக் குப் பார்ப்பான்வரை, பிரம்மஞானி முதலாகப் பணத்தாசை பிடித்த புரோஹிதன்வரை, எல்லா வகுப்பு மனிதர்களும் செய்கின்ற எல் லாச் செய்கைகளுக்கும் "கர்மம்" என்று பெயர். கர்மம்—அதாவது உனது கடமைகளை யெல்லாம் செய். எது வரினும் மனத்தளர்ச்சி யுறாமல் செய். அறிவுடன் செய். இந்திரியாதிகளின் சேஷ்டைகளா கிய விருப்பு, சினம் முதலியவற்றால் அறிவை மயக்கடித்துக்கொள் ளாமல் தெளிவுடன் செய். கடமை செய்வதில் பதறல் வேண்டாம். ஜ்வரம் வேண்டாம். வீணான ஸமுசயங்கள் வேண்டாம். பலன்களில் அபேக்ஷையே வேண்டியதில்லை. பரம்பொருளுடன் லயப்பட்டு, எந்த இடர் வரினும் மனமஞ்சாமல் துணிவுடனும், சாந்தியுடனும், ஆநந்தத்துடனும், கடமைகளை நிறைவேற்று. இதுவே கர்மம், இதுவே கடமை, இதுவே கர்மயோகம்.

ஃ

"பற்றில்லாமை" அதாவது பலன்களிலே விருப்பு இல்லாமை என்பதை விளக்க இங்கு ஒரு உதாரணம் தருகிறோம். இந்திரப் பிரஸ்த (தில்லி) நகரத்திலே அரசு செலுத்திய கடைசி க்ஷத்திரிய

"எனக்குக் கோபமில்லை. ஆனால், ஆண்டவன் உம்மைக் கோபித்துக் கொள்வார்."

அரசனாகிய பிருத்விராஜன் மஹா போகி. தேவகிரி அரசன் குமார்த்தியை இவனுடைய வைரியாகிய கன்னோஜ் ராஜனுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தம் பேசி யிருந்தார்கள். ஆனால், அந்தப் பெண் பிருத்விராஜனுடைய கீர்த்தியையும், ரூபலாவண்யத்தையும், சௌரியத்தையும் கேட்டு, அவன்மீது மோஹம் கொண்டவளாகிப் பிருத்விக்குக் காதற்பத்திரம் விடுத்தாள். பிருத்வி தானும் இரண்டு போர்வீரருமாக வந்து பெண்ணை யழைத்துக்கொண்டு விந்தியமலைச் சாரலுக்குச் சென்று அங்கே கந்தர்வ விதிப்படி மணஞ்செய்து கொண்டான். தேவகிரியை விட்டு வெளியேறியதன் பிறகு கன்னோஜத்தரசனது ஸேனபதியொருவன் வியர்த்தமாகப். பெரும்படையொன்று கொணர்ந்து தேவகிரியை முற்றுகையிட்டான். பிறகு பிருத்விராஜனுடைய ஸேனை வந்து கன்னோஜப்படையை அடித்தோட்டிவிட்டது.

ஃ

விந்தியமலைச் சாரலிலே பிரகிருதிதேவி தனது சௌந்தரியத்தையெல்லாம் பொழிந்திருக்கிறாள். அற்புதமான அருவிகளும், அணைகளும், காட்டாறுகளும், லீலாவனங்களுஞ் செறிந்த இடம். வஸந்த காலம். அரசன் இந்தப் பூலோக ஸ்வர்க்கத்தில் ஒரு மண்டபங் கட்டிக்கொண்டு, காட்டிலே வசித்த மலைச்சாதியாரை யெல்லாம் வென்று கீழ்ப்படுத்தி அங்கே இந்திரன்போல் வாஸம் செய்து வருவானாயினன். காட்டாறுகளில் நீந்தி விளையாடுதல், அருவியாடல், யானை வேட்டை, வீணா கானம், நாடகம், நர்த்தனம், மாதரின்பம் இவற்றிலே லயித்தவன்போ லாய்விட்டான். இந்திரனுலகுபோன்ற இந்த ஸ்தலத்தை விட்டுப்பிரிய மனமில்லாதவனாய், தில்லியிலிருந்து தனது குடும்பத்தாரையும் பரிவாரத்தையும் தருவித்து வைத்துக்கொண்டு, தனது போக நகரத்தையே இராஜதானியாக்கி விட்டான். இங்ஙனம் மஹா போகங்களில் மூழ்கி வாழ்ந்து வரும் நாட்களிலே, ஒருநாட் காலை திடீரென்று வடக்கே யிருந்து ஒரு தூதன் ஓலை கொண்டுவந்தான். அஃது பிருத்விராஜனின் கீழே யிருந்து பஞ்சாப் நகரத்தை ஆண்டு வந்த சுபேதாரிடமிருந்து வந்தது.

ஃ

"மஹாராஜா, ஆப்கானிஸ்தானத்திலிருந்து மஹமது கோரி ஆர்யவர்த்தத்தின் மீது படை யெடுத்து வருகிறான். நான் அவனை எதிர்ப்பதற்குரிய ஆயத்தங்கள் செய்து வருகிறேன்"—என்று அந்த

தன் காதலனுக்குக் கடிதம் எழுதுவதற்காக அவன் அறிந்திருந்த பாஷையையும் கற்றுக்கொண்டு கடிதம் எழுதியனுப்பி அவனை மகிழ்வித்த ஒருபெண் மணி, பின்னாளில் அக்காதலனை அடியுடன் வெறுத்து வேறொருவனை மணந்துகொண்டாள். புது மணப்பெண்ணாய்விடினும் இழந்த கற்பு இழந்ததே.

ஓலையில் எழுதியிருந்தது. அடுத்த க்ஷணம்—பிருத்விராஜன் விந்திய மலைச்சாரலிலிருந்து தனது உடைவாளுடன் புறப்பட்டாய் விட்டது. கூட்டை விட்டுப் பறந்து செல்லும் பக்ஷியைப்போல், இந்த வீரன் தனது தெய்வ போகங்களை யெல்லாம் ஒரு கணத்திலே உதறித் தள்ளிவிட்டு, சுதேச ரக்ஷணையின் பொருட்டுப் பறந்து விட்டான். சுபேதாரின் ஓலையைக் கண்டவுடன் குதிரை யேறிய பிருத்வி பஞ்சாபில் போய்த்தான் போஜனஞ் செய்ததாக இதிஹாஸங் கூறுகின்றது. சேனைகளும், பரிவாரங்களும் பின்னிட்டுத்தான் வந்து சேர்ந்தன. திலோத்தமை போன்ற யுவதியின் மஞ்சத்திலிருந்து, போர்க்களத்திற்கு அணுவளவு யோசனையுமில்லாமல், ஒரு கணமும் தாமதியாமல், விரைந்து செல்லத்தக்கவாறு, அவ்வளவு "கடமை யுணர்ச்சி" யுடையவர்களே—உண்மையான போகங்களுக்குத் தகுதி யுடையோராகின்றனர். இதுதான் உண்மையான வைராக்கியம். வெளியே போகம்; உள்ளே தியாகம்—வெளியே இன்பம்; நெஞ்சத்தே துறவு, பற்றில்லாமை. இஃதே நமது புராதனர்கள் கொண்டிருந்த கௌரவ லக்ஷயமாகும்.

ஃ

இனி, துறவைப்பற்றி ஒரு சிறிதே கூறி முடிப்போம். நமது தேசத்தில் இப்போது சில நூற்றாண்டுகளாகத் துறவைப் பற்றிய பேச்சு அளவு மிஞ்சிப் போய்விட்டது. கண்டவனெல்லாம் ஞானம் பேசுகிறான். ஒன்றரைக்காசின் பொருட்டாக உடலையும், ஆவியையும், தர்மத்தையும் விலைபடுத்தக் கூசாத நீச மனிதர்களுங்கூட, "எல்லாம் மாயை, இவ்வுலகமே பொய், க்ஷணத்தில் அழிவது இவ்வாழ்க்கை"—என்று கிளிகள் போலத் தமக்குத் தெரியாத விஷயத்தை எளிதாகச் சொல்லிவிடுகின்றனர். ஆனால், இந்தத் தியாகம் (துறவு) மாத்திரமே மனிதனுக்குப் போதுமென்பது நமது சாஸ்திரங்களின் கருத்தன்று. குருக்ஷேத்திரத்தில் தனக்கு உண்மையை சந்தேகம் நேரிடாதபடி தெளிவாகச் சொல்லித் தன்னை ஆட்கொண்டருள் செய்யவேண்டுமென்று கேட்ட அர்ச்சுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணன், "அடா அர்ச்சுனா! உண்மையையா கேட்கிறாய்? காவி வஸ்திரம் உடுத்திக்கொண்டு காட்டில் போய் மூச்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திரு" என்று போதிக்கவில்லை. "அர்ஜுனா! உனது கடமையைப் பிழையில்லாது செய்; எதிரிகளை வென்று ராஜ்ய லக்ஷ்மியை மணம் புரிந்துகொள்; உனது கீர்த்திக்கும் குல தருமத்திற்

வீட்டுத்தலைவன் தபாலில் வந்த விசாரமான கடிதத்தைக் கையிலேந்தித் துக்கித்தவனாயிருக்க, அதையறியாத அவனது வீட்டினர் துள்ளிக்குதித்துத் தங்களின் சந்தோஷத்தில் அவனையும் இழுக்க முயலுகிறார்கள். அவனது மனோவாதனை இவர்களுக்குத் தெரிகிறதா? அவனும் அவர்களின் ஸந்தோஷத்தை என் கெடுக்க என்று மௌனமாகிறான்.

கும் பங்கம் நேராமல் பார்த்துக்கோள்; ஆனல், நீ செய்கிற செயலை "உனது சுகத்திற்காக" என்ற சிறிய எண்ணங்கோண்டு, ஸர்வேசுவர னுக்கு நீ தரவேண்டிய "தர்மக் கடனுக"க் கருதிச் செய்" என்று பகவான் கட்டளை யிட்டார்.

ஃ

நமது முன்னோர்கள் போகம் (இவ்வுலக இன்பம்) அனுபவிப்பதை இழிவாகக் கருதவில்லை. இவ்வுலகிலும் நலம்பட வாழ்ந்து, எல்லா சுகபோகங்களும் அனுபவித்து, அவ்வளவையும் ஒரு கணத்தில் விட்டுவிடத்தக்க பற்றில்லாமையையும் ஏற்று, பரலோக வாழ்விலும் சுகிக்கத்தக்கவாறு உன்னதமான, லக்ஷ்யங்களைக்கொண்டு விளங்கினர். ராமன், தர்மன், அசோகன், விக்கிரமாதித்தன் இவர்களது ஆட்சி காலங்களைப்பற்றிய சரித்திரங்களைப் படித்துணர்ந்தால் அவர்களின் இவ்வுலகபோகமும், அதே சமயத்துள்ள துறவு (தியாகம்) நெஞ்சமும் இனிது புலனுகும். செல்வம், கல்வி, கற்புடைய மகளிரோடு களிக்கும் இன்பம், ஸங்கீதம், நாடகம், சிற்பம் முதலிய பலவகை இன்பங்கள் அக்காலங்களில் மிகவும் மலிந்து கிடந்தன. பேடி யொருவன் இந்திர பதவியைக் குறை பேசுவதுபோல, நம்மவர்கள் உலக இன்பங்களை வெறுத்துப் பேசுதல், பிறதேசத்தாருக்கு நகைப்பை விளைக்குமேயன்றி வேறில்லை. வாழத்தெரியாத ஜனங்கள் என்றும் அன்னிய நாட்டினர் பரிகசிப்பர். ஆனல், வாழ்விலே, அடிமை வாழ்வு வாழவொண்ணுது. வீர வாழ்வு வாழவேண்டும்; தியாக (துறவு) வாழ்வு வாழவேண்டும். "விடுதலை" என்ற பதத்தை சமீப காலத்துக்கு முன் வரையில் "சிறையினின்றும் விடுதலையடைதல்" என்பதற்கு மட்டுமே உபயோகித்து வந்தனர். இப்பொழுதோ "விடுதலை" என்ற பதம் "ஆத்ம விடுதலை"—"வாழ்க்கையில் விடுதலை" என்ற உயரிய பொருளில் உபயோகமாகி வருகின்றது. இன்பம் வேண்டுவோர் துன்பத்திற்கு அஞ்சலாகாது. சிறிய சிறிய இடுக்கண்களுக்கு அஞ்சும் நரிமனிதர்களுக்கு இவ்வுலக இன்பம் கிடையாது. பெருந்துன்பங்களுக்கு அஞ்சாதவர்களே "பெரிய இன்பங்களுக்கு" உரிமை யுடையோராவர். இதனையும், இதுபோன்ற உயரிய லக்ஷ்யங்களையுமே நமது முன்னோர்கள் கொண்டிருந்தனர். அந்தப் பூர்வ—புராதன லக்ஷ்யங்களின் உண்மைகளையும், பூர்வீகர்கள் உபயோகித்துவந்த பதங்களின் கௌரவங்களையும் நன்குணர்ந்து, நமது வாழ்க்கையை இன்பம், வீரம், தியாகம், சத்தியம் நிறைந்ததாக உயர்த்திக் கொள்ளக்கடவோம். துணிகிறனுக்கு எல்லாம் உண்டு.

"எண்ணிய முடிதல் வேண்டும்; நல்லவே யெண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்; தெளிந்தநல் லறிவு வேண்டும்;
பண்ணிய பாவ மெல்லாம் பரிதிமுன் பனியே போல
நண்ணிய நின்மு னிங்கு நசித்திடல் வேண்டு மன்னுய்."
—'பாரதி'



நாம் கல் வியாபாரி. கருங்கல்லன்று, செங்கல்லன்று, செம்பூரான் கல்லுமன்று. மாணிக்கக் கல்லுகளும், நவமணிக் குவியல்களும் 'நமது கடை'யில் வைத்திருக்கிறோம். நமக்குச் சரக்கு கொடுக்கிற ஆசாமிகளிடத்தில் புன்கல்கள் கிடையவே கிடையா. நமது கடை அனுபவ வழியில் உலகத்துக்கு உபகாரம் செய்யவே வந்த கடையாம். இலுட்டு நகைகளும், அற்ப சொற்ப கற்களும் எங்களிடம் அகப்படாது. அவன் செத்தான்—இவன் உயிர்த்தான்—உவன் பொங்கினான்—வண்டியொடிந்தது—மாடு மோதியது என்ற இன்னோரன்ன சமாச்சாரங்கள் காணோமே யென்று வருந்தப்படாது. அவையெல்லாம் வாரப் பத்திரிகை தினப்பத்திரிகைகளுக்கே பொருந்தும். அவை வேண்டுமானால் அப்பத்திரிகைகளிலே காண்க. நாம் போதிக்கவே வந்திருக்கிறோம். அவரவர் தரமுணர்ந்தே பாடம் சொல்வோம். பக்குவவி அபக்குவவி யென்ற வித்யாஸம் நன்றா யுணர்வோம். காலமறிந்து செய்வன செய்வோம். பணத்துக்காக நாம் உழைக்க வெளி வரவில்லை. குணம் சேராத பணத்தை நாம் மதிக்கவே மாட்டோம்.

ஃ

"ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஸகோதர விசுவாசத்தோடும் பரஸ்பரம் உறவாடி யொருவரை யொருவர் நேசித்து வந்தாற்றான் தேசம் எந்தவிதமான நன்மையையும் அடையும். ஆண்டவன் ஒருவர் தாமே யிருக்கின்றார். அல்லா என்றழைத்தாலென்ன? சிவ, விஷ்ணு என்று அவரை அழைத்தாலென்ன? பொருள் ஒன்றுதானே, இரண்டில்லையே. ஆண்டவன் நமக்கெல்லாம் பிதாவாக இருக்கிறாரென்றால், நாமெல்லாம் அவருடைய குழந்தைகள் தாமே. நாமெல்லோரும் ஸகோதரரைப் போல் உரிமை பாராட்டி யொழுக வேண்டாமா? இதை யறிந்து இந்திய உலகம் நடந்துகொள்வதெப்போதோ?" என்றார் அல்லாபிச்சை.

ஃ

"குழந்தை கல்யாணம், குட்டிக் கல்யாணம் என்பனவெல்லாம் சாரதா சட்டத்தால் சுருங்கிவிட்டன. ஆங்காங்கு சில நடைபெறுகின்றதெனினும், அது ஒரு துணிந்த துணிவிலும் ரகசியத்திலுமன்றிப் பகிரங்கத்திலில்லை. விவாக சட்டத்தை மீறிச் செய்தால் கோர்ட்டேற வேண்டுமென்ற அச்சம் ஒரு புறம்

ஒரு நண்பனின் மொழி:—நானாக உன்மீது இரக்கப்பட்டு உன்னைத் தூங்கவிட்டால்தான் உண்டு என்பதை நீ அறிந்ததே. பேசுவதற்கு மனுஷ்யர்கள் கிடையாதிருந்து ஏங்கி, பிறகு கிடைத்த சமயம் என் ஆவல்தீர, அன்புடன் நான் உன்னோடு ஒரே படுக்கையி லிருந்துகொண்டு பேசுகையில், அதை மறுத்துத் தூங்க உனக்கும் சக்தியில்லைதான்.

இருக்கவே செய்வதில் உள்ளுக்குள் நடுக்கந்தான். ஆகவே, இதற்கு ஒரு வழி பிறந்தது சரி. இனி, மற்றொன்றைத் திருத்த வசதி காணவே காணோம். கண்மூடித்தனமாய்க் காதல் இன்னதென்று கனவுங் காணாத காதலர்கட்கு—காதலைக் கழிந்த ஜன்மங்களிலும் கண்டறியாத மனுஷரூப மிருகங்களாகும் காதலிமார்களைத் தேடி வைப்பதுதான் கல்யாணமோ? இதை நிறுத்த வழியே இல்லை. இதனினுங் கொடுமை பாரதத்தாயின் திருமணி வயிற்றிலுதித்த சிறுமியர் பல்லோர் மங்கல நாண் இழந்து கால முழுமையும் துறந்தவர்களாகவே கிடந்து கொட்டுங் கண்ணீர்தான். இந்நாள் வரைக்கும் விதவா விவாகத் தீர்மானங்கள் பல சைபராய் (0) முடிந்தன. பணத்தின் பலம் படைத்த ஐசுவரிய ஸம்பன்னர்களிற் சிலர் பந்து விரோதத்தை எதிர்த்துக்கொண்டு விதவா விவாகம் செய்விக்கத் துணிகிறார்கள். மற்ற ஏழைகளோ கண்ணீருடன் காலத்தை முடிக்க முயலுகின்றனர். இவையெல்லாம் நமது 'உள் நாற்றங்கள்'" என்றார் மயிலாடும்பெருமாள் பிள்ளை.

ஃ

"ஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதியார் புதுச்சேரியில் வசித்திருந்தபோது ஒன்றைக்கொடுத்து என்னை எழுதச்சொல்ல, நான் கூட்டெழுத்தாக மட மடவென்று கிறுக்கினேன், அதைப் பார்த்துத் 'தம்பி நிறுத்து' என்று பாரதியார் கூறி, எழுதும் வகை இவ்வாறென விளக்கினர்:— கோடு ஒன்றிலொன்று சேராதிருக்க வேண்டும்; இது எழுதவேண்டிய ஒரு எழுத்தின் இலக்கணம்; எழுத்துகள் ஒன்றையொன்று தீண்டாதிருக்கவேண்டும்; இது ஒரு வார்த்தையின் இலக்கணம்; அசைக்கசை கொஞ்சம் இடைவெளி; ஒரு வார்த்தைக்கும் மற்றொரு வார்த்தைக்கும் அதிக இடைவெளி, நிறுத்துப் புள்ளி, இவைகளை மறக்கவே கூடாது. வார்த்தைகளில் முற்றுப்புள்ளி சாப்பாட்டைவிட முக்கியம். வரி விட்டுத் துவக்குவதையும் இலேசாய் எண்ணாதே. அச்சுக் கோர்க்கும் மனிதருக்கு உன் எழுத்து விளங்கவேண்டாமா? இத்தனை நாள் நான் எழுதுவதை நீ பார்த்ததில்லையா? அன்றியும், அச்சு எழுத்தின் உருவம் எப்படியோ அந்த முறையில் எழுத்துக்களை எழுதினால், எல்லாருக்கும் எங்கிருப்பவருக்கும் தெரியும். இரண்டெழுத்தை ஒரே எழுத்தாய் எழுதுவது தக்கதன்று" என நவின்றா"ரென்று ஸ்ரீ பாரதிதாஸன் புகன்றார். வேண்டுமென்றே எழுத்துகளைக் கூட்டெழுத்தாக வரைவதற்கு முயல்வோர் இதைக் கவனிப்பாராக.

ஃ

"தன்னைத் தாறுமாறு படுத்துகிறவர்களைச் சேர்ந்தவர்களையே தனக்கு மிகவும் வேண்டிய மனுஷ்யர்களாக நினைத்துத் தம் நெஞ்சில் உள்ளதையெல்லாம் அவர்களிடம் கொட்டி விடுகிறார்கள். அவர்களோ இவர்கள் பக்கமாகவே நின்று இவர்களுக்கு வேண்டியபடிப் பிரியமாய்ப் பேசிச் சமாதானம் செய்துவிட்டு, இவர்களுக்கு ஆகாதவர்களான தன்

தைரியத்திலும், தைரியத்தால் விளையக்கூடிய செய்கைத்திறமையிலும் மிகமிகக் குறைந்தவர்களாகும்படிக் காலம் செய்துவிடுகின்றது. அதனால் விட்டதொழிலைத் தொடங்கவோ, புதுத்தொழிலை ஆரம்பிக்கவோ அச்சமாகிறது.

னவர்களிடம் நடந்த சங்கதிகளைக் கூறி, அங்கும் மிக்க வேண்டியவர்களாகி விடுகிறார்கள். இவ்வித இருதலை யசைப்பு மனிதர்களால் குடும்பத்தில் உண்டாகும் கோரணிகள் குழப்பங்கள் அபாரமானது" என்றார் இஞ்சி பச்சடியார்.

ஃ

நிலாவின்போது நடு நிசியாயினும், தெருவில் எவரும் காணாவிடினும் வழி நடப்பதில் மனதுக்கு அச்சம் உதிப்பதில்லை. பகற்காலத்துத் தைரியமே தாண்டவமாடுகிறது. உதய காலத்து இருளாயினும் அது பீதியையும் பயத்தையும் விளைத்து, நடுக்குறச் செய்கிறது. தனக்கு ஒரு வேலை எங்கேயாவது கிடைத்து அதன் மூலம் தன் ஜீவியப்பாதை நிலா போன்ற வெளிச்சமுள்ளதாகி விடின், மனிதன் எவ்வளவு உழைப்பையும் ஏற்று, எவ்வளவு கஷ்டத்துக்கும் ஈடுபட்டுத் தாங்கத் திறனையடைகிறான். ஏந்த வேலையும் கிட்டாமல் இருளான ஜீவியத் தவிப்பில் இருப்பின், அது நடு நிசிபோன்றதாகி, உள்ள தைரியத்தையும் இழக்க வைத்து நடுங்கச் செய்கிறது. சிறிதேனும் கடையில் வியாபாரம் நடப்பது நிலா வெளிச்சத்திற்கு சமம். வியாபாரமே இல்லாவிடில் அது நடுநிசிக்கே சமானமாகி, அந்தக் கவலை மனிதனையே தின்று விடும்" என்று தனகோடி முதலியார் பகர்ந்தார்.

ஃ

"தொழில்" என்றால், பக்தியுடன் செய்யும் பகவத்ஸேவை. ஆனால், பகவத் ஸேவை யென்பது கோவில்களிலும், வீடுகளிலும் விக்கிரகாராதனம் செய்வது தானோ? அன்றன்று; பகவான் ஸர்வபூத மயமாயிருக்கிறார். உலகமே பகவத் ஸ்வரூபம். ஆகையால், உலகத்திற்கு உதவி செய்வதே பகவத்ஸேவை; எல்லா பிராணிகளிடத்திலும் அன்பு, சங்கடங்களைத் தீர்த்தல், பிணி போக்கல், வறுமை நீக்கல்—இவைகள் சிறந்த செயல்களாகும். இவைகள் வஞ்சனை யின்றியும், மனதில் பலாபேக்ஷையின்றியும், கடவுளிடத்தில் முழு நம்பிக்கையுடனும் செய்தால், விடுதலை (மோக்ஷம்) பெறலாம். ஆனால், மோக்ஷமே கிடைத்திட்டாலும், ஞானமே பிறந்திட்டாலும், செயலற்று நிற்பது என்றுமே நலமல்ல. எந்நிலையிலும் ஏதாவதொன்றைச் செய்தவராகவே இருக்கிற தொழில் நிலையே தர்மமாகும்:" என்றார் ஆமவடைப்பண்டாரம்.

ஃ

"கட்டுப்பாடும், தடையும் முன்னேற்றத்துக்கு விரோதிகளா? தீய காரியத்தைச் செய்யாதிருக்கவே அந்தக் கட்டுப்பாடு உதவுவதாயின், ஒரு கொடிய செயல் நிகழாவாறு தடைகள் எற்படுத்தப்படுவதா யிருப்பின், இந்தத் தடையும் கட்டுப்பாடும் நல்லது செய்தற்கே அமைந்ததென்று பாராட்டவேண்டும். குடும்ப பரிபாலனத்துள்ளும் ஒரு கட்டுப்பாடு இருந்தால்தான் அது சரிவர நிர்வகிக்கப்படும். மீறுபவர்களுக்கு ஒரு தடை இருந்தால் தான் அவர்கள் ஒரு ஒழுங்குக்குள் அடங்கி நிற்பவராவர். கட்டுப்பாடும் தடையும் குடும்பத்திற்கு நலம் செய்வது போலவே, ஸமூகத்திற்கும் நன்னோக்கத்தோடும் உபயோகப்படின் நலமே பயக்கும்.

அதிகமான பிரக்யாதியும், அதிசயமான அபிவிர்த்தியும் சிலருக்கு ஆபத்தின் அறிகுறியாய் விடுகிறது. அல்ப ஆயுளில் அன்னோர் கண்மூடி விடுகின்றனர்.

சில சமயங்களில் ஒரு முக்கிய தர்மத்துக்காகக் கட்டுப்பாட்டையும் தடையையும் உடைத்தெறியவும் நேரும். வீடு தீப்பிடித்துக்கொண்டு எரிகையில், வீட்டுக்குள்ளேயே மறைவில் இருந்து வரும் பருவயுவதி பலர் முன்பாக வெளியில் ஓடி வந்து விட்டால்,—அவளை ஒருவன் தொட்டு வெளியில் அழைத்துவந்து காப்பாற்றினல்,—அது பிழையாகுமா?" என்றார் ஆழாக்கு அரிசியார்.

ஃ

"மனிதன் சுகத்தை வேண்டுகிறான்; மனிதன் அமைதியை வேண்டுகின்றான்; மனிதன் சக்தியை வேண்டுகின்றான்; மனிதன் உரிமையை வேண்டுகின்றான்; மனிதன் அதிகாரத்தை வேண்டுகின்றான்; இவை யாவையும் அனுபவித்துப் பார்த்த பின்னர், அவன் பக்குவம் பெற்று, மோட்சத்தை நாடுகின்றான். அதாவது, ஒவ்வொரு மனிதனும் இன்பம். பொருள், அறம், மோக்ஷம் என்ற நான்கு உணர்ச்சிகளிலும் பெரிதும் வீழப் பெறுகிறான். இந்த நான்கு உணர்ச்சிகளின் போக்குக்கே "வாழ்வு" என்று பெயர். மனிதனுடைய வாழ்க்கையில் இந்த நான்குவகை உணர்ச்சிகளைத்தான் காணலாம்." என்று தாண்டவராயர் நவின்றார். இத்துடன் நமது கடையும் பூர்த்தி பெற்றது.

'பஹதூர்' பொன்வண்டு செட்டியார்

"அமிர்தினி"யின்
ஒன்பதாம் வருட வாழ்த்து.

(கும்மி)

பாவையரே யென்றன் தங்கையரே—கும்மி
பாடி விளையாடும் சேடியரே
ஆவலோ டமிர்தினி ஒன்பதாம் ஆண்டை—அவனி
யோரறியக் கூறுங்கடி. (1)

ஓராண் டீராண்டாய்க் கடந்து வந்தாள்—நல்ல
ஒன்பதாம் ஆண்டும் அடைந்து வந்தாள்
சீருடன் செந்தமிழ்ச் செல்வர் கரங்களில்—சென்று
தவழ்ந்து தவழ்ந்து வந்தாள். (2)

கற்றவர் மெச்சிடும் பற்பல கட்டுரை—காசினி
முழுதும் பரப்பி வந்தாள்
நற்றவ மென்றவள் எத்திசையு மெச்ச—ஞாயிறு
போலவே தோன்றி வந்தாள். (3)

போகாத இடமெல்லாம் போய்ப் புகுந்தாள்—அங்கு
போதங்கள் மெத்தவும் தந்துவந்தாள்
சாகாப் பெரும்புகழ் பெற்றுவந்தா ளவள்—சகத்தோர்
அன்பைப் பறித்து வந்தாள். (4)

அனுபவ மணிகளை அள்ளியள்ளி—யவள் அவனி
முழுவதும் இறைத்து வந்தாள்
தேனினு மினிய தீந்தமிழ்க் கதைகள்—தெவிட்டா
வண்ணமாய் ஊட்டி வந்தாள் (5)

விடா நகைப்பை யளித்திடவே யவள்—விகடப்
பிரதாபனையுங் கூட்டி வந்தாள்
படார் படாரென்று நீதி துலங்கிட—"நமது
கடை"யை அழைத்துக் கொண்டாள். (6)

மாதர்க ளெல்லோரும் மெச்சிடவே "மனோ—ரஞ்சித"
மண்டப மமைத்துக் கொண்டாள்
வாதுக ளின்றியே சிறுவர்க ளருந்திட—"சிறுவர்
விருந்"தையும் சேர்த்துக் கொண்டாள். (7)

"பிரபஞ்ச விலாச"க் கட்டடங்களும்—உயர்
"கவிதா விலாச"க் கரவுகளும்
சேறிந்துமே தமிழகச் செல்வியாய் சென்னை—நகரில்
பிறந்துமே தவழ்ந்து வந்தாள். (8)

அன்னமே ஒன்பதாம் ஆண்டினையே யவள்—அடைந்தாள்
அவனி யோர் மகிழ
இன்னமுதே நாமெல்லா மொன்றுகூடி யவள்—இட்டத்தை
பூர்த்தி செய்து வைப்போம். (9)

சந்தாத் தொகையான ரூபாய் ஒன்றை—நாமும்
சந்தோஷ மாகவே யனுப்பி வைத்து
சுந்தரச் செல்வியைக் கண்டு களித்து நாம்—சுகமாய்
என்றென்றும் வாழ்ந்திடுவோம். (10)

அந்நற் செல்வியின் ஆசிரியர்—எஸ். ஜி.
ராமானுஜல் நாயுடு தன்னுடனே
சொந்தக் காரரான இ. எம். கோபால—கிருஷ்ணக்
கோனு மிக வாழியவே. (11)

அன்புமிக்க சந்தா நேயர்களும்—யாண்டும்
கட்டுரை தந்திடும் அன்பர்களும்
இன்பமடைந் திந்த மேதினியில்—நாளும்
வாழிய வாழிய வாழியவே. (12)

புதுவை—மூ. தங்கமணிப் பிள்ளை,

நற்சாந்துப்பட்டி.

மதுபான பேதம். (அங்கும் இங்கும்)

மேனாடுகளில் "ஒயின்" என்று சொல்லப்படும் மதுவானது ஆகார பதார்த்தங்களில் ஒன்றாகக் கலந்து மிதமாகவோ அதிகமாகவோ உபயோகப்பட்டு வருகிறது. இந்தியாவில் சோற்றுடன் கலந்துகொள்ள குழம்பு, ரஸம் முதலியவற்றைக் கூட்டிக்கொள்வதுபோல், அங்கு ஒயினை ஆகாரத்துடன் பருகுகின்றனர். ஒரு வாய் ஆகாரமும், ஒரு வாய் ஒயினும் ஐரோப்பியர்களுக்கு வழக்கமாக இருக்கிறது. இந்தியாவில் குடிக்கிற கள்ளுக்கும் ஆகாரத்திற்கும் சம்பந்தமேயில்லை. அதை வெறுப்பான காரியமாகவே கருதி வீட்டிற்கு வெளியில் பகிரங்கத்தை நாடாமல் இப்போது கலால் இலாக்கா கண்காணிப்பிலிருக்கும் கடைகளிலேயே ரகசியமாய் அநேகர் குடித்து வருகிறார்கள். "குடிகாரன்" என்ற சொல் மிக்க கேவலமாக மதிக்கப்படுகிறது. குடிகாரனுக்கா பெண்ணைக் கொடுப்பது என்ற எதிர்ப்பும் ஏற்படுகிறது.

குடும்ப நிர்வாகத்தில் நற்பெயர்.

ஒருவனுக்குத் தக்க வருமானம் வந்து கொண்டிருக்கையில், அவன் வீட்டு நிறைய ஜனங்கள் இருந்துகொண்டு புசிப்பர். இவ்வளவு செலவும் தன் தாய் தந்தையரின் பிரீதிக்காகவே செலவிடுவதாகக் குமாரன் எண்ணுவான். இவ்விதம் நடப்பதில் குமாரனுக்கு நல்ல பெயர் ஏற்படாது. தாய் தந்தையரோ பிறகு "எங்களுக்கா செலவிட்டாய்? ஊராருக்குச் செலவிட்டால் அது எங்களுக்குச் செய்ததாமா?" என்று மூஞ்சியிலே முறத்தினா விடிப்பார்கள். தின்று ஏப்பமிட்டவர்களோ அந்த சமயம் ஜாடையாக ஒதுங்கிவிடுவார்கள். கஷ்டப்பட்டுத் தேடிய பணத்தை இவ்விதம் பாழுக்குக் கொட்டிப் படியளந்துவிட்டுக் கடைசியில் தூற்றப்படுவதைவிட, தன் பெற்றோர்களுக்கு மாதம் இவ்வளவு ரூபாய் கொடுப்பதென்றும், அதைக்கொண்டு அவர்கள் தங்களுக்கு இஷ்டமானவர்களோடு சுகமாக இருந்துகொள்ளட்டுமென்றும் கூறிவிட்டுத் தான் வேறு ஊரில் வசித்துக்கொண்டால் எந்தப்பிடுங்கலும், பந்துக்களின் விரயச் செலவுகளும் தனக்கு நேரிடாமல், தன் கையில் பணம் சேர்ந்து பத்து வருஷங்களுக்குப்பின் ஒரு தனவானாகவும் விளங்கலாம். தாய் தந்தையருக்கு அனுப்பும் பணம் அவ்விருவருக்கு மட்டுமேதானென்றும், மற்றவர்களுக்குச் செலவிடுவதோ இல்லையோ அது அவர்களின் பிரியமென்றும், தன் கடமை தாய் தந்தையரைக் காப்பதோடு தீர்ந்ததென்றும் கண்டிப்பாய்த் தெரிவித்து விடவேண்டும். இவ்விதம் செய்தால் தான் "எனக்கா செலவிட்டாய்?" என்று தாய் தந்தையர் பிற்காலத்தில் கேட்க முடியாது. கொடுத்த எதற்கும் விவரமான கணக்கும் இருக்கவேண்டும். இவ்விதம் கண்டிப்பாயுள்ளவர்களே பிழைக்கத் தெரிந்தவர்கள்; திட்டுகள் எவரிடமும் வாங்காமல் தப்பித்துக் கொள்ளக்கூடியவர்கள். ஊரார் மெச்சுகிற பிள்ளைகளாகவும் விளங்குவார்கள். ஏமாறாதவனிடம் எல்லோருமே மதிப்பு வைத்து வணங்குவதும், இட்டு உபசரித்தவனையே திட்டுவதும் உலக வழக்கம். ஆதலின், இத்தகையோருக்கே நல்ல பெயர் ஏற்படும். அதற்கான கல்மனமும் இருக்கவேண்டும். இளகிய மனம் ஏமாறியே போகும். இவ்விதமின்றிக் களங்கமற்று நடந்துகொள்ளும் குமாரனுக்கு நாலு பக்கமும் திட்டுகள் கிடைப்பதுதான் லாபம். அவன் கையிலும் இரண்டு பணம் மிஞ்சாது. சம்பாதித்ததற்கும் செலவிட்டதற்கும் சரியாகித் தீரும். சம்பாத்தியகாலத்தில் கைச்செலவுக்கு அதிக வழி ஏற்படுத்திக் கொள்வதைவிட மௌடீகம் வேறில்லை. ஸம்பாத்திய வருமானம் என்றைக்குமே வந்துகொண்டிராது. குடும்ப நிர்வாகத்தில் எவ்வளவு உழைப்பினும் நற்பெயர் அருமை. ஆதலின், தர்ம நியாயமான ஒரு முன்னெச்சரிக்கை பெறவேண்டும்.

ஒரு பக்கம் திட்டு, ஒரு பக்கம் லட்டு, வேறொரு பக்கம் குட்டு, பிறகு மீண்டும் ஒட்டு, நல்ல சம்சாரக்கட்டு!

இல்வாழ்வில் மகளிரின் பணிவு.

ஆனந்த மயமாய் இல்வாழ்க்கை விளங்குவதற்கு அடக்கமும் பணிவும் உள்ளோராக அரிவையர் தங்களைத் திருத்திக்கொள்ளவேண்டும். அங்கனமணிகள் தமது உத்தம குணத்தாலும் விநயத்தாலும் பதியின் இல்லத்தில் தம்மால் ஆமளவும் அனைவரையும் அனுசரித்து ஒட்டி இசைந்து நடந்து, தமக்கும் ஒரு நற்பெயர்கொண்டு, தாங்கள் மனமகிழ்வுடனேயே இருப்பதாகத் தமது பெற்றோர் திருப்தியுறுமாறு அன்னோரது பெருங் கவலையையும் குறைத்துத் தாங்களும் க்ஷேமப்படப் பார்க்கவேண்டும். மாமி நாத்திகளைத் தாம் தமக்கையர்களைப்போலப் பாவித்துவிடின், துவேஷ உள்ளத்திற்கு அங்கு இடமிராது. அவர்களே வலிய சண்டை சச்சரவுக்கு வரினும், ஸம்சார நாடகத்திலே இது ஒரு சிறு நர்த்தனக்காட்சி போன்று கருதி, தங்களின் மனத்தை சாந்தப்படுத்திக் கோபத்திற்குப் பதிலாக சிரம் தாழ்த்தி வணங்கும் தன்மையையும், தான் தவறே செய்ததாக மற்றவர் கூறும் மொழியை அடக்கமாய் ஏற்றுக்கொள்ளுங் குணத்தையும் தன்னிலே தோன்ற வைத்துக்கொள்ளவேண்டும். அதுதான் வாழ்க்கையிலே பெரிய வெற்றியாகும். இங்ஙனம் வெற்றி படைத்து எல்லோருக்கும் நல்லவராக ஆன நாரீரத்நங்கள் பலருண்டு. அன்னோர் தங்களின் வாயைத் திறந்ததேயில்லை. எதிலும் வாய்பேசாத மௌனமே. எவரிடமும் குளிர்ந்த சொற்களிலேயே வசனித்து வாழ்ந்தனர். எதிர்த்துப் பேசும் சுபாவத்தை அவர்கள் முற்றிலும் வெறுத்தனர். எந்தக் கடின வேலைக்கும் அவர்கள் முணுமுணுத்திலர். எல்லா வேலைகளையும் தாங்களே ஏற்றுச் செய்து பெரியோர்களைத் திருப்திபட வைத்தனர். இவ்வாறெல்லாம் இணங்கி நடந்து இல்வாழ்வை இன்ப வாழ்வாகப் பரிமளிக்கச் செய்துவிட்டு, தங்களின் பாடுகளையும் கஷ்டங்களையும் ஒரு சிறு துளிக் கண்ணீரை வெளியில் விடுவதோடும் அடக்கி மூடி மறைத்து சமாளித்தவாறு, சகிப்பு முகமாய் நின்று நிர்வகித்து அனைவரையும் ஸந்தோஷிப்பிக்கச் செய்தனர். இதுதான் பெரிய தீரம், சிறந்த வீரம், மேலான சமர்த்து, நிகரற்ற பெண்மைக் குணமுமாகும்.

ஃ

பர்த்தாவின் இல்லத்திலே தங்களுக்கு உண்டாயிருக்கும் குறைகளை வனிதாமணிகள் மற்றவர்களிடம் ஒருபோதும் கூற

வொண்ணுது. தமது குறைகளைப் பிறர் அறிவதிலே தமக்குத்தான் கௌரவக் குறைவு. தமது அந்தரங்கத் தாழ்வுகளையும் ஹிம்ஸை களையும் மற்றவர் அறியாவாறு மூடி வைப்பதில்தான் மேன்மையிருக் கிறது. இதிலே சகிப்புடன் அடக்கிக் கொள்ளும் தீரத்துவமின் றிப் பேதையராய்ப் பிறரிடம் வாய்விட்டுச் சொல்லிக்கொள்வதில், அதைக் கேட்டவர்களோ உங்கள் மாமி ஞாத்திகளிடம் சென்று அன்னேரை நீங்கள் பழித்ததாகத் தெரிவித்துக் கலகச் சுவர் எழுப்பி விடுவார்கள். உங்களின் உத்தம குணத்தையும், மேன்மை யான பொறுமையையும், வாயின் அடக்கத்தையும் சோதிக்க, எவ் வளவோ திட்டுகளும் பழிப்புகளும் சுடு சொற்களும் பலரிடமிருந் தும் தோன்றிக்கொள்ளும். அவற்றை யெல்லாம் மனதாரச் சகித்து ஒரு சிறு கண்ணீர் மட்டும்விட்டு உடனே அதைத் துடைத்துக் கொண்டு, தெய்வத்தை நம்பியவர்களாக மாறி விடுவீர்களானுல், நீங் கள் எல்லோரானும் கொண்டாடக்கூடிய நற்குணச் செல்விகளாகி விடுவீர்கள். எல்லோருக்கும் இனியவளாக நடக்க முயல்வதில் தான் குடித்தன சாமர்த்தியம் அடங்கியிருக்கிறது. எவ்வளவுக்கு வாய்மூடி யிருக்கிறீர்களோ அவ்வளவுக்கு வீடும் நல்லதே. எவரை யும் அனுசரித்து அன்புடனிருத்தலில்தான் நற்பெயரும் அடங்கி யிருக்கிறது.

ஃ

மாமி மருமகளை ஹிம்ஸிப்பது எங்கும் கண்டதுதான். அந்தப் பரீக்ஷையில் பணிவுடன் ஒவ்வொரு பெண்ணும் மாமிக்கு அடங்கி டந்து தேறவேண்டும். இதுதான் குடித்தனத்தில் முதல் பரீக்ஷை. மாமியை எதிர்ப்பது குடித்தன ஒழுங்கல்ல; மாமியை எல்லா வகையிலும் திருப்தி செய்து மாமியைத் தன் தாயாகக் கருதி நடப்பதே பதிவிரதா தன்மையாகும். குடும்பம் சீர்பெற அதுவே வழி. தங்களுடைய பெற்ருேர்களையும், பந்துவர்க்கங்களையும் விட்டு விட்டுத் தத்தம் பதிகளையே நம்பிக் கணவனின் இல்லம் வரும் பெண்களை மாமிகள் துன்புறுத்துவது மஹா கொடிய பாபம்.

ஃ

உங்கள் மாமி வீட்டார் எத்தனைத் தீய குணமுள்ளவர்களா யிருந்தபோதிலும், நீங்கள் ஒரு நாளும் துஷ்டைகளாகக் கூடாது. நீங்கள் எப்பொழுதும் தாழ்ந்திருப்பது உங்களுடைய கடமை யாகும். அவர்கள் மரத்திர மப்படி இருக்கிருர்களே யென்று கேட் கும் பக்ஷத்தில், அவர்களும் அப்படி செய்யக் கூடாதுதான். ஆனுல், படிப்பில்லாமையாலும், புராதன மூட வழக்கத்தை அனு

"இனம்" என்ற வார்த்தைக்குக் கௌரவமானபிச்சை என்பது சரியான பொருளாகுமாம்.

சரித்தும் மாமி மருமகளைக் கொடுமைப்படுத்தி வருவது சாதாரண மாகி விட்டது. இவ்விதம் அடக்கி நடத்தாவிடில் புதுப் பெண்கள் கண்டபடி மீறிக்கெட்டுப் போவார்கள் என்று எண்ணியும் மாமிமார் கண்டிப்பாக இருக்கவேண்டியதும் அவசியமாய் விட்டது. சில பெண்கள் மாமிகளுடைய சிக்ஷை இல்லாமல் குடித்தனத்தின் ஒழுங்கு தப்பிக் கெட்டுவிட்ட சங்கதிகளும் உண்டு. ஆகவே, மாமியின் கண்டிப்பு முதலில் கஷ்டமாயிருந்தாலும் உங்களுக்கு அது நன்மையையே செய்யும். மாமி உங்களுக்கு ஒரு உபாத்தியாயருக்கு சமானம். உபாத்தியாயர் என்ன கொடுமைப் படுத்தினும் வணங்கி உட்பட்டு நடந்து அவரைக் கௌரவிப்பதுபோல், உங்கள் மாமியையும் உன்னதமாய்ப் பாராட்டி நடந்து கொள்ளுங்கள். மாமி கொடுமையாக நடந்தால், நீங்களும் அதற்குப் பதிலுக்குப் பதில் எதிர்த்து நடக்கலாமோ? நீங்கள் அப்படி மீறி நடப்பீர்களானால் உங்களின் படிப்பும் நாகரீகமும் பயனும் படாது; மேன்மையும் அடையாது. "தாழ்ந்து நிற்பவர் வாழ்ந்து நிற்பர்" என்பதுபோல, நீங்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது "கீழ்ப்படிவது இன்றியமையாத நற்குணம்" என்பதாம். வெள்ளத்தில் வணங்கின புல் பிழைக்கும்; வணங்காமல் உயர்ந்து நிற்கும் மரமோ வென்றால், சாய்ந்துவிடும். உங்கள் கணவர்களிடத்திலோ வென்றால் இதனிலும் அதிகமாய்க் கீழ்ப்படிய வேண்டியது முக்கிய தருமமாகும். அவர்களிடத்தில் பொய், புரளி, மோசம், வஞ்சனை முதலியவைகளைச்செய்யாமல் விலக்குவதும் கடமையாகும். நீங்கள் பொய் சொல்வதாக அவர்கள் அறிந்துவிட்டால், உங்களைப் பிறகு ஒருபோதும் நம்ப மாட்டார்கள். அவர்களுக்குத் தெரிந்தாலல்லவோ அப்படி நேரிடுமென்று நீங்கள் நினைக்கலாம். "கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில் வெளியாகும்" என்பது உண்மையான வசனம். எப்படியும் நீங்கள் அகப்படுவீர்கள்; பிறகு நீங்கள் மிரள மிரள கண்ணை விழிக்கவேண்டிவரும். பொய்யைச் சாதிப்பவர்கள் அணுவளவு உண்மையுடன் பல பொய்களைக் கலந்துவிடுவர். பலவகையான பொய்களிலும், எள்ளளவு உண்மை கலந்த பொய்யே மிகப் பொல்லாத பொய்யாகும். பொய் உரைப்பது தெய்வத்திற்குத் துணிந்து, மானிடருக்கு அஞ்சுவது போன்றதாம். ஏனெனில், பொய்யர்கள் தற்கால சுகத்தை நாடி, மனிதனுடைய இஷ்டத்தைச் சம்பாதிக்க, ஸர்வ வியாபியான பகவானுடைய கட்டளையை மறந்துவிடுகிறார்கள்.

ஃ

நீங்கள் உங்கள் கணவனிடத்தில் உண்மையோடு நடப்பதுமல்லாமல், பயபக்தி விசுவாஸத்தோடும் நடக்கவேண்டும். உங்கள் கண

முதலில் கடன் வாங்கும்போது கெஞ்சுவது. பிறகோ கோர்ட்டுக்குப் போய் வாங்கிக்கொள் என்று மீறி மிஞ்சுவது.

வர்கள் உங்களைப் பார்க்கிலும் வித்தையிலும் புத்தியிலும் வயதிலும் பலமடங்கு பெரியவர்கள். அவர்களை அலக்ஷியம் செய்யக்கூடாது. உங்களுடைய ஸகலவித சுகமும் அவர்களாலேயாம். அவர்களுடைய சுகமும் உங்களாலேயே என்றாலும், அவர்களுடைய கௌரவமும் யோக்கியதையும் வெகு சிறந்ததென்பதை நீங்கள் மனத்திற் கொள்ளவேண்டும். அவர்களுக்கு எதில் இஷ்டமோ அதையே நீங்களும் அபேக்ஷிக்கவேண்டும். அவர்களுக்கு எதில் இஷ்டமில்லையோ அதிலிருந்து உங்களுடைய இஷ்டத்தையும் விலக்கிக்கொள்ளவேண்டும். இது குடும்பவாழ்வில் ஒரு பெரிய சங்கதி. எப்படியெனில், அவர்களுக்கு மனமில்லாததில் உங்களுக்கு விருப்பமிருக்குமானால், நீங்கள் உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முயல்வீர்கள். அதனால் உங்கள் கணவர்களுக்கு உங்களிடத்தில் வெறுப்புண்டாகும். இன்னாரிடத்தில் அதிகப் பேச்சுவார்த்தைகள் வைத்துக்கொள்ள வேண்டாமென்று உங்கள் பர்த்தா கட்டளையிடுகையில், அதை மீறி நடப்பது பழிபாவங்கட்கு இடமாகும். அதிலிருந்து உங்கள் கணவர்களுக்கும் உங்களுக்கும் மனக்கலக்கமுண்டாகி வீட்டில் எப்போதும் சண்டை சச்சரவு நேரிடும். ஒரு சிறு சந்தேகம் ஒரு குடும்பத்தைக் குட்டிச்சுவராக்கப் போதுமானது. ஒரு சிறு வெறுப்பும் பேதசிந்தனையும் எத்துணையோ பொல்லாங்கை விளைத்துவிடும்.

ஃ

நீங்கள் உங்களுடைய அடுத்த வீட்டுக்காரியைப்போல 50-ரூபாய் புடவையைத் தினப்படி உடுத்தவும், 5-ரூபாயில் ரவிக்கையைத் தரிக்கவும் வேணுமென்று ஆசைப்படாதீர்கள். உங்கள் புருஷர்களுடைய ஸ்திதிக்குத் தக்கபடி உங்களின் ஆடையாபரணங்கள் இருக்கவேண்டுமேயல்லாமல், அயல்வீட்டுக்காரிக்குச் சமமாயிருக்க விரும்புவது "புலியைப் பார்த்துப் பூனை சூடிக்கொண்டதுபோல்" ஆகும். இதில் இன்னொரு ரகசியமும் உண்டு. நீங்கள் எந்த சமயம் கணவனை எதிர்க்க நினைக்கிறீர்களோ, அதே சமயத்தில்தான் அவர் உங்களுக்கு நல்லது செய்யவேண்டுமென்றும், ஒரு புது நகை வாங்கித் தரவேண்டுமென்றும், உங்கள்மீது கொஞ்சம் பொன் சொத்து இருக்கும்படி பார்க்கவேண்டுமென்றும் நல்ல நினைவுகள் நினைக்கிறாரென்பதை நீங்கள் நன்குணரவேண்டும். நீங்கள் சிடுசிடுக்க எண்ணுகிற தருணத்தில்தான் அவர் பாங்கியில் அடகிவிருக்கிற நகையை இன்று கைவசம் வந்திருக்கிற பணத்தைக்கொண்டு திருப்பி உங்களுக்குப் போடவேண்டுமென்றும் எண்ணுகிறவரா யிருக்கிறார். அத்தகைய நல்ல சந்தர்ப்பத்தை உங்களுடைய ஸந்தோஷமான முகத்

துரதிர்ஷ்டசாலிகளுக்குத் தாங்கள் செய்யக்கூடிய வேலைகளோடு போய்விடாது. தங்களால் முடியாத வேலைகளின் பாரத்தையும் அவர்கள் வகிக்கத்தான் வேண்டிவரும்.

தினாலும், இனிய மொழிகளாலும் உங்களுக்குப் பயன்படும்படி செய்துகொள்வதல்லவோ புத்திசாலித்தனமாகும்? அவ்விதமின்றி, உங்களைப்பற்றி நல்லது செய்ய நினைக்கிற சமயத்தில் நீங்கள் எதிர்த்து மனத்தைப் புண்ணுக்கி விடுவதிலே, அவர் மனம் வெறுத்து, இவளுக்காவது நகை செய்யவாவது, பாங்கியிலிருந்து நகையைத் திருப்பவாவது, எதுவுமே வேண்டாமென்றும், இந்தத் துஷ்டை வெறுங் கழுத்துடனேயே கிடக்கட்டுமென்றும் எண்ணி விடுகிறார். பிறகு அவர் கையிலிருந்த பணத்திற்கு ஏதாவது செலவுகள் வந்து தொலைந்து, எந்த நகையுமே செய்யாமல், பாங்கியிலுள்ள கடனையும் தீர்க்காமல் சின்னபின்னமாகிவிட, நீங்களோ உங்களின் எதிர்க்கும் ஈன புத்தியால் என்றைக்கும் வெறுங் கழுத்துக்காரிகளாகவே கிடந்து, வீட்டுக்கோ உங்களுக்கோ நாலு நல்ல நகைகள் இல்லாமல், அந்த நகைச் சோத்தே கிடைக்காமல், சேரவந்த லக்ஷ்மியையும் உங்களின் எதிர்ப்புக் குணத்தால் கெடுத்துக்கோண்டு சீரழியவேண்டி வருகிறது. ஆகவே, இதை மற்றொருதரம் வாசித்து உங்களின் புத்தியைத் திருத்திக்கொண்டு, நாலு நகை காசுகள் சேரும்படியான நற்குணத்தை வகித்து நடவுங்கள். எவ்வளவு சொற்ப நகையிலும் வஸ்திரங்களிலும் நீங்கள் திருப்திபட்டு மனோரம்மியமான வாழ்வு வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்.

(மற்றதில் முடிவு.)

மனதின் சுறுசுறுப்பும் மந்தமும்.

சங்கதிகள் ஒன்றுமில்லாதிருந்தும் கடிதம் என ஒன்று எழுத ஆரம்பித்துவிடில், நாலு சங்கதிகளும் திரண்டுவந்து காகிதம் பல பக்கங்களுக்குச் சென்று பெருகி விடுகிறது. எத்தனையோ சங்கதிகளை நினைத்துக்கொண்டிருந்தும் கடிதம் எழுதப்புகும் சமயம் ஒரு சங்கதியும் எழுதுவதற்குச் சரிப்பட்டு வராமலும், ஞாபகத்திற்கே செவ்வையாகத் தோன்றாமலும் ஆகி நாலு வரிகளில் சுருக்கி முடிக்கும்படியும் சில சமயங்களில் நேர்கிறது. அப்பொழுதுதான் மனிதன் தன் சக்தியின் பலஹீனத்தை யுணர்ந்து, எல்லாம் தெய்வ சக்தியின் துணைகொண்டே நடத்தப்படுகிறதென்பதை அறிய ஆரம்பிக்கிறான். ஒரு சிறு கடிதம் எழுதுதற்குக்கூட தெய்வத்தின் தூண்டுதல் தேவையாகிறது.

மகாத்மாகாந்தியிடம் மயங்கிப்போய் அந்த நேரத்தில் தங்களிடமிருந்த நகை முதலியவற்றைக் கொடுத்துவிட்டுப் பிறகு அதற்கு எவ்வித புகழ்ச்சியும் காணுததால் ஏன் தந்தோமென்று ஏங்கினவர்களும், ஏன் தந்தாயென்று வீட்டில் திட்டுகள் வாங்கியவர்களும் சிலர் இல்லாமலில்லை.



(டிக்கன்ஸ் என்பவரின் மொழிகள்.)

1. Scattered wits take a long time picking up.

சிதைந்துள்ள அறிவைக் கூட்டுவதற்கு வெகு நேரம் செல்லும்.

2. We measure man's life by years, and it is a solemn knell that warns us. We have passed another of the landmarks which stand between us and the grave.

மனிதனுடைய வாழ்நாளை வருடங்களால் கணக்கிடுகிறோம். அது நம்முடைய மயானத்திற்கும் நமக்கும் நடுவிலுள்ள மற்றொரு எல்லைக்கல்லைக் கடந்துவிட்டதை எச்சரிக்கை செய்யும் பயங்கரமான சாவுமணியின் ஓசை.

3. Those who sneer habitually at human nature, and affect to despise it, are among its worst and least pleasant samples.

மனிதனுடைய இயற்கையான குணத்தைக்கண்டு, வேண்டுமென்று கேளிக்கை செய்வதோடு அதை அசட்டை செய்பவர்கள் மனிதர்களுள் மிகக் கேவலமும், சந்தோஷமற்றவர்களுமாவர்.

4. Anything that makes a noise is satisfactory to a crowd.

எது அதிகமாகச் சந்தடி செய்கிறதோ, அது கும்பலுக்குத் திருப்தியைத் தருகிறது.

5. No man who was not a true gentleman at heart, ever was, since the world began, was not a true gentleman in manner.

உண்மையான இருதயம் இல்லாத ஒருவன் இந்த உலகம் உண்டானது முதல் நடத்தையிலும் உண்மையானவனாக இருந்திருக்கமாட்டான்.

6. It is not possible to know how far the influence of any amiable honest-hearted duty doing man flies out into the world.

இணக்கத்துடன் யோக்கியதையோடு தனக்குரிய வேலையைச் செய்துகொண்டிருக்கும் மனிதனுடைய வாக்கு இவ்வுலகில் எவ்வளவு தூரம் பறந்து செல்லும் என்பதைத் தெரிந்துகொள்வது முடியாத காரியம்.

7. With regard to what you should do do what your good sence and feeling would prompt.

உன்னுடைய நல்ல புத்தியும் எண்ணமும் தூண்டுவதுபோல் செய்வதே, நீ செய்யவேண்டிய காரியம்.

8. Ride on over all obstacles and win the race.

எல்லா துன்பங்களையும் கடந்து சவாரி செய்து பந்தயத்தைச் செயிப்பாயாக.

மனவெறுப்பு ஒருவர்மீது ஏற்பட்டுவிட்டால் அவர்கள் செய்வதவ்வளவும் பிசகாகவே தோன்றும். அதற்குத் தகுந்தபடி தூண்டுகிறவர்களும் துணைக்கு நெருங்குவார்கள்.

9. Nothing is eternal in this world.

இவ்வுலகத்தில் நிலையான வஸ்து எதுவுமில்லை.

10. If you have friends in adversity stand by them.

ஏழ்மையான நிலையையுடைய சிநேகர்கள் உனக்கு இருப்பார்களானால், அவர்களுக்குத் துணையாக நிற்பாய்.

11. To the young this is a world of action, not for moping and droning in.

வாலிபர்களுக்கு வேலைகள்நிறைந்த உலகம் இது. தூங்குமூஞ்சியா யிருப்பதற்கும், சோம்பித் திரிவதற்குமன்று.

II

(லாங்பெல்லோவின் மொழிகள்.)

12. O World! so few the years we live. Would that the life which thou dost give weer-life indeed.

ஹா! உலகமே! மிகச் சிறிதான வருடங்கள்தான் நாம் ஜீவித்திருக்கிறோம். நீ கொடுக்கும் வாழ்க்கையானது உண்மையில் வாழ்க்கைதானா?

13. Life is one and universal; its forms many and individual.

உயிர் என்பது ஒன்றே எங்கும் பரந்திருக்கிறது. அதனுடைய வடிவங்கள் பலவிதமாயும், அவரவர்களுக்கு ஏற்றபடியும் உள்ளன.

14. Glorious indeed is the world of God around us; but more glorious the world of God within us.

நம்மைச் சுற்றியுள்ள கடவுளின் சிருஷ்டி உலகம் பெருமையுடையதாயிருக்கிறது. நம்முள் இருக்கும் கடவுளின் உலகம் அதைவிட மிகவும் பெருமையுடையது.

P. G. குலசேகரம்

மேல்நாட்டில் விவாக ரத்துகள்!

லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையில் எந்தத் தேதிப் பத்திரிகையைக் கையில் எடுத்தாலும், விவாக ரத்துக் கோர்ட்டின் நடவடிக்கைகள் விசித்திரமாக இருக்கின்றன. நாள்தோறும் பல ஸ்திரீகள் கோர்ட்டுகளில் ஆஜராகி, ஒவ்வொருவரும் தனக்கு விவாகமாகி ஒரு வருஷம் அல்லது ஆறுமாதமே யாயிற்றென்றும், தன்னுடைய புருஷன் தன்னைக் கைவிட்டு வேறொருத்தியைச் சேர்த்துக்கொண்டு விட்டதாகவும் புகார் செய்கிறார்கள். புருஷர்களிலும் அநேகர் இதே மாதிரி தங்களுடைய மனைவிகளின்மீது புகார்செய்கிறார்கள். இதற்குக் காரணம் ஐரோப்பிய நாகரீகக்கோணலே. அந்த நாகரீகத்தின் பலனாக கற்புக்கு மகிமை குறைவுபட்டுவிட்டதனால், சில ஸ்திரீகள் விபசார வழியிலும் சென்று கெடுகிறார்கள். பழகிப்போன தீமை ஒரு தீமையாகப்படுவதில்லை.

லோபி லோகநாதன்

(ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள்.)

லோபி லோகநாதனைப் பற்றி எந்த ஊரிலும் விளம்பரம் செய்யாமலேயே தெரியும். அவருடைய பிரதாபத்தைப் பற்றிக் கூறவே வேண்டாம். தினந்தோறும் அவரிடம் ஒரு நிமிஷநேரம் பழகினலும் போதும்; அவருடைய தயாளத் தன்மை உடனே விளங்கிவிடும்.

ஃ

பெரிய மனிதராயிற்றே என்று யாரேனும் யாசகத்திற்கு வந்து, "ஐயா! என் பெண்ணுக்கு விவாக வயது வந்துவிட்டது. அடியேன் பரம ஏழை; ஏதேனும் உதவி புரிய வேண்டும்" என்றால், உடனே லோகநாதன் வெகு சாந்தமாக "ஐயா! இதற்கு ஏன் பயப்படவேண்டும்: சாரதா சட்டத்தை அனுஷ்டித்துப் பெண்ணைப் படிக்கச் செய்யுங்கள்" என்று உபன்யாஸம் செய்து அனுப்பி விடுவார்.

ஃ

பின்னும் சிலர் "அதிக நோயாயிருக்கிறது" என்று பண உதவியைக் கேட்டால், உடனே லோகநாதன் "ஐயா! அந்த நோயாளி பிழைப்பாரா! மாட்டாரா! அவருடைய ஜாதகத்தை ஜோஸியருக்குக் காட்டித் தெரிந்து கொண்டபிறகு பணத்தைச் செலவிடுங்கள்; வியர்த்தம் செய்த பிறகு ஆள் போய்விடப் போகிறான்" என்று கூறி விடுவார்.

ஃ

மேலும் சிலர், "உடுக்க உடைக்கும் வீட்டு வசதிக்கும் யாசித்தால், 'ஐயா! சொந்த வீடு வைத்துக் கொண்டு படுகிறபாடு போதும். தினம் விடிந்தால் எழுந்தால் வரி கட்டவும், ரிப்பேர் செய்யவும் போதும் என்றாய் விடுகிறது. உங்களுக்கு அந்தத் தொல்லை எதற்கு? தினம் ஒரு சத்திரத்திலும், விவாக வீட்டிலும் காலத்தை யோட்டி விடுங்கள். எங்கெங்கே கருமாதிகள், சாவு, என்பதை விசாரித்துத் துணிதானத்திற்கும், முதல் பந்திக்கும் சென்று விடுங்கள்" என்பார்.

ஃ

இவ்விதமே இவருடைய லீலைகள் வெகு வெகு அற்புதமாக விருக்கும். அவருடைய மனைவியோ மகா பரிசுத்தமன முடையவள். தர்ம சிந்தை மிக்கவள். இந்த லோபியிடம் அகப்பட்டுக் கொண்டதால் அவளுக்கு வயிறு நிறையச் சோறுகூடக் கிடைப்பது அரிது. தன் வயிறு காய்ந்தாலும் பரவாயில்லை. பிறருக்கு உதவாமல் லோபித்தனம் செய்கிறாரே என்ற வருத்தத்தால் எத்தனையோ விதத்தில் தன் புருஷனுக்குச் சொல்

எவர்களை முக்கியமானவர்களென்று நினைத்தார்களோ அவர்களையே பிற்காலத்தில் தாழ்த்திப் பேசுகிறார்கள். இன்று கிடைத்த புகழ்ச்சி நாளை வரை நிச்சயமுள்ளதல்ல.

விப் பார்த்தாள். ஒன்றும் பலிக்க வில்லை. சாலஞு கையைவிட்டுப் பெயருகிற வழி இல்லை.

ஃ

லோபியோ அந்த அம்மாளை யே வைதும், மிரட்டுவதும், உபத்திர விப்பதுமாக ஆய்விட்டார். அவ் வம்மையாருக்கு ஒரு பெரிய கட்டளை யும் இட்டார். அதாவது "என்னை ஏழை ஜனங்கள் உபத்திரவிப்பது பெருஞ் சங்கடமாயிருக்கிறது. ஆகையால் என்னிடம் வருவோரை நான் உள்ளே போய் அம்மாளைக் கேளு என்று சொல்லிவிடுகிறேன். இங்கு வந்தால் அடுப்பில் கரண்டி யைக் காய்ச்சி நன்ருக இழுத்துவிடு. இதுதான் என் பர்த்தாவின்ஆக்கினை என்று கூறிவிடு. இப்படி இரண்டு நாள் செய்தால் மூன்ருவதுநாள் எந் தப் பயலும் வரமாட்டான். இதற் குச் சாக்ஷியா சம்மனு? பயப்படாமல் செய்துவிடு. இல்லையேல் உன்னை வீட்டிலிருந்து அபாண்டப் பழியோடு விரட்டிவிடுவேன்." என்று கடின மாகக் கூறிவிட்டார்.

ஃ

அந்த அம்மாள் பல முறையில் "இச்செய்கை மகா கொடியது - பாப கரமானது"—என்றுகூறியும் பலிக்க வில்லை. அவளுக்குப் பெற்ருேர் யாருமில்லை. 'அபாண்டப் பழியோடு தள்ளிவிட்டால், தான் எங்கு செல் வது? எப்படிப் பிழைப்பது? பழி யுடன் உலகில் எவ்விதம் வாழமுடி யும்?" என்று வெகு விசனமடைந்து யோசித்தாள். கடவுள் அவளுக் கோர் புதிய யோசனையையும் சக்தி யையும் தைரியத்தையும் கொடுத்தார். உடனே அவள் தன் மனதிற்குள் ஓர் தீர்மானத்தைச் செய்துகொண்டாள்.

ஃ

கணவன் மனங் கோணுமல் நடப்பதாக வாக்களித்து விட்டாள். மறுநாள் முதல் லோபிநாதன் தன்னி டம் வரும் ஏழைகளை எல்லாம் "உள்ளே போங்கள் என் மனைவி கொடுப்பாள்" என்று கூறி யனுப்பி விட்டான். அந்த உத்தமியிடம் எல் லோரும் வந்து சேர்ந்தார்கள். இவர்க ளெல்லாம் உள்ளே சென்றதும் செட்டியார் வேறுவழியாக உள்ளே சென்று எட்டிப் பார்ப்பார். நீளமான கரண்டி அடுப்பில் காய்ந்துகொண்டு இருப்பதைப் பார்த்துப் பரம சந்தோ ஷத்துடன் வெளியே சென்று விடு வார்.

ஃ

அந்த உத்தமி என்ன செய்தாள் என்று நினைக்கிறீர்கள்? அங்கு வந்த பிக்ஷுகர்களை நமஸ்காரம் செய்துவிட் டுத் தன் கழுத்தில் கால்பவுன்கள் கொண்ட ஒரு காசுமாலையைப் போட் டுக் கொண்டிருந்தாள். அதில் ஒரு காசை எடுத்து அவர்களுக்குக் கொடுத்து விட்டு, "ஐயா! இதை வெளியில் சொல்லாதீர்கள். நீங்கள் போகும்போது ஐயோ! அப்பா! பாவி! படுபாவி! சூடுபோட்டு விட்டாளே, நாசமாய்ப் போக" என்று என்பர்த்தா வின் காதில் கேட்கும்படியாக அலறிக் கொண்டே போங்கள் என்று கூறி விட்டாள். ஃ

ஒரு பெண்மணியை மனைவியாய் அடைவதற்குள் எத்தனையோ பெயர்க ளுக்கு சிரங்குனிந்து வணங்கவேண்டியிருக்கிறது. பெண் வீட்டைச் சேர்ந்த வர்களென்று நடுவில் வந்து நுழைவோருக்கெல்லாம் பலகாரம், காபி தாம் பூலம் 'சப்ளை' செய்யும்படியாகி விடுகிறது.

பிக்ஷுகர்களும் அந்த அம்மாளின் உத்தம குணத்திற்கு மெச்சி அளப்பரிய சந்தோஷ மடைந்து அவள் தெரிவித்தவாறே "ஐயோ' யப்பா!" என்று பெரிதாக அலறிக்கொண்டே சென்றூர்கள். இந்தக் குரல் காதில் விழுந்ததும் செட்டியாருக்கு உண்டாகும் சந்தோஷம் தாங்கமுடியாது. மனைவியைத் தட்டிக்கொடுப்பார். "பலே" என்பார்.

ஃ

இவ்விதமே ஒரு மாதகாலம் நடைபெற்றது. ஒருதினம் செட்டியாரின் மனைவி சமயம் பார்த்திருந்தாள். செட்டியார் தாம்பூல சகிதம் உட்கார்ந்திருக்கையில் அந்த அம்மாள் "ஐயோ! நாதா! மோசம் வந்துவிட்டதே; நம் குடி முழுகிப்போய் விட்டது. நீங்களும் சற்றும் யோசனையின்றிச் சொல்லிவிட்டீர்கள்; நானும் அப்படியே செய்துவிட்டேன். அது பெரிய விபரீதமாக முடிந்து விட்டதே. நான் இன்று கோவிலுக்குப் போய்வந்தேன். அங்கு ஒரு பயங்கர விஷயத்தைக் கேள்விப் பட்டேன். நம்மால் சூடுபோட்டு அனுப்பப்பட்ட பிச்சைக்காரர்கள் எல்லாம் ஒன்று கூடிச் சங்கம் ஸ்தாபித்து சபை கூட்டி கீழ்க்கண்டபடி தீர்மானித்து விட்டார்களாம்.

(1) நம்மை அநியாயமாய், வஞ்சகமாய் உள்ளே யனுப்பி மனைவி மூலம் சூடுபோட்டு வாட்டியது மோசத்திலும் மோசம்.

(2) பிச்சை இல்லை என்று சொல்லாமல் இவ்விதம் செய்த அந்தச் செட்டியாரை நாம் சும்மாவிடக் கூடாது.

(3) ஒன்று அவரையே கொலை செய்து விடவேண்டும். அல்லது அவர் மனைவியைத் தூக்கிக்கொண்டு போய்ப் பெரிய திருடனுக்கு விற்று விடவேண்டும். இல்லையேல் தீவட்டிக்கொள்ளை யடிக்கவேண்டும். அல்லது அவர் கடைக்கும் வீட்டிற்கும் நெருப்புவைத்து விடவேண்டும். இந்தத் தீர்மானங்களில் எதையேனும் செய்தால் தான் நம் மனம் சாந்தியடையும்.

(4) நம்மைச் செய்த மோசத்திற்குச் சாக்ஷி இல்லாததால் இதை நியாய வழியில் ஒன்றும் செய்ய முடியாது. நியாயத்தில் காரியமும் ஆகாது. ஆதலால் உடனே கிளம்புவோம்.

ஃ

நான் கோயிலில் இருக்கும் போது என்னிடம் சூடு பெற்ற இருவர் வந்து என்னிடமே நேரில் தெரிவித்தார்கள். ஐயோ! என்ன செய்வது? ஆபத்து வந்து விட்டதே! என்று வெகுவாய்க் கதறிக்கொண்டு அலறினள்.

இந்தப் பயங்கரமான செய்தியைக்கேட்ட செட்டியார் மிக்க மன அதிர்ச்சி யடைந்து "ஐயோ இப்படியா முடிந்தது! இதென்ன அநியாயம்! அடி, இந்த ஆபத்தை எவ்விதம் தடுப்பது? போலீஸில்தெரிவித்து விடலாமா?" என்றூர்.

மனைவி:—ஐயோ! அதில் உபயோகமில்லை. இத்தனைபேரும் கூடிக் கடையில் நெருப்புவைத்து விட்டால்

தான் நடு இரவில் புசிப்பதற்கு வாங்கிவந்த பக்ஷணம் அந்த இரவில் உண்ணத் தவறிவிடின், மறுநாட்காலையில் அதைக் குழந்தைகள் கண்டு சந்தோஷமாய்ப் பங்கிட்டுக்கொள்ளும்போது, தான் அதை சந்தோஷமாய்ப் பார்க்கத் தோன்றுமேயன்றி அதைப் பிடுங்கிக்கொள்ள முடியாது.

எத்தனையோ லக்ஷத்திற்கு நஷ்டமாகி விடும். என்னைக்கொண்டுபோய் விட்டால் குடியே முழுகிவிடும். இவர்களைப் போலீஸ் ஒன்றும் செய்யமுடியாது. நாம் செய்தது அக்கிரமம். ஒருகால் போலீஸாரே இவ்வித அக்கிரமத்திற்கு நம்மைத் தண்டித்தாலும் தண்டிக்கலாம். ஆதலால், நாம் சுகமாகத் தப்பவேண்டுமாயின் ஒரே ஒரு வழியைத்தான் கடவுள் என் மனத்தில் காட்டுகிறார்.

செட்டியார்:—அதென்ன வழியடி? பணம் அதிகம் செலவாகி விடுமோ?

மனைவி:—ஸதா அவர்கள் நம் வீட்டைப் பார்வையிட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஆதலால் கீழ்வருமாறு வாசலில் ஒரு போர்டு மாட்டி விடுங்கள். அது அவர்களுக்கு அறிக்யாகிவிடும். அதாவது, "இன்று முதல், தினமும் காலை 8-மணியிலிருந்து 10-மணி வரையில் சகலமான பிச்சைக்காரர்களுக்கும் இவ்விடத்தில் செட்டியாரால் தருமமாக அரிசியோ, காசோ, வழங்கப்படும். பத்துமணிக்கு மேற்பட்டால் வழங்கமுடியாது." என்று எழுதி மாட்டி விட்டால் அவர்களுக்குத் திருப்தி யாகிவிடும். நீங்கள் மட்டும் வீதியில் தலை காட்டவேண்டாம். நானே பிச்சை போடுகிறேன். வந்தவர்களில் யார் சூடு பெற்றவர்கள் என்பது எனக்குத் தெரியுமாதலால் நானே அவர்களைச் சமாதானம் செய்து விடுகிறேன். இப்படிச் சில நாள் செய்தால் அவர்கள் கோபம் தணிந்துவிடும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்" என்றாள்.

ஃ

இதைக்கேட்ட செட்டியாருக்கு பணச் செலவுபற்றி வருத்த மிருப்பினும், பயங்கரச் செய்கையிலிருந்து தப்புவதை உத்தேசித்து அவர் இசைந்து விட்டார். போர்டும் மாட்டப்பட்டது. தினம் காலை 8-மணி முதல் 10-மணி வரையில் வரும் கூட்டமும் பிச்சையிடும் உற்சாகமும் சொல்லமுடியாது. அந்த அம்மாளின் மனங் குளிர்ந்தது. இவ்வேழைகளின் நிலைமையை நேரில் தினம் கண்ட செட்டியாரின் மனமே இளகியது. "இன்னும் ஒரு பிடி அரிசி போடு" என்று ஆக்ஞை செய்யத் தொடங்கினார். "இனி பயமில்லையே! முன் சொன்ன பயங்கரச்செய்கைமறைந்து விடுமா?" என்ற வார்த்தையை அடிக்கடி மனைவியிடம் கேட்டுக்கொண்டே இருப்பார். செட்டியாருக்கு இந்தப் புத்தி எப்படி வந்தது என்று உலகமே வியந்தது.

கணவனின் நற்பெயர்
மனைவியின் கையில்
இருக்கிறது.

ஏகபுத்திர பாக்கியம் எவ்வளவோ சௌகரியமுள்ளது. சொத்துக்கள் சிதறிப்போகாமல் ஒரே குமாரனைப்போய்ச் சேருகிறது. ஆனால், அந்த ஏக குமாரன் தவறிப்போய்த் துக்கிப்போரைக் காண்கையில் ஒன்றுக்கு இரு குமாரர்களாக இருப்பதே உத்தமம் என்று தோன்றுகிறது. இது நாமே தேடி வைத்துக்கொள்ளும் சங்கதியல்ல.

"அவரோ—வணங்கிய உள்ளம், பயந்த பான்மை, பணிந்த நடை, உயர்ந்த நோக்கு, உத்தம சீலர், விவேகசாலி, பண்டை நாளினர், வெள்ளை மனத்தவர், கபடமற்றவர்."

தூரத்திலிருந்தால் மகிமை!

"அப்பா, தாமோதரா! இனி எல்லாவற்றிற்கும் உன்னையே நம்பியிருக்கிறேன். எனது இரு கண்களைக் கடவுள் அபகரிப்பினும் உனது கண்களைக்கொண்டு எல்லாம் சரிவர நடக்குமென்று உறுதியுடனிருக்கிறேன். இதுகாறும் உன்னை குமாஸ்தாவாக வெண்ணி நடத்தவில்லை. இதை நீ நன்குணர்வாய்" என்று சிறிது வருந்திய முகத்துடன் கிருஷ்ணப்பர் என்ற வியாபாரி சொன்னார். அப்பொழுதுதான் கிருஷ்ணப்பர் திருப்பதியிலிருந்து திரும்பி வந்தார். மலையேறி இறங்குகையில் எக்காரணத்தாலோ அவரது இரு கண்களும் குருடாகிவிட்டன. மறுபடியும் மலையேறி சில நாட்களிருந்துவிட்டு ஏராளமான திரவியத்தைக் கோயிலுக்கு வாரி யிறைத்தார். ஒன்றும் பயன் படாததால் திரும்பி வந்து சேர்ந்தார்.

ஃ

தாமோதரன் அவ்வார்த்தைகளைக் கேட்டதும் அடக்கமுடியாத துக்கத்தால் கேவிக்கேவி யழுதான். கிருஷ்ணப்பர் அவனைத் தேற்றுவதே கஷ்டமாகிவிட்டது. சிறிதுநேரம் சென்றபின் "எஜமானரே, என்னை எட்டாவது வயதுமுதல் வளர்த்து வந்து, பசியைப் போக்கடித்து, அந்தகாரமான இருளினால் சூழப்பட்டிருந்த என்னை சூரிய வெளிச்சத்திற்குக் கொணர்ந்த பிதாவே, என்னைத் தாங்கள் அவசியம் நம்பலாம். கடவுள் சாக்ஷியாகச் சொல்லுகிறேன். என் உயிரிருக்கும் வரையில் உங்களைக் கைவிடமாட்டேன். இந்தப் பதினைந்து வருடங்களாக எங்ஙனமிருந்தேனோ, அங்ஙனமே இனியுமிருப்பேனென்பதை உறுதியாகச் சொல்லுவேன்" என்று தெரிவித்தான்.

ஃ

தாமோதரன் கிருஷ்ணப்பர் கடைக்கு முதலில் காகிதங்களை வரிசையாக வைக்கும் தொழிலில் வந்தவன். அவனுக்குத் தகப்பனார் வெகு இளம் வயதிலேயே இறந்துவிட்டார். தாயாரே பாடுபட்டு அவனை வளர்த்து வந்தாள். எட்டு வயதானதும் கஷ்டப்பட்டு கிருஷ்ணப்பர் கடையில் கொண்டுவந்து சேர்த்தாள். சிறிது சிறிதாக சம்பளம் உயர்ந்தது. கிருஷ்ணப்பர் அன்னிய நாட்டுத் துணிகளும், இதர சாமான்களும் வியாபாரம் செய்பவர். அதனால் வெகு சீக்கிரத்தில் லக்ஷம், லக்ஷமாகச் சேர்த்துவிட்டார். அவர் அதிகம் படிக்கவேயில்லை. ஆங்கிலம் வெகு நாட்கள் வரையில் தெரியாது. ஏராளமான அந்தஸ்து வந்ததும் அன்னியநாட்டு வர்த்தகர்களும், உள்நாட்டிலுள்ள பெரிய மனிதர்களும் அவரைப் பேட்

ஒருவர் கூற்று:—"எனக்கென்னவோ அவன் விஷயத்தில் சற்றும் பிடிக்கவில்லை. எனக்கு இஷ்டமில்லாத சங்கதியில் ஆயிரம் ரூபாய் வருமானம் இருப்பினும் அதை இழந்துவிட என்றும் தயார். இது என் இயற்கை."

டி காண வருவது வழக்கம். அதனால் கஷ்டப்பட்டு ஹிந்தியும் ஆங்கிலமும் கற்றுக்கொண்டார். மேலும், கிருஷ்ணப்பர் பணத்தை வீணாகச் சேர்த்து வைக்கவில்லை; மிகவும் எளிய வாழ்வே நடத்திவந்தார். அனேக தர்ம காரியங்களுக்குச் சில வழித்தார். பலவிடங்களில் குழாய்கள் வைத்தார். அவருக்கு ஒரே பெண் இருந்தது. அது பிறந்த தினத்தன்று ஆயிரம் ரூபாய்க்கு வியாபாரமானதால் அவளுக்கு பாக்கிய லக்ஷ்மி என்ற பெயர் இட்டார். இக்கதை ஆரம்பிக்கும் தருணம் அவளுக்குப் பதினைந்து வயது. கிருஷ்ணப்பருக்குத் தனது பெண் தற்காலப் பெண்களைப்போல் நன்றாகப் படிக்க வேணுமென்று ஆசை. அவரது பிரியப்படியே, பாக்கியலக்ஷ்மி சங்கீதம், ஹிந்தி, சம்ஸ்கிருதம், ஆங்கிலம் அனைத்தும் கற்றுக்கொண்டாள்.

ஃ

கிருஷ்ணப்பருக்கு கண்கள்போய் சில காலங்களாகின. தாமோதரன் மிகவும் அக்கரையுடன் தன் எஜமானனின் காரியங்களைப் பார்த்து வந்தான். பிரதி தினமும் கணக்குகளைப் படித்துக் காண்பிப்பான். கிருஷ்ணப்பர் ஓர் உயர்ந்த இடத்தில் சாய்வான நாற்காலியில் உட்கார்ந்திருப்பார். ஓய்ந்த வேளைகளில் தினசரிப் பத்திரிகைகளும் நல்ல புத்தகங்களும் தாமோதரன் வாசித்துக் காண்பிப்பான். தன்னாலானவரை கிருஷ்ணப்பரின் துக்கத்தை மறைக்கும்படி செய்தான்.

ஃ

ஒருதினம் சாயங்காலம் 4-மணியிருக்கும்; வெய்யலின் தாபம் போகவில்லை. அச்சமயம் கிருஷ்ணப்பர் தனது மேல்மாடியில் உட்கார்ந்திருந்தார். மின்சார விசிறி சுற்றிக்கொண்டிருந்தது. அவர் பக்கத்தில் பாக்கியலக்ஷ்மி உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாள். அவள் தாயார் சோபாவில் உட்கார்ந்து ஏதோ பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தாள்.

ஃ

"பாக்கியம், எனக்கோ கண்ணில்லை. உனக்குச் சரியான கணவனைத் தேடிப் பிடிக்கும் பாக்கியம் கடவுள் எனக்குக் கொடுக்கவில்லை. அம்மா, விவாகம் செய்ய ஏற்பாடுகள் செய்யட்டுமா?"

ஃ

"அப்பா, நான் விவாகமே செய்துகொள்ளப் போவதில்லையென்று சொல்லவில்லை. எனக்கு மனதுக்குப் பிடித்தவனாகயிருந்தால் அவசியம் செய்துகொள்ளுகிறேன். ஆனால் சிறிது படித்தவனாக யிருந்தால் நலம்."

ஃ

இதைக் கேட்டிருந்த தாயார் புத்தகத்தைக் கீழே போட்டுவிட்டு, "அப்பாடி, இன்றுதான் என் மனது குளிர்ந்தது. எங்கே மற்ற விஷயங்களில் வெட்கப்படுவதுபோல் இந்த முக்கியமான விஷயத்திலும் வெட்கப்படுவாயோ வென்று நினைத்தேன். சரி, இனி நல்ல இடமாகப் பார்க்க வேண்டியதுதான்" என்றாள்.

ஃ

"பாக்கியம், சரி, நான் ஒன்று சொல்லுகிறேன் கேள். நமது தாமோதரனிருக்கிறானே! அவனுடைய குணத்தைப்பற்றி உங்களுக்கு நன்கு தெரியும். அவன் ஏழையாயிருந்தாலும், நம்மை ரொம்ப நம்பியிருக்கிறான். அவனுக்கு உன்னைக் கலியாணம் செய்து கொடுத்துவிட்டால்

எனக்கு விசாரமற்றிருக்கும். நீ என்ன சொல்லுகிறாய்:"

"அப்பா. தாங்கள் என்ன விளையாடுகிறீர்களா! தாமோதரன் ஸ்திதி என்ன! நமது ஸ்திதி என்ன!"

ஃ

"பாக்கியம், அப்படிப் பேசாதே. நான் முதலில் எப்படி யிருந்தேன்? அப்படித்தான் தாமோதரனும் இப்போது இருக்கிறான். நம்முடனேயே பல வருடங்களாக அவன் இருப்பதில் உனக்கு அல்பமாகத் தோன்றுகிறது. அவனையே முதன்முதலாகக் கண்டிருந்தால் வேறு எவனையும் விரும்பமாட்டாய். சரி உன் இஷ்டம்; பகவத் ஸங்கல்பம்போல் நடக்கிறது" என்று பேசாமலிருந்துவிட்டார்.

ஃ

இந்த ஸம்பாஷணைக்குப் பிறகு பெண்ணுக்கும் தாயாருக்கும் தாமோதரனின்மீது அருவருப்பு தோன்றிற்று. இந்த சம்பளக்காரனா மாப்பிள்ளையாவது என்று கடுகடுத்தனர். அவன் வேலைகளில் சதா குற்றம் கூறியபடி யிருந்தனர். அவநம்பிக்கையும் கொண்டனர். இவர்களின் அதிகாரமே பெரிதாயிற்று. செட்டியாரின் மனைவி தன் தம்பி ராகவனைத் தாமோதரனின் வேலைகளைப் பார்க்கும்படி நியமித்தாள். தாமோதரன் தனக்கு உண்டான அவமதிப்புகளைத் தனது எஜமானரிடம் கூறித் தான் விலகிக்கொண்டு இரங்கோன் செல்வதாகத் தெரிவித்தான். கண்ணில்லாத செட்டியார் தன் மனைவியின் செயலுக்கு மிகவும் வருந்தி "இந்தியன் பாங்கி"யில் தமது தனிக் கணக்கா: இருந்த ஐயாயிரம் ரூபாயையும் தாமோதரன் பேருக்கு எழுதிக் கொடுத்துக் கண்ணீருடன் அனுப்பினார். தாமோதரனும் அடுத்த வாரக் கப்பலில் இரங்கூன் சென்றான்.

ஃ

வருடங்கள் இரண்டு ஆயின கடைக்கு அதிகாரியான ராகவன் குடியிலும் கூத்தியிலும் முதல் நெம்பரானான். வேசி யொருத்திக்கு வேண்டியவரையில் செலவிட்டான். அதனால் வியாபாரம் குறைந்து கடன்கள் அதிகரித்தன. மூவாயிரம் ரூபாயுடன் எங்கோ கம்பிநீட்டிவிட்டான். கடையை மூடும்படியாய்விட்டது. தமது கடை போய்விட்டதற்குச் செட்டியார் கண்ணீர் விட்டார். தாமோதரன் இருந்திருந்தால் இவ்விதம் நேராதே யென்று வருந்தினார். பெண்களுக்கும் தாமோதரனின் உருவம் அருமையாகத் தோன்ற ஆரம்பித்தது. உடனே அவனை வருமாறு கடிதம் எழுதினார். "தான் மூன்று வருஷ ஒப்பந்தத்தில் ஒரு கடையில் அமர்ந்திருப்பதால், இனி ஒரு வருஷம் சென்றபிறகே வரமுடியும்" என்று தாமோதரன் பதில் எழுதினான். அவன் உடனே வராததில் இவர்களுக்கு அவன் உருவம் இன்னும் அருமையாகப் பட்டது.

ஃ

காலத்தின் மாறுதல்கள் செப்பப் போமோ? பாக்கிய லக்ஷ்மி காதற் கடிதங்கள் எழுதவும் தொடங்கிவிட்டாள். தாமோதரன் அதற்குப் பதில் தர அஞ்சினான். தான் அனுப்பும் கடிதங்களில் பழைய ஊழியன்

கொம்பு இழந்த குரங்குபோலவும், கூடுவிட்ட குளவிபோலவும், குகையைவிட்ட சிங்கம்போலவும், ஜலத்தைவிட்ட மீன்போலவும், பூமியைவிட்டுப் பெயர்ந்த மரம்போலவும், தன் இன்பத்தில் பூர்த்திபெறாத நங்கைபோலவும் மயங்கித் தவித்து ஏமாறவும் காலம் வாய்க்கின்றது.

போலவே காண்பித்துக்கொண்டான். ஒரு வருஷத்திற்குப் பின் தாமோதரன் ஊர் வந்து சேர்ந்து செட்டியாரை வணங்கினன். அவர் பிரீதியுடன் தழுவிய வண்ணம் பாக்கியலக்ஷ்மியை விவாகம் செய்துகொண்டு கடையை முன்போல ஆரம்பிக்கும்படி கூறினர். பாக்கிய லக்ஷ்மியும் தாமோதரனை நமஸ்கரித்தாள். செட்டியாரின் மனைவியும் பிரீதியுடன் உபசரித்தாள். தாமோதரன் வந்த ஒரு மாதத்திற்கெல்லாம் கடையும் பழையபடி திறக்கப்பட்டுவிட்டது. மறுமாதத்தில் பாக்கியலக்ஷ்மிக்கும் தாமோதரனுக்கும் விவாகம் நடந்தேறிற்று. மாங்கல்யதாரணமானதும் மணப்பெண்ணும் மாப்பிள்ளையும் செட்டியாரின் பாதங்களில் விழுந்து நமஸ்கரிக்கும்பொழுது, செட்டியார் ஆநந்த பரவசராய்த் தமக்குக் கண்கள் நன்ருகத் தெரிகின்றனவென்று கூறி பகவானைத் துதித்தார். திருப்பதிக்குப் போகுமுன்பு பார்த்த தாமோதரனை இப்பொழுது மறுபடியும் தமது கண்களால் கண்டு தமது குமார்த்திக்குத் தக்க சுந்தரமுள்ள மணமகனே வாய்த்தானென்று மகிழ்ந்தார். "அப்பா! தாமோதரா! உன் விஷயத்தில் நான் தர்மநியாயமாய் நடந்து, கடைசியில் என் புத்திரியையும் உனக்குக் கொடுத்து உன்னை ஒரு மனிதனுய் உருவாக்கியதற்காக பகவான் என்மீது சந்தோஷித்து எனக்குக் கண்களைக் கொடுத்தார்" என்ருர். பிறகு தன் குமார்த்தியைப் பார்த்து, "குழந்தாய்! தாமோதரன் வெகுதூர நாட்டிற்குப் போய் விட்டதால் இப்போது உனக்கு அருமையாகிவிட்டான். எதுவும் தூரத்திலிருந்தால்தான் மகிமை. நீங்கள் இருவரும் அன்புடன் விளங்குக" என்று வாழ்த்தினர். யாவரும் சுகமே இன்புற்றனர்.

M. C. ஸ்ரீநிவாஸாசாரியார் M.A.

உலகம் குழந்தைகள் மயம்.

ஒரு சக்ரவர்த்தியின் அதிகாரத்தைவிட ஒரு குழந்தை செய்யும் அதிகாரம் பெரிது. அக்குழந்தையின் ஏக சக்ராதிபத்யம் தெய்வீகச் சார்புள்ளது. சக்ரவர்த்திக்கு அச்சத்துடன் உட்படநேரும். ஆனல், ஒரு குழந்தைக்கோ ஸர்வ விதமான சுயேச்சையும் கொண்டு அன்புடனே ஓடிவந்து பணி செய்யவேண்டிய நிலையில் நம்மை உட்படவைக்கிறது. உலகமே குழந்தைகளின் அடிமை. ஒரு பீரங்கியின் கர்ண கடோமான தொனியைக் காட்டிலும், ஒரு குழந்தை பாலுக்காக அழும் சப்தம் மேகலோகத்தையும் துளைத்துக்கொண்டு செல்லும். அனைவரையும் உடனே ஓடிவரச் செய்துவிடும்.

"என்னைச் சூழ்ந்துகொண்டிருக்கும் மேகங்களைக் கலைக்க இப்புது வருஷத்தில் என்னல் முடியுமோ முடியாதோ தெரியவில்லை. ஆயினும், தளரா முயற்சியுடையேன்."

டால்ஸ்டாய்

அவரது ஜீவிய சரிதையும் காவியங்களும்.

டால்ஸ்டாய் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் சாதாரணமாக யாவரும் கூறக்கூடியது யாதெனில் “நல்லொழுக்கத்தைத் திடீரெனக் கைவிட்ட ஞானி” என்பதேயாகும். இதன் முக்கிய காரணம் யாதெனில், இப்பெரியார் ஆத்ம துரோகமின்றித் தனது சொந்த அபிப்பிராயத்தை சமூக விஷயத்திலும், மத சம்பந்தமான கோளாறுகளிலும் பகிரங்கமாகக் கூறியதேயாகும். டால்ஸ்டாயைப் போற்றுபவர்களில் இரு வகுப்பினருண்டு. ஒரு வகுப்பினர் இவருடைய நாவல்களை மட்டும் சிறப்பாய்க் கூறுவரே யன்றி, மற்ற சமூக சீர்திருத்த முயற்சிகளை வெறுக்கும் சுபாவமுடையோர். மற்றோர் வகுப்பினரோ நாவல் உலகில் பண்டையர் எழுதாத நவீன விஷயத்தை யொன்றும் டால்ஸ்டாய் எழுதிவிடவில்லையாதலின், இவரது பெருமை சமூக சீர்திருத்த சம்பந்தமாகச் செய்த போராட்டத்திலேயே இருக்கின்றதென்பர். டால்ஸ்டாய் பிறப்பில் பிரபுவேயாயினும், வாழ்க்கையில் குடியானவனை யொப்ப இயற்கை விநோதங்களை அனுபவித்து, ஏழைகளின் இல்லற இன்ப துன்பங்களை ஆராய்ந்துணர்ந்து, தானும் அவர்களிலொருவரெனக் கருதித் தன் வாழ்நாளைத் தொழிலாளிபோல் கழித்து வந்தவர்.

ஃ

ஐரோப்பா கண்டத்தில் ருஷிய நாட்டில் மாஸ்கோ நகருக்கு 130-மைல்களுக்கப்பாலுள்ள யாஸ்னாயா போல்யானா (Yasnaya Polyana) என்னும் கிராமத்தில் கி. பி. 1828-ம் ஆண்டு ஆகஸ்டு 28-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கவுண்ட் நிகோலாஸ் டால்ஸ்டாய் என்பவருக்கும் மார்யா கோன்ஸ்கீ என்னும் மாதிற்கும் டால்ஸ்டாய் அவதரித்தார். செல்வம் நிறைந்த குடும்பத்தில் ஜனித்த டால்ஸ்டாய் ஒருவித குறைவுமின்றி வளர்ந்து வந்தார். பூர்வஜன்ம கர்ம பலனால் இவரது தாயாரை ஏழாம் ஆண்டிலேயே இழக்க நேர்ந்ததுமன்றி, மறு வருடத்தில் தந்தையையும் விண்ணுலகேற்றினர். தாய் தந்தையரைப் பறிகொடுத்த பின் டால்ஸ்டாய் சிறிதுகாலம் தன் சகோதரர்களான நிகோலா, ஸர்ஜீ, டம்ட்ரீ இவர்களுடன் சேர்ந்து பின் தனது அத்தையின் ஆதரவில் வசித்து வந்தார்.

ஃ

விளையும் பயிர் முளையிலே என்பதையொப்ப பால்யத்திலேயே டால்ஸ்டாயிடம் சில அரிய குணங்கள் காணப்பட்டன. சுயநலம் என்பதும் முரட்டு சுபாவமென்பதும் இவரிடம் இல்லை. எவரிடமும் சந்தோஷமாய்ப் புன்சிரிப்புடன் பேசுவதே இவரது சுபாவம். ஆனால், பிறர் தன்னைப் பரிகசித்தாலோ, அல்லது தன்னிடம் அவமரியாதையாக நடந்துகொண்டாலோ அவரது மனம் சகியாது. ஒருசமயம் தனக்கு ஜர்மன் பாஷை கற்றுக்கொடுத்து வந்த உபாத்தியார்

ஏதோ கடிந்து பேசிவிட, பள்ளியிலிருந்து வீடு திரும்புகையில் வீதியில் அழுதுகொண்டே வந்தாராம். மற்ருேர் முறை விளக்கில் தனது சிகரெட்டைப் பற்றவைக்கையில் சில நண்பர்கள் "நாகரீகமற்ற இவனைப் பார்!" என்று கூறிவிட, டால்ஸ்டாய் மனம் தாளாமல் அதை நினைத்துப் பல வருடங்கள் வருந்தினராம்.

ஃ

வெட்கமும் நாணமும் இவருக்கு உடன் பிறந்த சொத்துகள். தன் சொந்தத் தாயாரிடம்பேசவும், அத்தையுடன் வார்த்தையாடவும்கூட நாணுவாராம். தான் பார்வைக்கு வசீகரமாக இல்லை யென்பது மிகவும் வருத்தம். அகன்ற நெற்றியையும், அகன்ற மூக்கையும், சிறிய கண்களையும் உடையவர். ஓர் சமயம் அவரது தாயார், "வியோ, உன்னை ஒருவரும் உன் அழகிற்கென விரும்பமாட்டார்களாயினும், உன் குணத்தால் பலர் உன்னை விரும்பும்படி செய்து கோள்ளவேண்டும்" என்ருள். இந்த வார்த்தைகள் டால்ஸ்டாய் மனதை விட்டு இறக்கும் வரையில் அகலவில்லை. அதுமுதல் தன் நடத்தையாலேயே பிறர் மனதைக் கவர வேண்டுமென்றுணர்ந்து அதற்குகந்தாற்போல் தனது வாழ்நாட்களைக் கடத்தி வந்தார்.

ஃ

தனது பதினுரும் ஆண்டில் பிற்காலத்திய தன் வாழ்க்கையை எப்படி நடத்துவது எனத் தீர ஆலோசித்த பின் ஓர் முடிவுக்கு வந்தார். அதைத் தனது அத்தைக்குப் பின்வருமாறு எழுதினுர்:—

"நான் குடியானவர்களுடன் கூடி வாழ இச்சிக்கின்றேன். என், அதற்கெனவே நான் பிறந்திருப்பதாகவும் கருதுகின்றேன். நான் யெளவன தசையிலிருப்பதாக நீ கூறுகின்ருய். ஆனுல், வாலிபர்கள் இவ்வித வாழ்க்கையில் புகலாகாதென ஓர் சட்டமுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வாலிபர்கள் சத்விஷயங்களை விரும்பிச் செய்வது தவறல்ல என்பது எனது சொந்த அபிப்பிராயம். மானிடர்களுக்குத் தோன்றும் துன்பங்களின் காரணம் குடியானவர்களின் கண்ணீரே விளைவிக்கின்றது. நான் அவர்களுக்கு சற்போதனைகள் செய்ய உத்தேசித்துள்ளேன். அத்தகைய தான இதுவே எனது பிறப்பின் கடமையாகும்."

ஃ

இதைப்பார்த்துஅவரது அத்தை எவ்வளவு தடுத்தும் பிரயோஜனப் படவில்லை பிறர் துன்பத்தைத் தனதென மதிக்கும் புண்ணியசீலரின் உள்ளத்திலெழுந்த ஊக்கத்தை யாராலேதான் தடுக்க வியலும்?

ஃ

தனது இருபத்தினன்காம் ஆண்டுவரையும் யாஸ்னுயா போல்ஸானுவென்னும் கிராமத்திலேயே வசித்து, குடியானவர்களின் துயரத்தை நீக்கத் தீவிர முயற்சிகள் எடுத்துவந்தார். தன்னிடம் உள்ள கெட்ட குணங்களை ஒவ்வொன்ருய்ச் சிறிது சிறிதாக ஒழித்து வந்தார். 1851-ம் ஆண்டில் தன் சகோதரன் நிகோலாவுடன் தானும் ராணுவத்தில் சேர்ந்து கிரிமியன் சண்டையில் தானும் கலந்து

ஆற்காடு முற்றுகை காலத்தில், "எங்களுக்குக் கஞ்சிபோதும், ஆங்கிலேயர்கள் சாதத்தை எடுத்துக்கொள்ளலாம்" என்று இந்தியச் சிப்பாய்கள் புகன்றதாகச் சரித்திரம் கூறுகிறது.

கொண்டார். ஆனால், அசோகன் கலிங்க நாட்டின்மீது படையெடுத்த சமயம் போரில் மடிந்த பல்லாயிரக் கணக்கான வீரர்களைக் கண்டு மனங் கலங்கி இனிப் போர் புரிவதில்லை யென விரதம் கொண்டதைப்போல், இளகிய மனத்தரான டால்ஸ்டாயும் மனந்தளர்ந்து ராணுவத்தினின்று விலகினார். அதுமுதல் ஹிம்சையில் பெரும் வெறுப்புத் தோன்றியது மன்றி ஜீவ ஹிம்சை செய்பவர்களைக் கண்டால் அவர்களது மனதைத் திருப்பத் தன்னாலியன்றவரையில் முயலுவாரானார்.

ஃ

1862-ம் ஆண்டில் தனது 34-ம் வயதில் ஸோன்யா என்னும் மாதை மணந்து இல்லறம் நடத்திவரலானார். ஆனால், மணவாழ்க்கை அவருக்குத் துன்பத்தையே விளைவித்தது. புருஷன் மனைவி இருவரும் வேறுபட்ட அபிப்பிராயங்களையும் கொள்கைகளை யுமுடையவர்களாயின் இல்லறவாழ்க்கையில் இன்பம் எங்கிருந்து வரும்? டால்ஸ்டாய் அடிக்கடி குடியானவர்களிடம் கூடி வாழ்வது ஸோன்யா விற்கு வெறுப்பையே யளிக்கும். புலால் உண்பது ஸோன்யாவிற்கு அதிக விருப்பம். டால்ஸ்டாயோ ஜீவ ஹிம்சையை வெறுத்துப் புலால் உண்பதையும் நிறுத்திவிட்டார். இவ்விதம் இல்லறம் நடத்திவருங்கால் பதின்மூன்று குழந்தைகள் இவர்களுக்குப் பிறந்து ஐந்து குழந்தைகள் பால்யத்திலேயே இறந்துவிட்டன. டால்ஸ்டாய் அவர்களுக்குக் குழந்தைகளிடம் விருப்பம் அதிகம். அவைகளுடன் கொஞ்சிக் குலவிக்கொண்டிருக்கையில் தான் சுவர்க்கத்திலிருப்பதாக வெண்ணி மகிழ்வார். பிறர் குழந்தையாயினும் தன் சொந்தப் புதல்வர்களென மதித்து அன்பு காட்டுவது அவரது உடன்பிறந்த சுபாவம்.

ஃ

முதலில் டால்ஸ்டாய் எந்த கிரந்தம் எழுதினர் எனக் கூறமுடியாது. ஆயினும், முதல் முதல் ஜூலைமாதம் 9-ம் தேதி (1852-ல்) வெளியான நூல் "பாலப்பருவம்" என்பதாகும். ஒரு நாள் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் "பாலப் பருவம்" என்ற கட்டுரையை L. T. என்ற புனைப்பெயருடன் எழுதியவர் மிக்க அருமையாக எழுதியிருக்கிறார்" என ஒருவர் கூறக்கேட்டு டால்ஸ்டாய் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே யில்லை. "கோஸாக்ஸ்" (Cossacks) என்ற மற்றோர் நூலில் இயற்கை விநோதங்களும், வன வாழ்க்கையும், மரம் செடி கொடிகளினிடையே கவலையின்றி வாழும் மனிதர்களின் இன்பங்களையும் அனுபவித்து எழுதியதுபோல் வரைந்துள்ளார். இதுமுதல் அவரது வாழ்நாளிலேயே பெரியதோர் மாறுதல் தோன்றிவிட்டது.

ஃ

"போரும் நிம்மதியும்" என்ற நூல் 1864-ல் வெளியாகியது. 1873-ல் ஆரம்பித்து 1876-ல் "ஆனா கரியன்னா" என்னும் இணையில்லா நவீனகத்தை எழுதி முடித்தார். "விவாக ரத்து" தவறென்றும், ஒருமுறை மணம் ஆகிவிட்டால்

பெரியவர்களுடைய செய்கைகளாலும் யோக்கியதைகளாலும் ஏற்படுவதைவிட அதிக செல்வாக்கு வேறெதற்குமில்லை. அவர்களுடைய செல்வாக்கு எவ்வளவு காலமானாலும் அழியாமலிருந்துவரும். நமக்குச் சந்தோஷமும் சமாதானமும் ஏற்படுமாறு செய்தவர்களுடைய கீர்த்தி மிகவும் மேலானது.

இறக்கும் வரையில் தம்பதிகளாகவே இருந்து தீரவேண்டுமேயன்றி விவாக ரத்து செய்துகொண்டு பிற மாதை யோ புருஷனையோ மணக்க மானி டர்க்கு உரிமையில்லை யென்பதுமே இந்நூலின் முக்கியக் கொள்கை யாகும். ஃ

இவர் கொரான் என்ற மகமதிய வேதத்தையும், பைபிளையும் ஆராய்ச்சி செய்யலானார். இவ்விரண்டும் மன நிம்மதியையும் உண்மைத் தத்துவத் தையும் போதிப்பனவாகத் தோன்ற வில்லை. ஆலயங்களுக்குச் சென்று கடவுளைத் தொழுவது இவருக்கு வெறுப்பையே யளித்தது. இவரது முக்கியக்கொள்கைகள் சிலவே. அவை யாவன.

(1) கோபம் கொள்ளாதே. பிற ரைக் கடிந்து பேசாதே. எவரிடமும் அன்பாய் இரு. சத்துருவையும் நண்ப னாகப் பாவித்திரு.

(2) சிற்றின்பத்தை வெறு. அள வுக்கு மிஞ்சியபோகம் துன்பத்தையே விளைவிக்கும். பிறமாதரைத் தீண் டாதே. விபசாரமே பாபமென உணர்.

(3) சபதம் செய்யாதே.

இவைகளே முக்கியமானவை. அன்பே சிவம். அன்பே ஆண்டவன். இவைகளே இவரது கொள்கைக ளாகும். அவைகளைக் கடைபிடித்து வருபவனுக்கு வேறு மதம் வேண் டாம். குருக்கள் வேண்டாம். சுவர்க்க முண்டு. சுகமுண்டு. குருக்கள் போலி ஆசாமிகள். அவர்களை நம்பின வர்களுக்கு நரகமே என்பது இவரது கருத்து. ஃ

1881-ம் ஆண்டில் புரட்சிக்காரர் களைத் தூக்கிலிட ருஷிய மன்னர் உத்திரவிடுகையில் டால்ஸ்டாய் அரச ருக்கு ஓர் கடிதம் எழுதினார். அதில் புரட்சிக்காரர்களைத் தூக்கிலிடுவதில் ஓர் பயனுமில்லை யென்றும், அவர்க ளுடன் சத்தியப் போர் ஆடுவதே ஆண்மை யென்றும் கூறியிருந்தார். இதனால் இவர்மீது சந்தேகங் கொண்டு இவரது விடுதியை சோதனை யிட்டும் கவர்மெண்டாருக்கு ராஜத் துரோக விஷயமாக ஒன்றும் இவரி டம் காணாது கவர்னர் அவர்கள் பின் னர் இவரைச் சந்தேகித்ததற்கு மன் னிப்பு கேட்டுக்கொண்டாராம்.

ஃ

டால்ஸ்டாய் ராஜத்துரோக விஷயமாகச் சில நூல்கள் எழுதிப் பிரசுரம் செய்தார். ஆனால் அவைகள் யாவும் அரசாங்கத்தாரால் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டன. அரசாங்கத் தில் துன்புறுவது ஏழைகளே யென் றும், அவர்களுக்கு நியாயம் கிடைப்ப தில்லை யென்றும் அனுபவத்தில் உணர்ந்து சட்டங்களை அடியோடுவெ றுத்தார். கவர்ன்மெண்டார் இவரை அடக்கச்செய்த முயற்சிகள் பல. இவரைக் கொலை செய்துவிடவும் ஒரு சமயத்தில் யோசித்தனராம். கிறிஸ்துவப் பாதிரிமார்கள் இவரைக் கொல்லச் செய்த சூழ்ச்சியும் வீணா யிது. நாட்டில் எவரும் டால்ஸ்டாய் அவர்களைக் கௌரவிக்கக் கூடா தெனத் தீவிர சட்டங்கள் ஏற்படுத் தப்பட்டன. ஃ

இவரது நூல்களைப் படிப்பவர்க ளுக்கும், பிரசுரிப்பவர்களுக்கும்

"ஒரு சட்டி கூழுக்காக என்னுடைய பாத்தியதையை இழந்துவிட நான் மறுக்கிறேன்" என்று ஒருவன் மீறிவிடவே, அப்பொழுது அவனை ஏமாற்ற இருந்தோர் தங்களின் மண்டையைச் சொரிந்துகொண்டு யோசனை செய்யத் தொடங்குகிறார்களாம்.

கடுமையான தண்டனைகள் விதிக்கப்பட்டன. ஆயினும் சத்தியசீலங்கள் இவரை விட்டகன்றபாடில்லை. எங்கு செல்லினும் இவரைத் தொழுது வணங்கும் ஜனங்கள் பலர்.

ஃ

கடைசியாக, 1910-ம் வருஷம் நவம்பர் மாதம் 7-ம் தேதி காலை டாலஸ்டாய் ஞானியார் பூவுலகை நீத்து விண்ணுலகேகினர். அரசர் இவரிடம் வெறுப்பையே கொண்டிருந்தாராயினும் இவர் மரணமடைந்த செய்தியைக் கேட்டு மிகவும் வருந்தினராம். அவரது புத்திரர்களாலும், அவரால் நேசிக்கப்பட்ட பல ஏழைக் குடியானவர்களாலும் அவரது சவம் யாஸ்னு கிராமத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. பலர் கண்ணீர் வடித்தனர். எல்லா கலாசாலைகளும் ஆபீஸ்களும் அன்று மூடப்பட்டன. அவர் ஆத்மா சாந்தியடையும் பொருட்டு அன்று யாவரும் வேலைகளை நிறுத்தி ஆண்டவனைத் தொழலாயினர். அவர் பூவுலகை விட்டு நீங்கினும், அவரது புகழ் உலகம் உள்ளவரையில் நீடித்து நிற்குமென்பதில் ஐயமில்லை. 'அன்பே சிவம்' என்ற பொன் மொழியை ருஷியர்களுக்கு எடுத்துரைத்த பூமானை ருஷியர்களும், உலகினரும் எங்ஙனம் மறக்கக்கூடும்?

கே. வி. எஸ். வாஸ்.

நல்லவர்களோ, கேட்டவர்களோ அவர்களும் ஒரு துணையே.

கெட்டவர்களோ நல்லவர்களோ—அவர்கள் உயிருடன் இருந்தால் எக்காலத்திலேனும் ஒரு துணை—சகாயம் பெறலாம். கெட்டவர்கள் பல சமயத்திலும் உதவியாக நின்றதும் உண்டு. ஆகவே, எவரும் க்ஷேமத்துடன் இருக்கும்படி பிரார்த்திப்பதே நன்று. கண் மூடிக்கொண்டு இவர்கள் போய்விட்டால் பிறகு என்ன துணை இருக்கிறது? அவர்களைக் குறித்த பேச்சும் அறுந்துவிடுகிறது. மறைந்துவிட்ட உருவத்தை இனி எந்த இடத்தில் காணப்போகிறோம்! சிசு முதற்கொண்டு விருத்தாப்பியர் ஈறாக மரணப்பிரிவின் வேதனை ஒருவிதமேயாகும். வைத்துள்ள பாசத்திற்கேற்ப துயரத்தின் தொனி மிகைபடுத்தியும், பராமுகமாக்கியும் காட்டப்படும். எவரும் போனபிறகு நல்லவர்கள் தான். கெட்டவனாகவே ஒருவன் எப்போதுமிருந்ததில்லை. அவ்விதமே நல்லவனாகவே எந்த நாளும் ஒருவன் இருந்ததில்லை.

கண்ட—காணாத—சாஸ்திரிகள் !

(கண்ட சாஸ்திரிகளுக்கும் காணாத சாஸ்திரிகளுக்கும் சம்பாஷணை.)

இடம்:—மதுரை மீனாக்ஷிகோயில்.

கண்ட சாஸ்திரி:—என்ன சாஸ்திரியளே! நேற்று ஸனாதன கான்பரன்ஸுக்கு வந்திருந்தேளா?

காணாத சாஸ்திரி:—நீங்கள் போயிருந்தேளே, என்ன நடந்தது?

கண்ட:—அதை என்ன சொல்லச் சொல்ரேன். ஆதிசேஷனாலும் வர்ணிக்கமுடியாது. குறைந்தது இரண்டாயிரம் ரூபாய் சிலவிருக்கும். பாயஸம் பக்ஷணத்தோடு சாப்பாடய்யா!

காணாத:—எல்லாருக்குமா?

கண்ட:—எல்லோருக்குமில்லே; இருந்தாலும் நான் விடுவேனா! சாப்பிட்டுவிட்டேன்.

காணாத:—சாப்பாடு கிடக்கட்டும். அதைச் சொல்லி என் வயிற்றெரிச்சலைக் கிளப்பப் பார்க்கிரேளா? அங்கே என்ன நடந்தது? அதைச் சொல்லுங்கோ.

கண்ட:—முதல்நாள் ஸ்வாமிகளவாள் மூணு மணிநேரம் இங்கிலீஷிலே ஜமாச்சுட்டாள். என்ன ஜோர்! என்ன ஜோர்! நீங்கள் வராமலிருந்துட்டேளே.

காணாத:—உங்களுக்கும் எனக்கும் இங்கிலீஷிலே ஒரு அக்ஷரம்கூடத் தெரியாதே ஸ்வாமி. நான் வந்து என்ன பண்ண?

கண்ட:—ஸன்னிதானம் இங்கிலீஷிலே பேசறபோது அங்கேயிருந்த ஸனாதனிகள் எல்லாம் ரொம்ப ரொம்ப ரஸிச்சாள்.

காணாத:—என்ன அநியாயம்! ஆச்சாரியாள் அதிலும் ஜகத்குரு, நீசபாஷையிலேயா ஸனாதனம்பேசரது!

கண்ட:—ராஜாவுக்கும் வைஸ்ராய்க்கும் தெரியவேண்டாமா சாஸ்திரியளே?

காணாத:—ஆச்சாரியாளும் சவுகர்யம்போலே தர்மாசரணை செய்யலாமானால், காந்தியும் சாஸ்திரத்துக்கு அர்த்தம் நன்னாச் சொல்லலாம்.

கண்ட:—சாஸ்திரியளே! அப்படியானால் பஞ்சமாள் எல்லாம் கோவிலுக்குள் வரலாம் என்கிரேளா?

காணாத:—அப்படித்தான் சொல்ரேன்.

கண்ட:—என்ன சாஸ்திரியளே! இதுவரை உங்களை ஸனாதனி என்றல்லவா நினைச்சேன். திடீரென ஹரிஜன சாஸ்திரியளாய் மாறிவிட்டேளே?

காணாத:—உமக்கு கண்ணிருக்கா? அதோ பாரும் பூட்ஸ் காலோடே அந்த கிருஸ்தவரும் வாயிலே சுருட்டோடே அந்த மகம்மதியரும் த்வஜஸ்தம்பம் வரை போகலாமானால், கட்டாயமாய் நம்ம பறையன் மூத்தனும் சக்கிலி பழனியும் இன்னம் கொஞ்சதூரம்கூட உள்ளே போகலாம் சாஸ்திரியளே.

கண்ட:—(பதில் சொல்ல முடியாமல் விழித்துக்கொண்டு) சாஸ்திரியளே! ரொம்ப கோபத்திலிருக்கேள். இப்போ உங்களிட்டே "தர்மம்" பேசப்படாது. கோபப் படாதய்யா நான் போறேன்.

காணாத:—நான் ஒன்றும் அப்படிப் பேசவில்லே. அப்படி பேசரதெல்லாம் ஸ்வாமிகளும் நம்ம ஸனாதனிகளும் தான். நேத்து ஸ்வாமியாளவாள் $1\frac{1}{2}$ மணிநேரம் காந்தியை வாயில் வந்தபடி எல்லாம் வைதாளாம். எதற்காக

ஸ்வாமி இன்னொருத்தரை வையணும்? தன் கக்ஷியில் பலமில்லாதவன்தானே எதிரியை வைவான். காந்தி என்ன, பிராமணனை ஒளபாஸனம் பண்ணக் கூடாது என்று கையைப் பிடிக்கிறாரா? அதவா ப்ரமயஞ்யம் பண்ணக் கூடாது என்று கையிலே தீர்த்தத்தை விடறாரா? நாம் பண்ணரது எல்லாம் அக்கிரமம். அசாஸ்திரீகம். எந்த சாஸ்திரத்திலே அய்யா ஆச்சாரியாளை மோட்டாரிலும், ரெயிலிலும் போகச்சொல்லியிருக்கு? எந்த ஸ்மிருதியிலே, பிராமணனை வக்கீல் பண்ணச் சொல்லிருக்கு? கோர்ட்டிலே பஞ்சமன் ஜட்ஜா வந்தா அவனுக்கு மரியாதையோடு எழுந்து நின்று ஸலாம்போட்டு 'யுவர் ஆனர், யுவர் லாட்ஷிப்' என்று சொல்ல எந்த ச்ருதியிலே சொல்லிருக்கு சாஸ்திரிகளே?

கண்ட:—அதெல்லாம் ஆபத் தர்மம் அய்யா.

காணாத:—ஆபத்தர்மம் இதுதானா? லக்ஷக்கணக்காய் சம்பாதிச்ச பிறகும் கூட இன்னும் ஆசைவிடாமல் ராக் கொள்ளிப் பிசாசு(Vampire) மாதிரி கக்ஷிக்காரன் ரத்தத்தை உறிஞ்சரது. இவாள்தான் இப்போ இந்த ஆபத் தர்மம் நடத்திக்கொண்டு நம்ம ஸனாதனத்தைக் காப்பாத்த வந்திருக்காளய்யா. எல்லாம் பெரியவாளுக்கு ஒரு ஸனாதனம், ஏழைகளுக்கு தனி ஸனாதனம்! கோவிலுக்குள் பஞ்சமனை மட்டுமா போகக்கூடாதென்று சொல்லிருக்கு? பதிதனும் போகக்கூடாதே ஸ்வாமி! கோவிலிலே தினம் எத்தனை பதிதன் வரான் தெரியுமா உமக்கு? நீங்கள் தினம் என்னய்யா பிராயச்சித்தம் பண்ணரேள்? ஆகம சாஸ்திரப்படி கோவிலில் மூர்த்தியின் ஸான்னித்யம்போய் ரொம்ப நாளாயிருக்கணுமே. இந்த கோவில்களிலே பறையன்போய் என்னய்யா குறையப்போறது? இன்னம் ஒரு விஷயம். அதையும் கேளும். என்னிக்கு நாம் ஸம்ஸ்கிருதத்தைக் கேவலமாய் எண்ணி பரபாஷையைப் பெரிசாய் நினைத்து நம்ம குழந்தைகளை வாசிக்க வச்சோமோ, அன்னிக்கே தொலைந்தது நம்ம ஸனாதனமும் நம்ம பிராமண்யமும். மனுஸ்ம்ருதி 2-வது அத்தியாயம் 168-வது ஸ்லோகத்திலே 'எந்தத்விஜன்' (பிராமண க்ஷத்திரிய, வைசியன்) வேதாத்யாயனம் பண்ணாமல் மற்றதைப் படிக்கிறானோ அவன் அதே ஜன்மத்திலேயே வெகு லேசாக குடும்பத்துடன் சூத்ரனாய் விடுகிறான். ஆகையால் நாம் எல்லோரும் சூத்திரர்கள்தான். அஸெம்பிளியிலே ரெங்கய்யர் கொண்டுவந்த பில் (Bill) ரொம்பசரி. ஓய்! இன்னும் கேளும். மகா பாகவதத்திலே ஏகாதச ஸ்கந்தத்திலே ஸ்ரீதரர் சொல்லுகிறார். "நோச்சரேத் யாவனீம் பாஷாம் ப்ராணை: கண்ட கதைரபி" அதாவது பிராமணன் கழுத்துக்கு வந்தாலும் A. B. C. என்று உச்சாரணம் பண்ணக்கூடாது என்று அர்த்தமில்லையோ? இப்பொழுது இங்கிலீஷ் உச்சரிக்காத பிராமணன் எங்கே அய்யா இருக்கான்? பூரி ஆச்சாரியாளுக்கு இப்போ நீங்கள் ஏற்படுத்தியிருக்கிற மஹத்வம் யவண பாஷா பாண்டித்யத்துக்காகத்தானே?

கண்ட:—இதெல்லாம் ஏனய்யா பேசரேள்? பிரகிருத சர்ச்சை நீண்டாமையைப்பத்தித்தானே.

ஒருவர் மொழி:—"ஒரு புனிதமான மனிதருடன் பேசியதான உணர்ச்சியோடு நான் மகாத்மாஜீயை விட்டுப் பிரிந்தேன். அவருடைய உண்மையும், ஆழ்ந்த தயவும், முழுதும் தன்னலமற்ற தன்மையும் எங்கள் மனதில் மிகவும் நன்றாய்ப் பதிந்து, நாங்கள் எப்போதுமே மறக்கமுடியாமற் செய்துவிட்டன."

காணுத:—என்னய்யா தீண்டாமை தீண்டாமை என்கிறீர். மனுஸ்மிருதியிலே மொத்த ஸ்லோகம் 2776. அதிலே தீண்டாமையைப்பத்தி 9—ஸ்லோகம்தான் இருக்கு. பாக்கி எல்லாம் பிராமணன் எப்படியிருக்க வேண்டியது;ஸன்யாஸி எப்படியிருக்கணும்; மத்த ஜனங்கள் எப்படி நடக்கவேணும் என்ற அரிய பெரிய விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் கவனியாமலும், அதின்படி நடக்காமலும் இந்த 9—ஸ்லோகத்தை மாத்திரம் குரங்குப் பிடியாய்ப் பிடிச்சுண்டு, அதிலேயும் தாங்கள்சொல்லும் அர்த்தம்தான் சரியென்று சொல்லிக்கொண்டு "ஸ்ம்ருதியிலே தீண்டாமைக்கு ஆதாரம் இருக்கு. அதினுலே மற்றது ஒன்றும் அநுஷ்டிக்காவிட்டாலும் தீண்டாமையை அநுஷ்டித்துதான் ஆகணும்" என்று சொன்ன அந்த வார்த்தைக்கு யோக்யதையே கிடையாதுங்காணும்.

கண்ட.—பின்னே பிராமணன் என்ன செய்யணும் என்கிறீர்.

காணுத:—இப்போது இவ்வளவு ஸனுதனம் பேசரவாள் சாஸ்திரப் படியே நடந்து காட்டவேண்டியது. முன்பு தட்டாடை கட்டிக்கொண்டிருந்து இங்கிலீஷ் படித்த பிராமணுள் இப்போது பஞ்சகச்சம் கட்டிக்கொண்டும் சாந்துக்குப் பதில் விபூதியும் குங்குமமும் போட்டுக்கொண்டும் தெருத்திண்ணையில் உட்கார்ந்துகொண்டோ அல்லது சீட்டாடிக்கொண்டோ, காந்தியை வைதுகொண்டுப் பழய தொழில்களை விடாமல் நடத்திக்கொண்டு வந்தால் ஸனுதனமாகாது. முதலாவது, ஆச்சாரியாள் இங்கிலீஷை மறக்கணும். வக்கீல் தொழிலை விடணும். ஸ்ருதி ஸ்ம்ருதி புராண இதிகாஸங்களைப் பார்த்து அத்தியாபனம் யாசனம் பிரதிக்ரஹம் இவைகளைக்கொண்டு உஜ்ஜீவிக்கணும். அவாள் குழந்தைகளுக்கு இங்கிலீஷ் சொல்லிக் கொடுக்கக்கூடாது. அப்படி அவர்கள் நடக்கத் தயாரில்லா விட்டால். அவாள் ஸனுதனத்தைப்பற்றிப் பேசக்கூடாது இது முடியுமா? ஆகவே, நம்ம பிராமணுள் ஒன்றும் தீண்டாதாரைப்பற்றிப் பேசாமல் நம்முடைய வழக்கமான ஜோலிகளைப் பார்ப்போம்.

போலிஸனுதன கண்டனசபை.

ஒருவர் நமக்குத் தரவேண்டிய பணத்தை எதிர்பார்த்து, இன்னும் வராமையால் ஆத்திரத்துடன் அவரைத் தேடிப்போக, அவரோ அதை நமக்கு முன்பு வீட்டில் கொடுத்துவிடுகிறுர். வீட்டில் கேட்டால் நமக்குப் பிராணனுயுள்ளவர்கள் அந்தப் பணம் தமக்கு செலவுக்கு வேண்டுமென்று சொல்லிவிட, நாமோ "சரி" என்று விடுகிறோம் இந்தப் பணத்தை அதைத் திருப்பித்தந்த அவருக்கே விட்டுவிடமட்டும் நமக்கு மனம் வரவில்லையே. என் அப்படி?

எதிலும் சம்பந்தப்படாதவரையில், சரி சரி என்று நீ எந்த சங்கதியிலும் பட்டுக்கொள்ளாமற் போகும்வரையில், நீ யாவர்க்கும் நல்லவனுகவே காண்பாய். ஒன்றில் பட்டுக்கொண்டு நல்லதுசெய்து அதனுல் நற்பெயர் அடைந்தவர் அபூர்வம். அதற்குப் பதிலாகத் திட்டுகள்தான் கிடைக்கும். எதிலும் படாமல் விலகிய தந்திரசாலிக்கோ லட்டுமிட்டாய்கள் கிடைக்கும். அவனே ஊருக்கு நல்லவனுகத் தோன்றுவதுடன் உனக்குக்கூட மகா நியாயம் பேசுவதுபோல் புத்திசொல்ல வந்துவிடுவான்!



ஜெய ஸஞ்சீவி:—

[துப்பறியும் நாவல். மூன்று படங்களுள்ளது. சென்னை திருவல்லிக்கேணி "ஜகன் மோகினி" பத்திராதிபர் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் இயற்றியது. விலை அணு 4.]

இந்த நான்கணு நாவலில் நான்கு ரூபாய் பெறுமான நாவலிலுள்ள ருசி இருக்கிறது. நூல் முழுமையும் கற்பனைகளின் மயம். வளர்ப்பு என்பதேயில்லை. அவ்வளவும் கதை. நாத்தியின் கொடுமையும், வறுமையின் தவிப்பும் உருகத்தக்கது. கணவன் இறந்தபின் தேட நினைக்கும் ஜீவனுர்த்தம் கணவனுள்ள போதே தேடிக்கொள்வது மேல். இப்பேச்சு சுலபம், காரியம் கஷ்டந்தான். கதா நாயகனின் தீயோர் பழக்கமும், அதன் பொல்லாப்பும் நன்கு விளக்கப்பட்டுள்ளது. கதாநாயகிக்குத்தான் இந்த நாவலில் அதிக மரியாதை. அந்த நங்கையின் ஸமத்காரத்தால் ஒரு குடும்பமே புத்துயிர் பெறுகின்கின்றது. இந்திராணியின் சமர்த்தெல்லாம் சந்தியிலாவது சந்தோஷமே. எங்கோ விட்டு விட்ட நாத்தியின் விஷயம் கடைசியில் வந்து கலந்து கொள்வது நல்ல கற்பனை. நூல் முற்றிலும் நல்ல புத்தி போதனைகள். தாய்க்கு அடங்கின பிள்ளையாகக் கதாநாயகனிருந்து க்ஷேமப்பட்டது மற்றவருக்கும் சிறந்த முன்மாதிரியாகும். இந்த நாவலை அனைவரும் வாசித்துப் பார்த்து இன்புறுவராக. நயமான விலை.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை:—

இதன் 17-வது ஆண்டு அறிக்கைத்தாள் வரப்பெற்றோம். மஹா உன்னதமான முறையில் குருகுலம் போன்று இப்பாடசாலை நடத்தப்பட்டு வருகின்றது. படிப்புடன் கைத்தொழிலும் போதிக்கப்பட்டு, சிறுவர்களைப் பிற்காலத்தின் தகுதிக்கேற்பத் தயாராக்குவதற்கான அம்ஸங்களுடன் பொருந்தி விளங்குகின்றது. ஒவ்வொரு ஜில்லாவிலும் இவ்வாறான பாடசாலைகள் ஏற்படுமாயின், நமது சிறுவர்களுக்கு எத்துணையோ பெரும்பயனளிக்கும். இப்பாடசாலையைப்பற்றிப் பல பெரியோர்கள் சிலாகித்து எழுதியிருக்கின்றனர். இந்த அறிக்கையும் வெகு விஸ்தாரமாய் 50-பக்கங்கள் கொண்டுள்ளது. இப்பாடசாலையின் அபிவிர்த்தியை நாம் மனதார விரும்புகிறோம்.

சீர்திருத்தம்:—

[மாதம் இருமுறைப் பத்திரிகை. திருப்பாதிரிப்புலியூரினின்

---

(1) கண்ணாடி டப்பியிலிருந்து கண்ணாடி வெளியில் ஏன் வந்தது?—மூக்கில் ஏறி உத்தியோகம்செய்ய. (2) மூக்கிலிருந்து இறங்கியபிறகு உடனே டப்பிக்குள் போகாமல் வெளியில் ஏன் கிடந்தது?—அது அஜாக்கிரதையால் தான். (3) அந்த அஜாக்கிரதையால் அது கீழே விழுந்து உடையும்படியானது. (4) உடையவில்லை என்கிறாயா?—அது உன் அதிர்ஷ்டம்.

றும் வெளிவருவது. வருட சந்தா ரூ. 2. ஸ்ரீமான் முத்துக்குமார சாமிப் பாவலர் இதன் ஆசிரியராவர்.]

உள்ளூர் விஷயங்களையே இப் பத்திரிகை பெரிதும் பிரசுரித்து வருகின்றது. முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு இவற்றிலுள்ள குறைகளைப்பற்றி விஸ்தாரமாக விவரிக்கின்றது. சொந்த ஜில்லாவின் நன்மைக்கென்றே வெளிவரும் பத்திரிகைகளும் சில இருக்கவேண்டிய தவசியமே. ஆனால், இது மிகக் கஷ்டமும் சிக்கலுமான தொல்லையுள்ள வேலை. அன்பரது முயற்சிகள் மேன்மேலும் ஓங்கித் தழைப்பனவாக. உள்ளூரின் குறைகளைச் சொல்வதில் பலரது மனவருத்தங்களுக்கும் பாத்திரமாக நேரும். இதன் ஆசிரியர் ஒரு பாவலரா யிருப்பதுடன், லௌகிக விஷயங்களில் விசேஷித்த தேர்ச்சி பெற்றவருமாவர்.

தீண்டுதல் தீண்டாமை மீமாம்சை:—

[ஸ்ரீரங்கம் அட்வெகேட் ஸ்ரீமான் எஸ். வி. ஸ்ரீநிவாசன், பி. ஏ. பி. எல். மொழிபெயர்த்தது.]

இந்நூல் காசி ஹிந்து வித்யாலய உப அத்யக்ஷகர் ஸ்ரீயுத ஆநந்தசங்கர பாபுபாய் துருவ அவர்கள் வடமொழியில் வரைந்ததைத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது தீண்டாமைக்குச் சாஸ்திர ஆதாரமில்லை யென்று பிரமாணங்களோடும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இந்நூலில் பின்வரும் வசனங்கள் குறிப்பிடத் தக்கன:—"இப்போதிருக்கும் தீண்டாச் சாதியார் பண்டைக்காலத்துத் தீண்டாதாரைப்போலவும், அவர்களுக்கு நிகராகவும் சொல்ல முடியாதவரை, தீண்டாமை இவர்களுக்கு சாதிக்க முடியாதென்று உணர வேண்டும். சாஸ்திர மரியாதையை அதிகமாய் வற்புறுத்துவோர்களெல்லாம், கேவலம் புல்மேய ஒரு ஆடு போகும் வழியை ஏனைய ஆடுகள் பின்பற்றும் தன்மையை விட்டுவிட்டு, ஹம்ஸம் எப்படி நீரை நீக்கிப் பாலை மட்டும் குடிக்கின்றதோ, அதுபோல சாஸ்திரங்களுள் உபதேசிக்கப்பட்ட தத்துவங்களை அறிந்து, உபாதிகளையும் மூலக் கொள்கைகளையும் பிரித்து யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்." இந்நூலை விரும்புவோர் இதனை மொழிபெயர்த்த ஸ்ரீமானுக்கு ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெறலாம்.

ஒருவர் ஒரு ஆபத்திலோ தொல்லையிலோ நோயிலோ சிக்கிக்கொண்டு விடுகையில்தான் அவரை அடிக்கடி சென்று கண்டு எல்லா உதவியும் செய்ய வேண்டும். முக்கியமான மனுஷத்துணை எந்த நிமிஷத்துக்கும் காத்து நிற்கிற தென்று அவர் நெஞ்சில்படும்படி செய்து தைரியப்படுத்தவேண்டும். இதுவே உத்தமர்களின் செய்கையாகும்.

தன் கணவனுக்கு 500-ரூபாய் கடன் இருப்பதையும், அதற்காகத் தங்கள் வீட்டை விற்றுவிடப் போவதையும் மனைவி தனது நெருங்கிய தோழிக்கு ரகசியமாகக் கூறுகிறாள். அந்தத் தோழி தனது கணவனுக்கு அதைக்கூற, இம்படியே ஊர் முற்றிலும பரவி வீட்டுக்கடன் சங்கதி வெளியில் வந்து கேவலமாய்ப் போகிறது.

பிரபஞ்ச விலாசம்.

1. ஒரு பணக்காரர் தன் கை விரலில் புட்பராகக் கல்லால் கட்டப் பெற்ற மோதிரத்தை யணிந்திருப்பினும் பிறர் அதனை வைரமென்றே சாதிப்பர். ஆனால் ஒரு ஏழை மனிதன் முன்னோரால் தேடிப் போற்றி வரப்பெற்ற உண்மையான வைர மோதிரத்தை யணிந்திருப்பினுங்கூட அதனை ஏனையோர் புட்பராகக் கல்லாகவே மதித்து இவனுக்கேது வைரக்கல், சுத்த வெள்ளை இமிட்டேஷன் என்று பழிப்பர்.

2. நல்ல காரியத்திற்குப் பணம் கேட்கும்போது பொருளாதார மந்தத்தையும், விளைபொருள்களின் விலையின்மையையும் கூறி அடுக்கும் அன்பர் மறுநாளே தனது குழந்தையின் காது குத்தும் விசேஷத்திற்கு ஏராளமான பொருளை ஆடம்பரமாகச் செலவிடுகின்றார். அதில் சிக்கனத்தைக் காணமுடியவில்லை. சிக்கனம் தருமச் செலவிற்கேதான் போலும்.

3. புதிதாக விவாகஞ் செய்து கொண்ட மங்கையின் மையலில் மயங்கிய ஆடவன், அவ்விவாகத்துக்குக் காரணமாய் நின்றவர்களைப் பிறகு நினைப்பதில்லை.

4. அது பழைய பத்திரிகையே யாயினுமென்ன? எடுத்துப் பத்திரப் படுத்து. புதிது வாங்கக் கிடைக்கும். பழசு கிடைத்தற்கரிய மாணிக்கமாம்.

5. ஒருவர் நமக்கு நெருங்கிய பந்துவாகையால் காரியத்தை முடிப்பாரென நினைத்துச் சகல இரகஸ்ய விஷயங்களையும் அவருக்குக் கடித மூலமாக யெழுத, அவரோ அக் கடிதங்களை எதிரியிடம் காட்டி இலஞ்சம் பெற்றுக்கொள்ளுகிறார்.

6. உன்னிடம் இனிமையாகப் பேசி, உன் வீட்டு விஷயங்களை விசாரிப்பவரிடம் நீ அதைவிடக் கற்கண்டுக்கட்டியாகி ஊர்ச் சங்கதிகளை உரைத்து அவர்கள் ஏமாறும்படியாய் அனுப்பிவிடு.

7. சந்திரசேகரரிடம் சண்முகம் வந்து கண்ணப்பர் ரூபாய் இருபது கைமாத்தாகக் கேட்கிறாரெனக் கூறிப் பெற்றுச் செல்லுகிறான். சிறிது நேரத்தில் அங்கு வந்த நண்பரின்மூலம் கண்ணப்பர் முதல் நாள் காலையிலேயே சென்னைக்குச் சென்றுவிட்டதைத் தெரிந்துகொண்டு சண்முகத்தின் மோசக் கருத்தை நினைந்து வருந்தி ஆட்களை ஏவி சண்முகத்தைத் தேடுகிறார் கடைசியாக சண்முகத்தைக் கண்டுபிடித்து விஷயத்தை விவரிக்க, கண்ணப்பர் பணம் கேட்கச் சொல்லியது உண்மை என்றும், அவர் சென்னைக்குப் புறப்படும் தருணத்தில் அவரிடம் தனக்கு வரவேண்டிய ரூபாயைக் கேட்க, அவர் தன் கணக்காய் ரூபா 20-சந்திரசேகரரிடம் பெற்றுக் கொள்ளச்சொன்னதாகவும் இயம்புறான். மறுநாள் சென்னையினின்றும் வந்த கண்ணப்பர் சந்திரசேகரரிடம் தான் ரூபா 20-தருவதாக ஒத்துக் கொள்ளுகிறார். அவ்வமயம் அங்கு வந்த ஷண்முகத்தை நோக்கிப் பணம் கேட்கும்போதே விஷயத்தைத் துலக்கி இருந்தால் வீண் சந்தேகத்திற்கு இடமில்லையே என்று கூற, முதலிலேயே உண்மையை உரைக்காததற்கு ஷண்முகம் வருத்தமுறுகின்றான்.

சி.வீ. நா. நாராயணன் செட்டியார்.

ஆறு ஆங்கில கர்தற்கடிதங்கள்

1-ம் கடிதம்

பெண்மணியே!

இஷ்டோயிஸ் (Stories) என்னும் மதத்தாருள், உலகத்திலிருக்கும் காலமளவும் மனிதருக்குச் சுகம் மிகுதியோ, துக்கம் மிகுதியோ வென்ற விசாரணை யொன்றிருந்தது. நானேவெனில். காரியங்களை மஹா தெளிவாக ஆலோசிக்க எப்போதும் விரும்பியவனு யிருந்தும், பண்ணும் ஆலோசனை அநேக விதத்தில் சரிப்படாதிருக்கிறது. எனது செய்கை சரியென்பதற்கு சாஸ்திரிபோல நியாயங் கற்பிக்கப் பார்த்தாலும், நான் பிசகிப் போகத்தக்க மனிதனை யல்லாது வேறல்லவென்று எனக்குத் தெரிகிறது.

இரண்டு வருஷங்கட்கு முன் என் மனைவி காலஞ்சென்றபோது நான் அடைந்த அந்த துயரத்தைக் குறித்து என் மனம் வீணுக் கவலைப்படுதலை அன்னியர் சகவாசத்தால் சாந்தப்படுத்தும்பொருட்டு இங்கிலீஷ் சீமையைச் சுற்றி யாத்திரை செய்ய நினைத்தேன். அந்தத் துயரத்தின் வருத்தம் எனக்கேயன்றி மற்றொருவருக்குத் தெரியாது.

நான் செய்த யாத்திரையில் உள்ளபடி இரண்டு காரியங்கள் எனக்குத் தெரிய வந்தன. முதலாவது தேய்வ சித்தத்துக்கு என்னை யோப்புக் கொடுக்கவேண்டியதும், இரண்டாவது மனைவியில்லாமையினால் நான் வருத்தப்படுகிறதுந்தான். யோக்கியரான உன் தமயனர் வீட்டில் எனக்கிருந்த நற்சகவாசத்தால், நான் நினைத்திருந்ததற்கு அதிக நாள் அந்த யோர்க்கு (York) நகரத்தில் தங்க வேண்டியிருந்ததுமல்லாமல், அவ்விடம்விட்டுச் சிலதூரம் போகுமளவும், இன்னமொருதரம் அங்கு திரும்பி வரவேண்டுமென்று எனக்குத் தெரியாமலுமிருந்தது. அது எனெனில், பெண்மணியே! மறு விவாக இச்சை எனக்கு உதித்திருப்பதால் தான். இது உனக்கு நகைப்பா யிருக்குமாகிலும் நான் கூறுவது பொய்யன்று. அன்றியும், நான் விவாகம் செய்ய நினைப்பதும் உன்னையேதான்.

இதெல்லாம் எப்படி வந்ததென்று நீ ஒருவேளை கேட்டபோதிலும், அது எப்படியோவென்றுதான் சொல்வேன். மனஸ்பூர்வமாக சமுசார வாழ்க்கையே எனக்கு இஷ்டமாயிருப்பதால், விதவத்துவத்தை மாற்றிக்கொள்ள வெண்ணியிருக்கிறேன். நான் முகஸ்துதியாகச் சொல்லவில்லை. நம்மில் ஒருவர்மேல் ஒருவருக்கு இருக்கும் இஷ்டத்தைத் தீர்மானித்துக்கொள்ள, நீயும் நானும் உன் தமயனின் வீட்டிலிருந்த நாளே போதுமென்று நினைக்கிறேன். நீ உன் தமயனின் வீட்டுக் காரியங்களை நடப்பிக்கும் விவேக வகை எனக்கு மிக்க ஸந்தோஷமாயிருந்தது உனது தமயனர் விவாகம் செய்துகொள்வதா

நம்மை இழிவு படுத்தினல் எப்படி அது நமக்கு வெறுப்பா யிருக்கிறதோ, அது போலவே நாம் மற்றவர்களை இழிவு படுத்தும்போது அவர்களின் மனம் எவ்வாறு பதைக்குமென்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

யிருக்கிறபடியால், அந்த வேலை நமது கலியாணம் நடக்கும்போது தீர்ந்துவிடும்.

நீ வேறெவரையும் விவாகம் செய்துகொள்ள வாக்கு கொடுத்திருக்கிறதாக நான் கேள்விப்பட்டதில்லை. நீ என் குடும்பத்தையும் கீர்த்தியையும், ஸ்திதியையும் குறித்து ஒரு வகையில் கேள்விப்பட்டிருப்பாயாகையால், நான் இப்போது சொல்லும் வார்த்தை உனக்கு நலமானதாவென்று நீயே தீர்மானித்துக்கொள்ளக்கூடும். எனக்குப் பிள்ளைகள் இருப்பதுஉனக்குத் தடையாயிருக்குமாகில், அதற்கு எளிதான சமாதானம்சொல்லமாட்டுவேன். அதெப்படியெனில், இப்போது பள்ளிக்கூடத்தில் விட்டிருக்கும் இரண்டு சிறு பெண்கள் மாத்திரமே எனக்கு உண்டென்று முன்னரே உன்னிடம் சொல்லியிருக்கிறேன். அவர்களின் விவாகத்துக்கு நான் ஏற்பாடு செய்துவிட்டபடியால், மற்றது முழுமையும் எனக்கே இருக்கிறது. அது என் பிள்ளைகளுக்கு ஒரு நஷ்டமுமில்லாமல், நம் இருவருக்கும் மிஞ்சியேயிருக்கும்.

மாற்றாந்தாயாகுவதைக் குறித்து வழக்கத்திற் சொல்லும் ஆக்ஷேபனைக்கும் எளிதான சமாதானமுண்டு. அதாவது, என் பிள்ளைகளுன்னைச் சகலவிதத்திலும் மரியாதையோடு நடப்பிப்பார்கள். என் பிள்ளைகளின் மீது நான் பக்ஷமாயிருப்பதை ஒரு கெடுதியாக எண்ணுயென்று நினைக்கிறேன். நீ மிகவும் குணசாலியானதால் அப்படி நினையாய். மாற்றாந்தாய்மார் போல்லாதவர்களென்று வழக்கத்தில் சொல்லப்படும் கெட்ட பெயரானது, மனிதருடன் சேரத் தகாதவர்களாயும், எவ்வகை அந்தஸ்திலிருந்தபோதிலும் தங்கள் துஷ்ட குணத்தை விடாதவர்களாயும் இருக்கிற சில கொடுஞ்சூரிகளுடைய நடக்கையினாலே, சாமானியமானவர்கள் சொல்லும் வீண் பேச்சேயென்று புத்திசாலியாகிய நீ நினைக்கத் தகும். இந்த வகர்த்தைகள் உண்மையோ அல்லவோ வென்று உன் நல்ல புத்தியினால் அறிந்துகொள்ளலாம்.

நான் எழுதி யிருப்பதைக் கொண்டு இப்போது சொல்லியிருக்கப்பட்ட விவாகப் பிரஸ்தாபனை உள்ளபடி உனக்கு நலமானதோ அல்லவோ வென்று தெரிந்துகொள்ளவும் உன்னுற் கூடும். நான் விரும்புவதெல்லாம் எனது முழு மனத்தையும் வைத்திருக்கும் ஸ்திரீயாகிய உன்னுடன் இவ்வுலகத்திலிருக்குமளவும் அன்போடும் நேசத்தோடும் நாள் விடுவதற்கேதான். கூடியமட்டும் உன்னைச் சௌக்கியத்தில் வைத்திருக்க, எல்லா வகையிலும் உன் நடக்கை தகுந்திருக்குமென்று நான் நினைப்பது தப்பாதிருக்குமாகில், அதற்காக என்னால இயன்றதையெல்லாம் செய்வேன். உன் உத்திரவுக்காக மிக்க அவாவுடன் காத்திருப்பேனுதலால், அதை அனுப்புவதற்கு ஆலசியம் செய்யாயென்று நம்பியிருக்கிறேன்.

இங்ஙனம்
பெண்மணியே! உண்மையாக
உன்மீது பக்ஷமுள்ள காதலனுகிய
ஜான் வில்லியம்.

இதற்குப் பதில்
அடங்கிய 2-ம் கடிதம்
மறு ஸஞ்சிகையில் வரும்.

தன் வேலைபோற் செய்தல்.

ஒருவரின் வேலையைத் தனது வேலைபோற் செய்யும் தன்மையானது அந்த ஒருவரின் வேலையைத் திறமையாய் நிறைவேற்றியதாகிறது. எஜமானனுடைய வேலையை எஜமானனின் வேலையென்று எண்ணாமல் தன் திருப்திக்காகத் தானாகவே செய்கிற வேலையென்று பாவித்துச் செய்தால், அது அந்த எஜமானனின் வேலையை நன்றாகச் செய்ததாகிறது. தனது தந்தையின் குமாரன் என்று எண்ணாமல் ஒரு தமக்கை தனது தம்பியென்று நினைத்துக்கொண்டு அவனைத் தூக்கிக்கொண்டும் அன்னம் ஊட்டிவித்தும் அன்பு உணர்த்தினல், அது தந்தைக்காக அவரது குமாரனுக்கே செய்ததாகிறது. தகப்பனாரின் அன்பைப் பெறவெண்ணி தனது பாடங்களை வாசியாமல், தான் கல்வி கற்றுத் தேறவேண்டுமென்ற சிரத்தையுடனேயே வாசித்தால், அதுவும் தந்தையின் அன்பைப்பெற வழியாகிறது. ஆகவே, எந்த வேலையையும் தனது சொந்த வேலையாகப் பாவித்துச் செய்வதில்தான் விசேஷ திருப்தியும், அந்த வேலையைசசரிவர முடிக்கச் சக்தியும் உண்டாகும். பிறருடைய வேலையென்று பேதம் கருதிச் செய்யப் போவதில், அந்த வேலை கடனுக்கே செய்து தொலைத்ததாக ஆகும். மூத்தாள் குழந்தைகளென்றும், தன் குழந்தைகளல்லவென்றும், ஒரு மாற்றாந்தாய் எண்ணிக்கொண்டு அக்குழந்தைகளைக் கவனித்தால் அந்தக் கவனிப்பு எப்படியிருக்குமோ அதைப்போலத்தான் பிறருடைய வேலையென்று எண்ணிச் செய்வதுமிருக்கும். அது எவரும் பிறகு நினைக்கும்படியான விசுவாசத்தை யுண்டுபண்ணாது. ஒரு காலத்தில் தன்னிடம் வேலைக்கு இருந்து பிரிந்தவனாயினும் அவன் விசுவாசமாய் உழைத்திருந்தால், அதை அந்த எஜமானன் மறவாமல் பல சமயங்களிலும் நினைத்துக்கொள்ளும்படியாய் இருக்கும். தான் சம்பளம் சரிவரத் தராமல் துரத்தியிருந்தாலுங்கூட, எஜமான் தான் துரத்திய பணியாள் விசுவாசமாய் வேலை செய்திருந்தால் அதை அவன் மறக்க முடியாது. நல்ல பெயரோ கெட்ட பெயரோ, நன்றியோ நன்றி மறத்தலோ எப்படியானபோதிலுங்கூட, நாம் ஒப்புக்கொண்டு செய்கிற பிறரது வேலைகளை நம்முடைய வேலைகளாகவே மனஸ்பூர்வமாய்க் கருதிச் செய்து கடவுளுக்குக் கணக்கு ஒப்புவித்துவிடக் கடவோம். அதில்தான் அதிக சுகமும் சாந்தியும் மனோ சமாதானமும் இருக்கிறது

எதுவும் தன்னிடத்திலிருந்தால் தான் தனக்கு உதவும். நடுராத்திரியில் தீக்குச்சிக்காக நாலைந்து வீடுகளின் கதவைத் தட்டியும் திறக்கப்படவில்லை. பிறகு தன் வீட்டிலேயே ஓரிடத்தில் அகப்பட்டு விளக்கேற்றி வெளிச்சம் காணும் படியானது.

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்ரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

இது உங்களுக்குத் தெரியுமா ?



இந்த விநோத விகட உலகத்திலே, சட்டென்று தங்களின் வார்த்தையை மாற்றிக் கொண்டு, தாங்கள் அப்படிச் சொல்லவேயில்லை யென்றும் சாதித்துவிடுகிற சமர்த்து சிலருக்கு இருக்கிற தல்லவா? ஒரு சங்கதியைப் பேசிக்கொண்டிருக்கையில், வேறொருவர் அங்கு வந்துவிடும்போது உடனே அந்தப் பேச்சை விழுங்கிவிட்டு, வேறு பேச்சைத் தொடங்கி ஏதோ சாதாரணமாக ஸம்பாஷித்துக்கொண் டிருப்பதுபோல சாமர்த்தியம் செய்வதில்லையா? அவ்விதமே, விகடனும் "அது உங்களுக்குத் தெரியுமா? என்று சென்ற தடவை தொடங்கிய என் அதனப் பிரசங்கத்தை இம்முறை "இது உங்களுக்குத் தெரியுமா? என்று மாற்றிக்கொண்டு ஆரம்பிக்கிறேன். கேட்கிறீர்களா !

ஃ

உத்தியோகம் செய்து "முப்பது நாளே போடி, பூவராகனே வாடி" என்று சம்பளம் தன் கைக்கு வந்ததுமே சிலர் ஒரு துள்ளு துள்ளிப் போகிறார்களல்லவா? தங்கள் கையில் எந்தச் செலவுகளும்செய்ய யதேஷ்டமாய்ப் பணம் வேண்டியவரை இருப்பதாக அப்பொழுது நினைத்துவிடுகிறார்கள் ! அந்த சமயத்தில் முன்பு கடுகடுத்த மனைவியும் சிரிப்பும் சிங்காரமுமான முகத்தோடும் பக்கத்திலே வந்து நின்றுகொள்கிறாள். "பணம் வந்து விட்டதா? அந்த நகையை அழித்துப் புது நகையாகச் செய்ய வேண்டுமென்றேனே ! பக்கத்து வீட்டுப் பார்வதி நேற்றுத்தான் நாலு பவுனில் மிளகு சரம் இரட்டையாகச் செய்துகொண்டாள் ! கூலி ஆறு ரூபா தான் ஆச்சுதாம் ! இப்போதே தட்டானிடம் கொடுத்துவிடலாமே" என்கிறாள் ! இவ்விதமே பல பெரிய செலவுகளுக்கு ஜாப்தா தோன்றிக் கொள்கிறது ! வீட்டுக்காரன் இதற்கெல்லாம் இசைந்து கொடுத்துப் பணத்தைச் செலவிடுகிறான். அதற்குப்பின் மஹா பெரியதாகிய வீட்டு நிர்வாகச் செலவுகள் தலைக்கு மேலே இருந்து ஒரு உதை கொடுக்கிறது. அதையும் சமாளித்துப் பார்க்கிறான் ! ஆனால், கைக்கு வந்த சம்பளத்தில் பெரிய தொகை வேறு விஷயங்களில் தீர்ந்துவிட்டதால் வீட்டுச் செலவுக்குக் கண்விழி பிதுங்கித் திண்டாட வருகிறது!

அந்த சமயம் முன்பு சிரித்துக்கொண்டு பக்கத்தில் நின்ற மனைவியோ முற்றிலும் மாறிக்கொண்டு, எண்ணெய் எத்தனைதடவை கடன்வாங்குகிறது; விறகு பாக்கியும் இன்னும் தரவில்லை ; உப்பும் பருப்பும் இல்லையென்று நேற்றே சொன்னது உங்கள் காதில் விழவில்லையா? வீட்டில் ஒரு சாமானும் இல்லையே! எப்படிச் சமையல் செய்கிறது! அப்பப்பா! இந்தத் தரித்திரம் பிடித்த வீட்டில் சமுசாரம் நடத்துவது வெகு பாடான பாடப்பா என்று தன் பேச்சுகளை ஆரம்பித்து விடுகிறுள்!! வீட்டுக்காரனுக்கோ இதைக் கேட்கச் சகிக்கமுடியாமற்போய், "ஏண்டி, வந்த பணத்துக்குப் பல செலவுகளில் இழுத்து விட்டுக் கையிலிருந்ததைக் கரைய வைத்துவிட்டு, இப்போது இல்லாத வேளையில் இடித்துப் பேசி இகழ வந்துவிட்டாயே" என்று ஆத்திரத்துடன் கூறுகிறுன். அதற்கு அவள் "அது என்ன இழவோ" என்று சங்கீதம் பாடிவிட்டுச் சமைக்காமலே பாயைப் போட்டுப் படுத்துக்கொள்கிறுள்! அல்லது பத்தாவது வீட்டுக்குப் பறந்துபோய் அங்கே உட்கார்ந்து விடுகிறுள்! இதற்கு மேலே வீட்டுக்காரனுக்கு ஒரு புதிய ஞானம் பிறக்கிறது! "அடடா! இன்னும் நாம் உலக வாழ்வில் கற்றுக்கொள்ள வேண்டிய பல சங்கதிகள் இருக்கிறதே! முதலில் கைக்கு வந்த சம்பளத்தை மடமடவென்று செலவிட்டு விட்டதாலல்லவா இந்தப் பாடு! கை நிறையப் பணம் இருந்தபொழுதே பின்னுக்கு வீட்டுச் செலவுகளுக்கு ஒரு மாதத்துக்கு வேண்டுமே என்று எண்ணி, ஒரு நிதானமாய்ச் செலவிட்டிருந்தால் இந்த அவதி யில்லையல்லவா? சம்பளம் கைக்கு வந்ததுமே பெரியசெலவுகளைச்செய்யாமல்,அந்த மாதமுழுதும் ஆகவேண்டிய செலவுகளைச் சிக்கனமாய்ச் செய்து, கையில் ஒரு குறித்த தொகையை மிகுத்து வைத்துக்கொண்டு, அடுத்த மாத சம்பளமும் வந்த பிறகு, அப்பால் முன் மாதத்திலே கையில் மிகுத்திருக்கிற பணத்துக்கு நகை முதலிய பெரிய செலவுகளைச் செய்யலாமே யன்றி, பணம் கைக்கு வந்த முதலிலேயே செலவிடுவது புத்திக் குறைவு என்று நினைத்துக்கொள்கிறுன்! அவ்விதமே இனி நடக்கவேண்டுமென்றும் துணிகிறுன்! இது ஒரு புது புத்திமதி தான்! இது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

ஆனல், இதிலோ இன்னென்று! வருகிற சம்பளத்தில் பிரதி மாதமும் ஒரு சிறு தொகை மிச்சம் பிடித்துச் சேர்த்து வைப்பதென்பதிலே எடுத்துக்கொள்ளுகிற தொகையையும், இவ்விதம் மாத முழுதும் செலவிட்டு அப்பால் மிச்சப்படுகிற பணத்திலே எடுத்துக் கொள்ளலாமென்று நினைத்தால் அது சரிகட்டி வரமாட்டாது. கைக்கு வந்த பணம் அத்தனைக்கும் ஒவ்வொரு புதுச் செலவுகள், விருந்துகள் ஏற்பட்டு அவ்வளவும் கரைந்துவிடும்! ஆதலின், மிச்சம் பிடித்துச் சேர்க்கிற சங்கதியில் மட்டும் கைக்குப் பணம் வந்த வுடனேயே தான் மிச்சம் பிடிப்பதற்கு எடுத்துக்கொள்ளவேண்டியதை எடுத்துக்கொண்டு.அதுபோகப் பாக்கியுள்ளதையே தங்களுக்கு வரும் சம்பளமாக நினைத்துக்கொண்டு, அதற்குள்ளாக வரவுக்குத் தக்கின செலவும் வாழ்வுமாய்ச் சரி கட்டிக்கொண்டு, அதிலுங்கூட ஒரு பணம் மிஞ்சித் தன் கையிலிருக்கும்படியாகப்

ஒன்றை ஸதாகாலமும் நினைத்தவாறிருந்தால், அதைச் செய்வதற்கான யுக்திகளும் சக்திகளும் ஒன்று கூடிக்கொண்டு விடலாம்.

பார்த்துக்கொண்டு போகவேண்டும். அப்படிச் செய்வதுதான் ஒழுங்கான குடித்தனத்துக்கு அழகு! இது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

பக்கத்திலிருந்து முத்தமிட்டுக்கொள்வதைவிடத் தூரத்திலிருந்து கடிதங்கள் மூலம் முத்தமிட்டுக்கொள்வதில் அதிக ருசியிருக்கிறதாம்! ஆனால், முதலில் தானே முத்தமிட்டுக் கொள்ளாமலே, தூரத்திலிருந்தவாறு மானே தேனே மயிலே குயிலே என்று கடிதங்களிலேயே முத்தங்கள் கொடுத்துக் கொள்வதில் அத்தனை ருசி, தித்திப்பு ஏற்படாவாம்! அது ஒன்றை அனுபவித்தோ, சுவைத்தோ பாராமலே மனோ கற்பனையில் அனுபவித்ததாகவும் சுவைத்ததாகவும் எண்ணிக்கொள்கிற குருட்டுத்தனமான மனோபாவனையிற் சேர்ந்ததாகுமாம்! அவ்விதமான இன்பானுபவம் அர்த்தமற்றதும், குறுகியதன்மை படைத்ததுமாய் ஆகுமாம்! நேருக்கு நேரே கண்டு இன்பம் பொங்கி முத்தங்களிட்டு ஆசை பெருகி மனமொன்றுகிப் பின்பு பிரிய நேர்ந்தபோது, தான் இருக்கும் தூரமான ஊரில் அந்த முத்தங்களை நீள நீள நினைத்துப் பார்த்துச் சித்தம் பூரித்துப் போய்ப் புளகித மனத்துடனே கடிதங்களில் அந்த முத்தத்தின் அனுபவங்களைத் தெரிவித்து எழுதிக்கொள்கிற மேன்மையிலுள்ள ருசிகரம் தான் உயர்ந்ததாம்! இந்த உயர்ந்த ருசியிலுள்ள பக்குவமும் தித்திப்பும் நேருக்குநேர் காணுமலும், கண்டு முத்தங்களேதும் இடாமலுமே எழுதிக்கொள்கிறகடிதங்களிலே காணமுடியாதாம்! அது சுவையற்றதாம்! மணமிலா மலர்போன்றதாம்! இப்படியே ஒருவரையொருவர் கண்ணுற் கண்டிராமலே எழுதிக்கொள்கிற கடிதங்களுக்கும், ஒருவரையொருவர் கண்டு குலாவி மகிழ்ந்துவிட்டு அந்த அன்பின் பெருக்கால் எழுதிக்கொள்கிற கடிதங்களுக்கும் மெத்த மெத்த பேதம் இருக்கவே செய்யுமாம்! இது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

கடிதங்களுக்குத் தானு குறைவு? எவ்வளவோ கடிதங்கள் எழுதிக் கொள்ளலாம்! எனக்கு ஒரு கடிதம் எழுதக்கூடாதா என்று சிலர் கேட்பது வழக்கம். எழுதாமலென்ன, எழுதுவதற்கு விஷயம் கிடைத்தாலன்றே எழுதலாம்! எந்தச் சரக்குமே சங்கதியுமேயின்றி, "இவ்விடம் க்ஷேமம், அவ்விடம் க்ஷேமம்" என்று எழுதிக்கொள்வதில் என்ன ருசியிருக்கப்போகிறது! "அவன் ஊருக்கெல்லாம் கடிதங்கள் எழுதுவான். எனக்கு எழுத என்றால் கையே வராது என்று சொல்லிச் சலித்துக் கொள்கிறவர்களு முண்டு. கடிதம் பரஸ்பரம் எழுதிக்கொள்வதற்கு முதலில் மனதிலே அன்பு இருக்க வேண்டும். ஒருவரின் க்ஷேமத்தை ஒருவர் அறிந்துகொள்வதில் ஆவல் தடித்துப்போய்க் குதிக்கவேண்டும்! மனதில் அன்பு பொங்கினுல், கடிதம் எழுதுவதற்குப் பல விஷயங்களும் ஸம்பவங்களும் தன்னில் தானே தோன்றிக்கொண்டுவிடும்! அதிலே கடிதங்களும் பல பக்கங்களுக்கு மேல் பெருகிநிறைந்துவிடும்! அன்பு இல்லாவிடில் எந்தச் சங்கதிகளுமே எழுதுவதற்கு அகப்படா. ஒப்புக்கு எழுதிக் கொள்ளும் ஒப்பாரிக் கடிதங்களில்

ஒரு பெண் தன்னுடைய நடவடிக்கைகள் விவேகமான காரியங்களாயில்லாமலிருந்தாலும், யாவற்றையும் தன் கணவனே குமாரனே ஆதரித்தே வரவேண்டுமென்று சொல்வது சுத்த அசட்டுத்தனமாகும்.

எந்தச் சுவையுமே இராது. எழுதிக் கொள்ளவும் ரஸமான விஷயங்கள் கிடைக்கமாட்டா! பேருக்கு இரண்டு பக்கங்கள் வரைந்ததாக இருக்குமே யன்றி, சங்கதி யென்னவென்று கவ னிப்பின் ஒன்றுமே காணப்பட மாட்டா! வியாபார ஸ்தலங்களி லிருந்து எவ்வளவோ கடிதங்கள் பிரதிதினமும் தபாலுக்குச் செல்லு கின்றனவே! அவற்றில் அன்பு இருக் கிறதா? வியாபார நோக்கத்துடன், அதற்காக ஒரு கூழைக்கும்பிடு போடு வதுடனே அவை பூர்த்தி பெறுகின் றன! அந்த விதமாயாவது, ஒரு வியா பார நோக்கமேனும் இருந்தால்தான் கடிதம் எழுதத் தனக்குத்தானே தூண்டுதல் உண்டாகும்! அன்பு இல் லாமற் போனல் போகட்டும்!—அந்த அன்புக்குப் பதிலாக—சுயநலம்—கோபம் — விரோதம் — சச்சரவு—துவேஷம் — ஆத்திரம் — ஏதாவ தொன்று புறப்பட்டுக் கொண்டால், அப்பொழுது வெகு ஜோராகவும், காரமாகவும் கடிதங்கள் எழுதிக் கொள்ள முடியும்! மடமடவென்று எழுதவும் வரும்! ஆனல், இவற்றிலே இன்பம் காண இயலா! பரஸ்பரம் ஆத்திர கோபதாபங்களே அதிகரித் துப் புகையும்! புகைந்து பெரு நெருப் பாகவும் பற்றிக்கொள்ளலாம். தபாற் செலவுக்குக் காசு வேறே தந்து, இவ் விதம் பிறருக்கு ஏமாற்றத்தையோ, கோபத்தையோ, விரோதப் பகைமை களேயோ கடிதங்களின்மூலம் பெருக் குவதைவிட, அந்தக் கடிதங்களை எழு தாமலே இருந்துவிடுவது ஒரு மேலான மேல் அல்லவா? ஒருவர் சந்தோஷிக்கும்படியான சங்கதிகள் ஒரு கடிதத்திலிருந்தால், அந்தக் கடிதத்திற்குத் தபாலுக்காகச் செல விட்ட பணம் பயனுள்ளதா யிருக்கும்! அவ்விதமின்றி, பிறர் மனத்தைப் புண் படுத்தக் கடிதங்கள் எழுதி அதற்குச் செலவிடுகிற பணத்தால் என்ன பயன்? பரஸ்பரம் அவசர காரியங்கள் நேரிட்டு உதவிகளுக்காகக் கடிதங்கள் எழுதிக்கொள்வதானல், அப்போது கடிதம் எழுதச் சரக்குகளும் கிடைத்து, அந்தக் கடிதங்கள் பிரயோ ஜனப்படக்கூடியதாகவும் ஆகும்! மனத்தில் அன்பு இன்றி, நேரில் காணும்போதுமட்டும் பல்லிளிக்கிற பாசாங்கு வித்தைக்காரர்கட்குக் கடி தங்கள் எழுதினலென்ன? எழுதாமற் போனலென்ன?—இரண்டும் ஒன்று தானே! தான் பிணியாய்க் கிடக்கை யில் வந்து பார்த்துவிட்டுச் சென்ற உறவினர், நண்பர்போன்ருேர், பிறகு "எப்படி யிருக்கிருய், செத்தாயா, பிழைத்தாயா" என்றுகூட எழுதிக் கேட்டு விசாரிக்காமலிருந்துவிடுகை யில், அந்த நாறிப்போன நாற்றக் கூட்டத்துக்குத் தான் குணப்பட்டு விட்டதாகவும், நேற்றுதான் எண்ணெ யிட்டு ஸ்நானம் செய்ததாகவும் தானே வலியக் கடிதம் ஏன் எழுதிக்கொள்ள வேண்டுமோ? அதனல் யாது பயனே? அது தானே வலியச் சென்று உறவு நேசம் பிடிக்கிற வெறுக்கத்தகுந்த தன்மதிப்பற்ற சங்கதியல்லவோ! கடிதங்கள்எழுதிக்கொள்வதைப்பற்றி இன்னும் எவ்வளவோ விகடன் சொல்லலாம்! இது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

விசுவாசமில்லாத ஒருவன் ஒரு உதவியைச் செய்தால், அது அதிசய

வழியில் ஒருவரைக்கண்டு ஆவலோடும் பேசியது ஒருகாலம்! பிறகு அந்த ஒருவர் நேசத்தன்மையற்ற—தன் காரியத்தில் கண்ணுயுள்ள—மனிதனெனத் தெரிந்துவிட்டபோது கண்டும் காணததுபோன்று வெறுப்புடன் சென்று விடுவதும் ஒருகாலம்!

மாகவும், உயர்வாகவும் கருதப்படும். விசுவாசங்கெட்ட மனைவி தன் கணவன் வியாதிப் படுக்கையா யிருக்கையில் அவனது மல ஜலங்களை வாரிச் சுத்தி செய்தால், விசுவாசமற்ற சண்டாளிக்கு இந்த நல்ல புத்தி எங்கிருந்து உண்டாயிற்றென்று அவன் வியப்பும் மகிழ்வும் கொள்வான். விசுவாசமுள்ள மனைவியைக் கொண்டவன் அவள் தனது மலஜலங்களை எடுத்துச் சுத்தி செய்தால், அதை அவளது ஒரு கடமையாக எண்ணிச் செய்வதாக எண்ணுவானே யன்றி அதற்காக ஒரு தனியாய்ப் புது சந்தோஷத்தை உண்டாக்கிக்கொள்ளமாட்டான். எந்த விசுவாசமும் காட்டவேண்டியவர்களல்லாத தூர அன்னியர்கள் நமக்கு ஒரு உதவியைச் செய்தால், அதை எவ்வளவோ உயர்வாக நினைக்கிறோம். எதுவுமே செய்யாதவர்கள் ஒரு உதவி செய்யும் போதுதான் அதிக ஆநந்த முண்டாகிறது! இது உங்களுக்குத் தெரியுமா?

ஃ

தன் ஊரிலும் தன் வீட்டிலுமுள்ள சுயேச்சையைப்போல் தான் செல்லுகிற வெளியூர்களில் எந்த இடத்திலும் இருக்க முடியாதாம்! சிறிதேனும் நாணியோ, கோணியோ, பின்னடைந்தோதான் இருக்க முடியுமாம்! இது உங்களுக்குத் தெரியுமா? ஒன்றைப் பிடித்துத் தூக்கி எடுக்கையிலே கையின் பலத்தைவிட இடுப்பின் பலமே அதிகமாக வேண்டுமாம்! கையால் தூக்கப்படுகிற கனத்தை இடுப்புத் தாங்கிக்கொண்டால்தான், தூக்கி எடுக்கப்போன ஒன்றைச் சமாளித்துத் தூக்குவதற்கு முடியுமாம்! அவ்விதமின்றி இடுப்பு பிடித்துக்கொண்டால், கையில் பலமிருந்தாலும் தூக்கி எடுக்க முடியாதாம்! படுக்கையில் கிடப்பவனுக்குக் கையில் எவ்வளவோ பலம் இருக்கலாம்! அவன் ஒரு அறை அறைந்தால் பத்துப் பற்கள் உதிரலாம். ஆனால், இடுப்பில் பலமில்லாததால், அவனைத் தூக்கி உட்கார வைக்கவேண்டி யிருக்கிறது! இப்படியே ஒவ்வொரு அவயவத்திற்கு ஒவ்வொரு பிரதான சக்தி யிருக்கிறதாம்! அவ்விதமே ஒவ்வொரு மனுஷ்யனிடமும் ஒவ்வொரு சக்தி காணப்படுகிறதாம்! இது உங்கட்குத் தெரியுமா?

ஃ

பிறர் தன்னை வெளியில் போய்வரும்படி ஒரு வேலைக்கு ஏவும்பொழுது தான் அந்த சமயம் பலகாரமோ அன்னமோ புசித்துக்கொண்டிருந்து, தனக்கு வெளியில்போக விருப்பமில்லாதிருந்தால், இன்னும் அதிக மெதுவாகப் புசிக்கத்தொடங்கி, நேரத்தைப் போக்கிக்கொண்டே இருக்க வேண்டுமாம்! வேலைக்கு ஏவியவர்களும் புசித்துக்கொண்டிருக்கையில் அவசரப்படுத்த முடியாம லிருந்து விடுவார்களாம்! இது உங்களுக்குத் தெரியுமா? இத்துடன் "தெரியுமா?" என்பது போதுமென்று விகடன் என் கடையைக் கட்டிவிடுகிறேன்! மற்றவைகளை நீங்களே அனுபவத்தில் தொட்டு—தடவி—கண்டு கொள்ளுங்கள்! ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா!!

அதிகப் படிப்பு சிலருக்குக் கபடபுத்தியை வளர்க்கிறது. ஒருவனை எவ்வளவு கபடன் என்று அறிவதற்கு அவன் எவ்வளவுவரை படித்தவனென்று தெரிந்துகொண்டால் போதுமாம். சிலருடைய கபடம் அறியமுடியாமலே இருந்து, பிறகு அவர்கள் விலகி வேற்று மனிதர்களாகும்போதுதான் அறிய நேர்கிறது.



விகட வெற்றிவேற்கை.

எழுத்தறிவித்தவன் ஏமாத எணியே.
கல்விக்கழகு கபடப் பெருக்கே.
செல்வர்க்கழகு சேர்இனம் மறைத்தல்.
வேதியர்க்கழகு வேற்றுமை வளர்த்தல்.
மன்னவர்க்கழகு வரிபல விதித்தல்.
வைசியர்க்கழகு வஞ்சக நடிப்பே.
உழவர்க்கழகு ஊர் முழுதுங்கடன்.
மந்திரிக்கழகு வருவாயில் கண்.
தந்திரிக்கழகு தன்னலத்திற் கண்.
உண்டிக்கழகு ஒருவனாய் உண்ணல்.
பெண்டிற்கழகு பேசுபல் வம்புகள்.
குலமகட்கழகு குடித்தனச் சண்டை.
அறிவோர்க்கழகு அறிந்ததை மறத்தல்.
வறியோர்க்கழகு வாழ்ந்தது சொல்லல்.
பெரியார் புக(ழ்) அவர் பிணமான பின்பே.
சிறியோர் பெருமை சீவித்திருக்கையில்.
பெற்றோர் கபடம் பிள்ளையும் கொள்வான்.
உற்றோர் என்பவர் உள்ளள(வு) உண்போர்.
பெண்வாய் மணத்தின் பின்பே தெரியும்.
அடினும் பாலுக்குச் சக்கரை வேண்டும்.
சுடினும் கணவனுக்குச் சில பணியாரமே.
அரைக்கீரைச் சிக்கனக் கறியமுதாகும்.
புகைக்கும் கலகம் தலையை அறுக்கும்.
கலக்கிப் பிரிப்பது தான் வாழ்வதற்கே.
பெருமையும் சிறுமையும் சலவைத் துணியிலே.

குடிகள் சுகப்படுவதற்கு முனிசிபல் வரிகள் இன்னும் அதிகமாக வேண்டுமாம்!

வீட்டுச் சமாதானத்துக்கு வாய் அதிகமுள்ள மனைவி இருந்தால் போதுமாம்!

தான் என்ன சொன்னாலும் சகித்துக் கேட்பதற்கு அவனை ஒரு சங்கதியில் சிக்கவைத்து விடவேண்டுமாம்!

வரவுக்குமீறிச் செலவிட்டால்தான் கடன் வாரண்டு ஜெயில்—ஏற்படாதிருக்குமாம்!

பார்வைக்கு அழகாயிருக்கிற மிளகாயின் குணம் நெருங்கிக்கடித்துப்பார்த்தால்தெரியுமாம்!

நன்றாகச்செய்த சமையலுக்கு உண்ணும்போது ஒருகலகம் இருந்தால்தான் அதிக ருசியா யிருக்குமாம்!

ரூபாய்க்கு எட்டு படியரிசி கிடைத்தாலும்,பெட்டியில் பணமில்லையாம்!

நான் விழுந்தால் சுலபத்தில் எழுந்துநிற்கலாம்; நீ விழுந்தால் அவ்வளவுடன் தொலைந்ததே யென்று மண் சுவர் செங்கற் சுவரைப் பார்த்துச் சொல்லிற்றாம்!

ஊரின் விபசாரத்தை யடக்கினாலும், குடித்தன விபசாரத்தை யடக்க முடியாதாம்!

பாதிவயிற்றுக்கும் பற்றாதபடி சோறு இட்டால்தான் வீட்டுக்கு வந்தவர்கள் சந்தோஷப்படுவார்களாம்!

நெருப்புப்பெட்டியின் விலை யுயர்ந்துவிட்டதில் சுருட்டு, பீடி, சிகரெட் நேசர்கள் கண்ணீர் விடுகிறார்களாம்!

சீக்கிரம் புறப்பட்டு வருவதாக மாம்பழம் தந்தி கொடுத்திருக்கிறதாம்!

வந்து விட்டானே யென்று அவனோடு குலாவிப் பேசவேண்டி யிருக்கிறதாம்!

தான் ஏமாற்ற முடியாதவனைக் கண்டால் வெறுப்புடனே ரொம்ப ரொம்ப எரிச்சல்எடுக்கிறதாம்!

ஆஹா! அப்படியா?

லண்டனிலும் பொடி!

மார்ச்சுமீ 25உ லண்டனி லிருந்து ஆகாயத் தபால் மூலம் ஓர் நூதன சமாசாரம் வந்திருக்கிறது. மாதர்களுக்கும் ஓர் புதிய நாகரீக வழக்கம் இவ்வருஷம் முதல் தொடங்கி யிருக்கிறதாம். ஆடவர்களைப் பிடித்த 'பொடி'ப் பேய் அணங்குகளையும் பிடிக்கிறதாம். லண்டனிலுள்ள ஓர் பெரிய பொடி வியாபாரி கூறுவதாவது:—"வரவரப் பெண்களிடம் பொடி போடும் வழக்கம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. அவர்களுக்குப் பொடியின்மீது ஆசையில்லாவிடினும் அதை நாகரீகத்தின் முதிர்ச்சியை யறிவிப்பதாகக் கருதுகின்றனராம். பொடிக் கடைக்காரர்கள் தங்களது புதிய வாடிக்கைக்காரர்களுள் பெண்களே அதிகம் என்றுரைக்கின்றனர்." இதனுல் பொடிக்கு ஓர் கிராக்கி ஏற்படுவதுடன் அழகிய சிறு டப்பிகளுக்கும் எதேஷ்டமாகக் கிராக்கி யுண்டாகிறது. பெண்களுக்குக் கணவன் மாரிடமுள்ள ஆசை குறையக் குறைய வேறெங்காயினும் அந்த ஆசை புதிதாக உண்டாகவேண்டுமல்லவா? இப்பொழுது புரிந்ததா? பொடியின் மீது அவர்கள் ஆசை அதிகரிப்பதின் மர்மம்? மேலும், ஆடவர்களுடன் சமத்வம் பாராட்டும் அணங்குகளான அவர்களுக்கு ஏக தேசமாய் ஓர் வஸ்துவை உபயோகிக்க உரிமை பெறவே, இந்தப்பொடியைக் கைப்பற்றி; ஆடவர்களுடன் சரி சரியாய் உட்கார்ந்து மூக்கில் ஏற்றி மூக்குத் துண்டால் சீந்துவதற்கும், மூக்குச் சளியுடன் அந்தத் துண்டைத் தங்கள் கைப்பையில் போட்டுக் கொள்வதற்கும் சமத்துவம் பாராட்டத் தொடங்கினுர்கள் போலும்! பொடி வியாபாரிகளே! உங்களுக்கு சுக்கிரதசை தான்.

ஃ

கிழப்பிரபுவின் காதல்:—

யோக்ஹாமா ஓட்டலில் வேலை செய்து கொண்டிருந்த மிஸ். டோமிகோ குரோடா என்னும் பதினறு வயது நிரம்பாத ஜப்பான் சுந்தரி யொருவளைக் கண்டு மையலான ஓர் அமெரிக்கா தேசத்துப் பிரபு அவளுக்கு வயது வந்ததும் தன்னை மணம் செய்து கொள்ளவேண்டுமென்று பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டு அவளுக்கு 2,000,000 பவுன்கள் அளித்திருக்கிருராம். அம்மா திரண்டு வருவதற்குள் ஐயா உருண்டு விட்டால் அம்மாளுக்குக் கவலையேயில்லை! ஐயாவுக்கு இப்பொழுதே எழுபத்தோராண்டுகள் நிரம்பி விட்டன. குட்டிச்சாத்தான் வர்க்கத்தில் காமப் பேயும் ஒன்று!

ஃ

இத்தாலியில் விவாக ரத்து:—

மேல் நாட்டு நாகரீகம் மிளிர்ந்த இதாலி தேசத்தில் விவாகரத்து என்பது சட்ட பூர்வமாக அனுமதி யளிக்கப்படவில்லையாம். ரத்து செய்து கொள்ள விரும்பும் ஆணே பெண்

அபிப்பிராயபேத மேற்படுகிற எந்த விஷயத்திலும் அன்போடும் தாழ்மையோடும் தனது கருத்தைத் தெரிவிப்பின், அதை மற்றவர்களும் பிரியமாய் ஏற்றுக்கொள்ளக்கூடும். அடக்கம் உயர்வு தரும்.

ணே நாட்டைவிட்டு வேறு தேசத்திற்குச் சென்று அவ்வூர் சட்டப்படி ரத்து செய்து கொண்டாலன்றி மனைவியும் கணவனும் நினைத்த சமயத்தில் விவாகத்தை ரத்து செய்து கொள்வது இத்தாலியில் இயலாத காரியமாம். மிருகங்களை யொப்ப விரும்பும் போது ஓர் மனைவியும் வேண்டாமெனில் பழைய 'சட்டை'யைக் கழற்றுவதுபோல் அவளை உதறித் தள்ளுவதுமே நாகரீகமெனக் கருதும் மேல் நாட்டினரின் புத்தி விசேஷத்தை யென்னவென் றுரைப்பது?

ஃ

செயற்கை ஹிருதயம்:—

பாக்டஸாரோவ் என்னுமிடத்தில் டாக்டர்கள் மனிதனின் ஹிருதயம் போல் செய்து, ஒருவனுடைய ஹிருதயத்தை வெளியிலெடுத்து சிகிச்சை செய்யும் சமயத்தில் இதை உபயோகிக்கின்றனராம் இதனால் அம்மனிதன் உயிருடன் சிகிச்சை முடியும் வரையிலிருக்கவியலுமாம்.

ஃ

25-குழந்தைகள் பெற்ற மாது:—

இதாலி தேசத்தில் சிக்னோரா பர்லானிடோ என்னும் மாது சில நாட்களுக்கு முன் தனது இருபத்தைந்தாம் குழந்தையைப் பெற்றெடுத்தாளாம். அவளுக்கு சுமார் 46-வயதிருக்குமாம். அவளுடைய கணவனுக்கும் சற்றேறக்குறைய அதே வயது தானும். அவர்களுக்கு மணமான வருஷம் முதல் தவருது ஒவ்வோராண்டும் ஓர் குழந்தையைப் பெற்று வருகின்றார்களாம். இருபத்தைந்து குழந்தைகளுள் பதினெட்டு குழந்தைகள் பூர்ண சரீர சௌக்யத்துடனிருக்கின்றன. இப்படியே ஒவ்வொரு மாதம் பிரசவிப்பதாயின் "கர்ப்பத்தடை அவசியம் வேண்டியதுதான்" என்பதை யார் மறுக்கக் கூடும்?

ஃ

பெண் வக்கீல்கள்:—

பல்கேரியா தேசத்தில் வெகு நாட்களாய் மாதர்கள் வக்கீல் உத்தியோகம் வகிக்க அனுமதியளிக்கப்படவில்லை அத்தடையை விலக்க சவர்ன்மெண்டைப் பன்முறை வற்புறுத்தியும் அந்தப் பிரேரணைகள் சட்டமாகாமல் பார்லிமெண்டில் தோற்கடிக்கப்படுகின்றனவாம். மாதர்களின் சூட்சும புத்தியும் கல்வி யறிவும் அதிகமாக அதிகமாக ஆடவர்களுக்கு அவர்கள் மீது பொறுமையும் அதிகரிக்கின்றது. மறுபடி இவ்வருஷம் பார்லிமெண்டில் இதே தீர்மானத்தை வாதத்திற்குக் கொண்டுவர உத்தேசித்திருக்கின்றனராம். தற்சமயம் வக்கீல் உத்தியோகத்தைத் திறமையுடன் வகிக்கச் சாமர்த்தியம் வாய்ந்த 105-பெண்கள் பல்கேரியாவிலிருக்கின்றனராம்! ஆடவர்களது பொறுமையின் போக்கைப்பாருங்கள்.

ஃ

அண்டை வீட்டு நெய்!

அமெரிக்கா பிரசிடெண்டு ரூஸ்வெல்ட் அவர்களின் பிறந்த தினத்தில் சந்தோஷச் செய்தியை 'அலபாமா' வினின்று அனுப்பிய தந்தியில் 1,38,000 வார்த்தைகளி லிருந்த

வாரப்பத்திரிகை, தினசரிப்பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு வேண்டிய வர்த்தமானங்கள் கிடைப்பதால் அதைக்கொண்டு பத்திரிகையை நிறப்புதற்குச் சுலபமாகிறது. மாதப் பத்திரிகையின் ஆசிரியர்கட்கோ அன்னோரின் உள்ளத்திலிருந்தே புதிய சரக்குகள் வெளிவரவேண்டி யிருக்கிறது.

னவாம். அதைத் தந்தியிலடிக்க இரண்டு நாட்கள் பிடித்தனவாம்! கவர்ன்மெண்டுப் பணம்தானே! சொந்தக் காசாயிருந்தாலல்லவா சிக்கனம் தெரியும்? "அண்டை வீட்டு நெய்யே! என் பெண்டாட்டி கையே" என்பது பழமொழி. அதாவது, பக்கத்து வீட்டு நெய்யானால் தாராளமாய் உபயோகிக்கலாமாம். அதற்குத் தன் காசு செலவாகவில்லையல்லவா?

ஃ

ஜப்பானிய நம்பிக்கைக் கதை:--

சந்திரனிலுள்ள மலைகள் மானைப் போல் இருப்பதன் காரணத்தைப் பற்றி ஜப்பான் பண்டைக் கதைகளில் விநோதமானதோர் சிறு கதையுண்டு. ஓர் கிழவன் தனது மானை வெகு செல்வமாய் வளர்த்து வந்தானாம். ஒரு நாள் மானுக்கு வைத்திருந்த உணவை ஓர் கரடி வந்து தின்றுவிட்டதாம். அதைப் பார்த்துக் கிழவன் கோபத்துடன் கரடியைக் கட்டிப்போட்டு காட்டிற்குப் போய் மரம் வெட்டிவரச் சென்றானாம். அவன் மனைவி கரடி கட்டப்பட்டிருப்பதைக் கண்டு அதன் மீது பரிதாபம் மிகுந்து அதை அவிழ்த்து விட்டாளாம். கரடி உடனே "என்னைக் கட்டியவன் மீது என் வஞ்சத்தைத் தீர்ப்பேன்!" என்று சொல்லி விட்டுக் கிழவன்மனைவியைக்கொன்று அவள் உடலில் தான் புகுந்து கொண்டு அவள் சமையல் செய்வதைப்போல் கரடி சமைத்து அதில் விஷம் கலந்து வைத்திருந்ததாம். இதையறிந்த மான் காட்டிற்கு ஓடிப் போய் விஷ மூலிகைகளை மாற்றும் சக்திபுள்ள ஓர் கனியைத் தன் எஜமானனுக் களித்ததாம். அதைச் சாப்பிட்டபின் கிழவன் வீடு திரும்பவும் அவன் மனைவிபோல் நடித்த கரடி அவனுக்கு ஆகாரமளித்ததாம். அதையுண்ட பின்பும் அவன் இறக்காமலிருப்பது கண்ட கரடி அவனைக் கொலை செய்ய வேறு உபாயம் தேடிற்றும். தன் எஜமானனைக் காப்பாற்றுவதற்காக மான் ஓர் பாம்பு போல் வேஷம் போட்டுக்கொண்டு கரடியைக் கடித்ததாம். கோபம் கொண்ட கரடி பாம்பைக் கொன்றுவிட்டது. மான் தன் எஜமானனைக் காப்பாற்றுவதற்காகத் தன் உயிரையும் தியாகம் செய்தது. அதற்குள் கரடிக்கு விஷம் தலைக்கேறி அதுவும் மாண்டது. மானின் எஜமான விசுவாசத்தைக் கண்டு மெச்சிய கடவுள் எஜமான பக்தியை உலகினர்க்கு மானின் கதையின் மூலம் எப்பொழுதும் ஞாபகமூட்ட "சந்திரனிலுள்ள மலைகள் பூமியினர்க்கு மானைப்போல் தெரியக் கடவது!" என்றாராம். அது முதல் தான் சந்திரனின் களங்கம் மானுருவாகியதாம்!

அதற்குமுன் அவைகள் எப்படியிருந்தனவென்று கதையில் எங்கு தேடினும் காணப் படவில்லை. அதன் ஆசிரியர் அதையும் எழுதியிருந்தால் நாம் அவருக்கு எவ்வளவோ நன்றியறிதலைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கலாம்!

K. V. S. வாஸ்.

அநியாயம் செய்கிறவர்கள் சுகமாக வாழ்கிறார்களே யென்று ஒருவன் கலங்கினால், அவன் பொறுமையோடிருந்து பார்க்கட்டும். அநியாயஸ்தர்கள் குதூகலிப்பதெல்லாம் சில நாட்கள் வரையுமே. அவர்கள் விடுவித்துக்கொள்ள முடியாத ஒரு பெரிய வலையையும், அவர்களை ஒரே அடியில் வீழ்த்துதற்குப் பலமான சம்மட்டியையும் பகவான் சித்தமாக வைத்துக்கொண்டு அதற்குரிய காலத்தை எதிர்நோக்கி நிற்கிறார். இது உண்மை.

நடுத்தரத்தின் அவஸ்தை.

(சு. ஸ்ரீ)

ஒன்று, மேன்மையான அந்தஸ்தில் இருக்கவேண்டும்; அல்லது தாழ்மையான அந்தஸ்த்தில் இருக்கவேண்டும். இதில் இரண்டிலும் ஏதாவதொன்றில் இராமல் நடுத்தரத்தில் இருப்பவர்களின் அவஸ்தையே அதிகம். பணக்காரர்கள் என்று மதிக்கப்படவேண்டும்; அல்லது ஏழை, ஏதோ அன்றைய சாப்பாட்டிற்கே 'தாளம் போடுகிறவன்' என்று சொல்லப்படவேண்டும். இரண்டிலும் கலவாது இருக்கப்பட்டவர்களின் அவஸ்தைதான் மிகவும் பரிதாபகரமானது. "அவனுக்கென்ன மாதம் பிறந்தால் ரூபா 50-சம்பாதிக்கிறாள். ஒரு வாரம் அவன் வீட்டில் தங்கிவிட்டு வருவதில் என்ன முழுகிப்போகிறது" என்று சொல்லி விடுகிறாள் ஒருவனின் தாயார். போகும் விருந்தாளி அவர்களின் வீட்டுக் கஷ்டம் அறிவானா? ஒரு விருந்தாளி ஒரு வாரம் இருந்து போவதில் வீட்டுக்காரன் எவ்வளவு அவஸ்தைப் படுகிறான் என்பதை அந்த ஸ்தானத்திலிருப்பவரே அறிவார். சம்பளம் 50-ரூபாயானாலும், அது வருமுன்பே 20-ரூபாய் முன் கடன் ஏற்பட்டு விடுகிறதே! ரூபாய் 50-சம்பாதிக்கும் அவன் அவனுடைய வருவாய்க்குத் தகுந்தபடி அவனை உபசரிக்கவேண்டியவனாகிறான். அவன் ஒரு ஏழையாக இருந்தாலோ அவன் வீட்டிற்கு ஒரு விருந்தாளி ஒரு வாரம் தங்குவதற்கு போகவும் மாட்டான். அப்படிப் போனாலும் ஒரு பொழுது உணவுடனே திருப்திகொண்டு பிரிந்து வந்துவிடுவான். அல்லது பணக்காரனாய் அவன் இருந்தால் விருந்தினர் வந்ததும் போனதும் ஒரு பாரமாகவோ ஒரு காரியமாகவோ தோன்றாது. ஏழைகள் வீட்டில் அங்கு வந்தவருக்கு "தனி விருந்துச் செலவு"போல் உபசரிப்புகள் நடப்பதால் அது ஒரு பாரமாகப்படும். சீமான்களின் இல்லங்களிலோ வீட்டிலுள்ளதையே பரிமாறுவார்களாதலின், அது ஒரு பிரயாசையாகத் தோன்றாது.

ஃ

"மூத்த பிள்ளை" என்று சுப்பன் அவனுடைய பெற்றோர்களால் மிகவும் பிரியமாய் வளர்க்கப்படுகிறான். அவனுக்கு வேண்டியவைகளை அவனுடைய பெற்றோர்கள் தங்களுக்குத் தேவையாயிருந்தால் எப்படிச் செய்வார்களோ அப்படிச் செய்கிறார்கள். கடைசிப்பிள்ளையாகிய 2-வயது 'கிச்சு'வும் இதே இன்பத்தை அனுபவிக்கிறான். அவனுடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு சொல்லும்

உடன் பிறவாத ஒரு தமக்கை தனது அபிமானத்தம்பிக்கு—"என்னால் ஏதேனும் உதவி வேண்டுமானால் தெரிவிக்கவும்; சற்றும் சங்கோசம் வேண்டாம்; சுதந்திரம் இருக்கட்டும்"—என்று கடிதம் எழுதினார். எல்லாம் அன்பின் மகத்துவமே.

அமிர்தமாகக் காண்கிறது. அவன் திட்டினுலும் அடித்தாலும் அதுவும் செல்வமாகத் தோற்றுவிக்கிறது. ஆனல், இவர்களுக்கு நடுவிலிருக்கும் ராமுவுக்கு என்ன மரியாதை நடக்கிறது தெரியுமா? ஒரே வயிற்றில் பிறந்த பிள்ளைகள் தான் இவர்களெல்லோரும். ராமுவும் வார்த்தை கொஞ்சினுற்போல் கேட்டு விட்டால் போதும்; அதற்கு அடிகளும் திட்டுகளும் வெகுமதி கொடுக்கப்படுகின்றன. ஏன் இந்த வேற்றுமையான பாவிப்பு? அவன் நடுவில் தோன்றியவன் என்பதால் தான். அவனுக்குப்பின் ஒரு தம்பி பிறந்து விட்டதில் அவன் செல்வாக்கெல்லாம் ஓடி விட்டது. அவன் 'நடு' ஆனுன்.

ஃ

ஒன்று, அதிகம் படித்து எல்லாம் பாஸ் செய்து விட்டவன் என்று பேர் வாங்கவேண்டும்; அல்லது அவன் என்ன படித்தானு கிழித்தானு என்று சொல்லும்படி இரண்டு மூன்று வகுப்புக்குள் அவன் வித்தியாரேகை சென்றிருக்கவேண்டும். இரண்டிலும் இல்லாது ஏதோ நடுத்தரமாகப்படித்திருக்கிறனே. அவன் பாடுதான் திண்டாட்டம். படிக்காதவர்கள் கூட்டத்தில் அவனுக்கு அதில்சேர இஷ்டம் கிடையாது. ஆனல், படித்தவர்கள் கூட்டத்திலாவது சேர்ந்து தன்னுடைய அபிப்பிராயத்தையும் அவர்களுடைய அபிப்பிராயத்துடன் கலந்து பேசி ஆனந்தமாய்க் காலங்கழிக்க அவனுக்குத் தைரியம் உதிக்கிறதா? அதுவுமில்லை. ஏனெனில், அவர்களுடன் சகவாசம் பண்ணப் போதிய ஞானம் தன்னிடத்தில் இல்லாததினுலேயேதான். இப்படி இரண்டு பேர்களிடத்திலும் நற்பெயர் கிடையாது திண்டாடுகிருன்.

ஃ

பணம், சொத்து முதலியவைகளை அதிகமாக வைத்துக்கொண்டிருப்பவன் தன்னுடைய பணத்தின் மேல்வரும் வட்டியினுலேயே, அவ்லது தன் சொத்திலேயே காலங்கழித்துப் பலராலும் பணக்காரனென்று கருதும்படி நடந்துகொள்கிருன். ஒரு ஏழையோ தன்னிடத்திலிருந்த ஏதோ சிறிய தொகையை முதலாகவைத்து ஒரு சிறிய பொடிக்கடை, வெற்றிலை பாக்குக் கடை முதலிய ஏதாவது வைத்துத் தன் ஏழ்மைத்தனத்திற்கு உகந்தவாறு உலகில் நடமாடுகிருன். இவ்விரண்டு அந்தஸ்திலும் இல்லாது நடுவில் உள்ளவன்தான் பணக்காரன் போல் நடமாடவும் அசக்கனுய், ஒரு ஏழையைப் போலும் ஏதோ சிறிய கடை, சிறிய விஷயங்களில் வரும் வருவாயைக்கொண்டு திருப்தி படுவோனுகவும் இல்லாதவனுய் அவஸ்தைப் படுகிறன்.

ஃ

உயர்ந்த ஜாதி என்று கருதப்படும் பிராமண ஜாதியிலும் சேர்க்கப்படாதவராய், சூத்திரர்கள் என்று சொல்லப்படும் மற்றப் பிரிவினர்களுடனும் சேர்ந்து இருக்கப் பிரியப்படாதவராய் நடுத்தர ஜாதியார்களாக பிராமணர்கள்ளாவதற்கு முயல்வோராகவும் பலர் இருக்கிருர்கள். அவர்களின் 'நடு' அவஸ்தையே அதிகம்!

சிலர் மற்ற பெண்களுடன் பழகுகையிலும் தங்களின் ஸகோதரிகளிடம் தாராளமாகப் பேசுவதுபோலவே களங்கமற்று உரையாடி மகிழ்கிருர்கள். அந்த நிர்மல ஹிருதயத்தை மற்றவர்களும் உணர்ந்து நிர்மல மனத்தினராய் இன்புறுகிருர்கன்.

அதிகம்!! பிராமணரில்லங்களிலும் அவர்களுக்கு சம்பந்தி போஜனம் அளிக்கப்படாது. அவர்களும் சூத்திரர்களென்பாருடன் சம்பந்தி போஜனம் சாப்பிடமாட்டார்கள். பிராமண ஹோட்டல்களில் இத்தகையோரையும் வெளியில் சூத்திரர்களுடனேயே வைத்து விடுவதில் பெரிய அவமானமாகிறது. பிராமணரல்லாத ஒரு ஊரில் அவர்கள் அகப்பட்டுவிடின், அவர்கள் அவர்களுடைய குருட்டு நம்பிக்கைகளைக் கொஞ்ச காலத்திற்கு கட்டாயம் அகற்றி வைக்கத்தான் வேண்டிவரும்.

ஃ

இந்த உதாரணங்களைப் போல் எத்தனையே 'நடு' விஷயங்கள் உலகில் இருக்கின்றன. நடுத்தரத்தின் அவஸ்தையை நடுத்தரத்திலிருப்போரே நன்றாய் அறிகிறார்கள். "திரிச்சங்கு சுவர்க்கம்" போல் அவர்களுக்கு வானுலகத்திலும் இடம் கிடைக்காமல், மண்ணுலகத்திலும் இடம் பகிர்ந்து கொள்ள இயலாமல் வௌவால் கதியாய் முடிகிறது. இவர்களுக்கு ஒன்று இக்கரைபாவது அல்லது அக்கரையாவது அகப்படும் வரை இதே அவஸ்தைகள் படத்தான் செய்வார்கள். இதற்கு முடிவு "நடு" என்பதைத் தாண்டி முதல் ஸ்தானத்தையோ, கடைசி ஸ்தானத்தையோ பற்றினுல்தான் உண்டு போலும்!

வியாசத்திலே அதிகக் கருத்துச் சரக்குகள்.

பக்ஷணங்கள் கொஞ்சமாக இருக்கையில்தான் சாதம் இலையில் அதிகமாக வைக்கப்படுகிறது. பக்ஷணங்கள் சற்று அதிகமிருப்பின் சாதம் குறைத்தே வைக்கப்படுகிறது. பக்ஷணங்களே ஏராளமாக இருந்து, அதுவே அன்று புசிப்பாக இருக்கையிலோ சாதம் சமைக்கப்படுவதுமில்லை; இலைக்கு வருவதுமில்லை. இவ்விதமே, ஒரு வியாசத்திற்கு (கதைக்கு-நாவலுக்கு) வேண்டிய கருத்துச் (கற்பனை) சரக்குகள் அதிகமில்லாதவர்கள் வீண் வார்த்தைகளானும், விரிவான பேச்சுகளானும் பெருக்கிச் சென்று பக்கங்களை நிறப்புவார்கள். கருத்துச் (கற்பனை) சரக்கு அதிகமுள்ளவர்களோ அதனோடு சேரவேண்டிய அவசிய வார்த்தைகளைமட்டுமே எண்ணிச் சுருக்கிச் சேர்ப்பர். இன்னும் அதிக சரக்குள்ளவர்களோ அந்தச் சரக்கின் (கற்பனையின்) வார்த்தைகளாலேயே ஒவ்வொரு பக்கத்தையும் நெருக்கிப் பூர்த்திசெய்து மற்ற வீண் வார்த்தைகளுக்கும் விரிவுச் சொற்களுக்கும் இடமில்லாதபடி செய்துவிடுவார்கள். கருத்துகள் பெரிதும் நிறைந்த வியாசமும், கற்பனைகள் விசேஷித்த கதா நாவல்களுமே பெரிதும் பாராட்டிப் போற்றப்படும்.

'த' என்பதின் விளக்கம்.

நம்முடைய பெரியோர்கள் இயற்றிய உபநிடதங்கள் பெரியஞானக் களஞ்சியமே. வனங்களில் பழம் கிழங்கு முதலியவற்றைப் புசித்தும், பரப்பிரஹ்மத்திலேயே மனதை நிலை நிறுத்திய மகரிஷிகள், உலகத்தோர் தூய்மை வாழ்வு வாழவும், இம்மையிலும், மறுமையிலும் இன்பத்தை அளிக்கக் கூடிய வழிகளைத் தெரிந்துகொள்ளுவுமாக அநேக கிரந்தங்களை இயற்றி, கதைகள் மூலமாகவும் தெளிவாக விளக்கியிருக்கின்றனர். மனிதனுக்கு தர்மம், தானம், தயை எனப்படும் மூன்று ஆன்ம குணம் பரம வசியமாகும். இவ்விஷயத்தை பிரஹதாரண்ய உபநிடதத்தில் 5–வது அத்தியாயத்தில் ஒரு அரியகதையின் மூலமாக நமக்கு உபதேசிக்கப்பட்டிருக்கிறது. அதை இங்கு தருகிறோம்.

ஃ

பிரஜாபதிக்கு (பிரம்மா) மூன்று பிள்ளைகள்; அவர்கள் தேவர், மனிதர், அசுரர் எனப்படுவர். இவர்கள் தந்தையிடம் பிரம்மாசரிய விருதம் பூண்டு குருகுலவாசம் செய்து உபதேசம் செய்ய வேண்டுமெனப் பிரார்த்தித்தனர்.

ஃ

பிரஜாபதி முதலில் தேவர்களுக்கு "த" என்று உபதேசித்தார். "த" என்றால் என்னவென்று தெரிந்து கொண்டீர்களா என்று பிரமர் தேவர்களை வினவ, தேவர்கள், "நாங்கள் அறிந்து கொண்டோம். தாங்கள் இந்திரியங்களை அடக்கவேண்டுமென்று அருளியிருக்கின்றீர்கள்" எனப் பதிலுரைத்தனர். இப்படி "த" என்பதற்கு தமம் அல்லது "இந்திரியாதிய அடக்கம்" என்பது பொருள்.

ஃ

மனிதருக்கும் "த" என்று உபதேசித்தார். இவர்கள் "த" என்றால் 'தானம்' அல்லது தியாகம் என்று அறிந்து கொண்டதாகச் சொல்ல, பிரஹ்மாவும் அதை அங்கீகாரம் செய்து கொண்டார்.

ஃ

மூன்றாவது அசுரர்களுக்கும் "த" என்று உபதேசித்தார். இதற்கு "தயை" அல்லது தாக்ஷிண்யம் என்று பொருள் படித்தனர். இப்படி "த, த, த" என்ற மூன்று அக்ஷரங்களும், "இந்திரிய அடக்கம், தானம்,

---

கணவனிடம் சச்சரவிட்டுக்கொண்டு அவனை வற்புறுத்தி ஓரிடத்திற்குப் போக முயலும் மனைவி, தான் சென்ற இடத்தில் ஸந்தோஷப்படமாட்டாள். அங்கு ஏதேனும் ஒரு கலகம் கிளம்பித் துன்புறவைக்கும். அழைத்துச் சென்றவர்கள் நடுவழியில் விட்டுவிட்டுப் போய்விடவும்கூடும். மனைவியிடம் சண்டையிட்டுக்கொண்டு வெளியில் செல்லும் ஆடவனுக்கும் அவன் போன காரியம் கைகூடாது.

தயை'' என்பதைக் குறிக்கும் என்பது இவ்வுபதேசத்தின் கருத்து.

ஃ

இக்கதையை நாம் நன்கு கவனித்தல் வேண்டும். இதில் தேவர்கள், மனிதர்கள், அசுரர்களுடைய சுவபாவ குணங்கள் விளக்கப்பட்டுள்ளன. மனிதர்கள் தேவர், மனிதர் அசுரர்என மூன்றுவகையாகப் பிரிக்கபட்டுளது. தேவர் உன்னதமான மனிதன்; சாதாரண மனிதன் மத்தியமன் அசுரன் தாழ்ந்தவன். தேவர் சாதாரண மனிதனைப்போல, லோபத் தன்மையுடையவரல்ல; அசுரனைப்போல, பிராணிகளை ஹிம்சைசெய்யும் இயல்புடையவரல்ல. சாதாரண மனிதன் (மத்தியமன்) இரவுபகல் முற்றிலும் லோபத்தனத்தால் மோகவலையில் சிக்கித் தவிக்கிறான். இந்த லோபத் தன்மையை தியாகம் அல்லது தானத்தால் விலக்கி, உன்னதமான தேவத் தன்மை அடையவேண்டும். தமம், தானம், தயை இம்மூன்று குணங்களையுடையோரே சிரேஷ்டராவர். பிராணிகளுக்குத் துன்பம் விளைவிக்கும் இயல்புடையவன் அசுரன்; அவன் தாழ்ந்த நிலையிலிருப்பவனாவான். இவன் சகல ஜீவ ஜந்துக்களின்மீது தயை காட்டினால்,இவ்வசுர சுபாவம் நீங்கும்; மனிதத் தன்மை அடைவது கூடும்.

ஃ

இம்மூன்று குமாரர்களுக்கும் பிரம்மா, "த" என்னும் எழுத்தை அருளிச் செய்ததில், அவரவர்கள் தத்தம் சுபாவத்தை அனுசரித்துப் பொருள்படுத்திக் கொண்டனர். இவ்வரிய கதையின் உன்னதமான தத்துவத்தை மனிதர்கள் நன்கு உணர்வார்களே யாகில், இம்மை மறுமை எனும் இருவகை வாழ்வுக்கானவற்றையும் தெரிந்துகொண்டு இன்பம் காண்பர்.

குறிப்பு :—வட மொழியில் 'த' வர்க்க எழுத்துக்களில் மூன்றும் எழுத்து 'த' இங்கு குறிக்கப்பட்டது.

எஸ். வி. ஸ்ரீனிவாஸன்,

பீ. ஏ., பீ. எல்.

பயத்திலே ஊறிய உள்ளம்.

பயத்திலே பயத்துக்குப் பிறந்து, பயத்திலே வளர்ந்து, பயத்திலே இறக்கும் மனிதர்களுக்கு சுகம் எங்கே? அறிவு எங்கே? எந்த நோய் மனிதர்களைப் பீடித்தாலும் அதை உதறித் தள்ளிவிடலாம். ஆனால், பயம் என்னும் பேய் பிடித்துவிட்டால் ஏக்கமே மேலிட்டு, அங்கமெல்லாம் தளர்ந்து, ஆவி சிறிதாகி, அங்கம் புழுங்கி, ஓலமிடுவதைத்தவிர வேறு வழியில்லை.

ஸ்திரீ விஷயத்தில் தனக்குப் போட்டியாயிருப்பவனின்மேல் ஒரு குற்றம் நேரிட்டால், அதைப் பிரமாதப்படுத்தி அந்த வகையில் அவன் பெயரைக் கெடுத்துத் தன் பகையை வளர்ப்பது மனித சுபாவம்.

கஜேந்திர மோக்ஷம்.

ஸ்ரீ கண்ண பிரான் ஸ்ரீமத் பகவத் கீதையில் சர்வ பூதங்களுடைய இருதயத்திலும் இருந்து கொண்டிருப்பதாகவும் ஈஸ்வரனுக்கு எல்லா ஜீவன்களும் சமம் என்றும் அருளி இருக்கின்றார். உத்தம பக்தர்களுடைய இலக்ஷணங்களையும் விளக்கி உபதேசித்திருக்கின்றார். கீதையைப் படித்தவர்கள் இதையெல்லாம் அறிவார்கள். மானிடர்களில் ஈஸ்வரனை வழிபடுவோர்கள் நான்கு வகை உண்டு. அதாவது இவர்கள் தரித்திரன், துன்பத்தால் வாடி வருந்துபவன், ஈசுவரனை அறிய விருப்புடையோன், ஞானி எனப்படுவார்கள். ஞானியே இவர்களில் உத்தமன்; கடவுளுக்கு மிக்க வேண்டியவன். யாதொன்றையும் சிந்திக்காமல் எவனொருவன் ஏக மனதுடனும், அந்தக்கரண சுத்தியுடனும், ஸ்ரீ கிருஷ்ணனை சரணம் புகுகின்றானோ அவனுடைய யோக க்ஷேமத்தைத் தான் ஏற்றுக்கொள்ளுவதாகவும், தானே சரணாகதி அடைவோர்களை ஒருகாலும் கைவிடுவதில்லையென்றும் ஸ்ரீ பகவானே திருவாய் மலர்ந்து அருளியிருக்கின்றார். அப்படியிருந்தும், அஞ்ஞானத்தின் காரணமாக "என் தெய்வம், உன் தெய்வம்" என்று சண்டை சச்சரவுகளை அதிகப்படுத்திக்கொண்டு, அநந்தனும் சர்வவியாபகனுமான பகவானை ஒரு வகுப்பினருக்கு மட்டும் பாத்தியம் இருப்பதுபோல் எண்ணிக்கொண்டு ஏழை தேச மக்களை பகவத் தரிசனத்துக்குத் தகுதியற்றவர்கள் என்று தப்பு சித்தாந்தங்கள் ஏற்படுத்திக்கொண்டு தேசத்துத் தாழ்ந்த வகுப்பினரை ஆலயங்களில் பிரவேசிக்கக் கூடாதென்று சொல்ல முன் வந்து விட்டனர் சில போலி மதாபிமானிகள். நமக்குத் தெய்வ பக்தி புகட்டவும், நம் மனத்தில் உயர்ந்த பாவனைகள் உதிக்கவும், நம்முன்னோர்கள் உலகப்பற்று என்பது இல்லாமல் அரிய பெரிய இதிகாச புராணங்களை இயற்றி வைத்து இருக்கின்றனர். அப்புராணங்களில் ஸ்ரீமத் பாகவதம் ஒரு சிறந்த புராணமாகும். இப்புராணத்தில் கூறப்பட்ட "கஜேந்திர மோக்ஷம்" என்னும் சரிதை அதி உத்கிருஷ்டமானது.

ஃ

புராணங்களில் கூறப்பட்டுள்ள நல்ல சம்பவங்களை நினைவூட்டுவதற்காகவும், அச்சம்பவங்களிலிருந்து உண்மைத் தத்துவங்களை வற்புறுத்தவும் வேண்டி, பெரியோர்கள் தேவாலயங்களில் உத்ஸவங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர். உற்சவங்கள் பண்டை வழக்கங்களை அனுசரித்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக, விஷ்ணு ஆலயங்களில் சித்திரை பௌர்ணமி திதியில் வருடா வருடம் கஜேந்திர மோக்ஷ உத்ஸவம் நடைபெற்று வருவதை நாம் அறிவோம்; சில சமயங்களில் நாமும் இத்திருவிழாக்களுக்குச் சென்று வேடிக்கை பார்த்தும் வருகிறோம். ஆயினும், இவ்வுத்ஸவத்தின் தத்துவங்களைப்பற்றிக் கொஞ்சம்கூட ஆலோசிப்பது கிடையாது. ஸ்ரீமத் பாகவதம் 8-வது ஸ்காந்தம்

2, 3, 4 அத்தியாயங்களில் கஜேந்திர மோக்ஷம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இது ஸ்ரீ சுகமுனிவர் பரீக்ஷித் மகா ராஜனுக்குக் கூறியதாகும். மிக அழகு உள்ள த்ருகூடமெனும் பிரசித்தி பெற்ற ஓர் பர்வதமுண்டு. அப் பர்வ தத்திற்கு மூன்று சிகரங்கள். தங்கம் வெள்ளி இரும்பு முதலிய பலவித உலோகங்களும் அப்பர்வதத்தில் அகப்படுகிறது. ரத்னங்களும் பலவகை தாதுக்களும் நிறைந்து, பலவித விருக்ஷங்களும் கொடிகளும் லதாக்ருகங்களும் அங்கு நிறைந்து இருந்தன. பல அருவிகள் அம்மலை யில் ஓடி ஜலத்தின் ஒலியால் திசை களெல்லாம் பிரகாசித்தது. பால் சமுத்திரத்தின் அலைகள் அப்பர்வதத் தின் நாலா பக்கங்களிலும் மோதிக் கொண்டிருந்தன. அம்மலையும் அப் பூமியும் மரகதம் போன்று சாமள வர்ணமாயிருந்தது. நல்ல வாஸனை யோடு கூடிய காற்றும் அங்கு வீசிக் கொண்டிருக்கும். பலவித பசுக் கூட் டங்கள் கூட்டம் கூட்டமாக பசும் புல்லை மேய்ந்து கொண்டிருக்கும். அநேக விதமான உன்னத புஷ்பங் கள், நந்தவனங்கள் பல இருந்தன. இனிமையான குரலுடன் பற்பல பக்ஷிகள் கூவிக் கொண்டிருந்தன. அம்மலையின் குகைகளில் கந்தர்வர், சித்தர், சாகணர், வித்யாதரர், மகோ தரர், கின்னர், எனப்படும் தேவர்கள் தங்கி வசித்து வந்தனர். இம்மாட் சிமை தாங்கிய த்ருகூட பர்வதத்தில் ஆழமான ஒரு சரஸ் இருக்கிறது. அதில் சுவர்ணத்தமரை கருநைதல் முதலிய புஷ்பங்கள் மணம் வீசின. பல்வேறு உன்னத விருக்ஷங்களும் பக்ஷிகளும் அங்கு இருந்தன.

ஒரு சமயம் அச்சரஸிற்கு யானைக் கூட்டங்களோடு கூட வெய்யிலின் கொடுமையால் தாகத்திற்கு வருந்திய ஒரு பெரும் யானை அச்சரஸின் அரு கில் விரைவாக வந்து ஜலத்தில்இறங் கித் தன் தாகத்தை சாந்திசெய்துகொ ள்ளுகையில் தெய்வீக காரணத்தால் ஒருமுதலையானையின்பாதங்களைப்பற் றிக்கொண்டது. தற்செயலாய் நேர்ந்த ஆபத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளத் தன்னால் இரன்ற மட்டும் முயன்றது. மற்ற பெண் யானைக ளும் மிகுந்த துன்பமுறும் யானையை விடுவிக்க எத்துணை முயன்றும் சக்தியற்றவைகளாய் இருந்தன. இப் படி யானையும் முதலையும் ஒன்றுக் கொன்று இழுத்துக்கொண்டு ஆயிர வருஷம்சண்டைசெய்ததாகப் புராண ம்கூறும். காலக்கிரமத்தில் யானைக்கு வலிவு குறைந்தது. முதலை நீரில் வசித்துக்கொண் டிருந்தமையால் அத ற்கு வலிமை குறையாமல் இருந்தது. கஜேந்திரமானது இவ்வாறு கஷ்டப் பட்டுக்கொண்டு வந்தது. கடைசி யாக, யானைக்குப் பிராண சங்கடம் நேர்ந்து விடுமென்று நினைத்து, தான் இருக்கும் சகாய மில்லாத நிலைமை யைப்பற்றி யோசித்தது. திக்கற்ற வனுக்குத் தெய்வமே துணை என்பது போல,எல்லா ஜீவராசிகளுக்கும் ஆஸ் ரயமான சர்வேஸ்வரனாய் இருக்கும் ஸ்ரீமந் நாராயணனை சரணமடைவ தைத்தவிர வேறுகதி இல்லையென்று பூர்ணமாக நம்பிற்று.

(மற்றதில் முடிவு.)

எஸ். வி. ஸ்ரீநிவாஸன்,


பி. ஏ., பி. எல்.,

ஃ

கடியாரத்தில் முள்ளைப் பத்துநிமிஷம் அதிகமாகவே வைத்துக்கொள்வ தில் சௌகரியமிருக்கிறது. நேரமாய்விட்டதென்று ரயிலுக்கு ஓடிவந்தும் ரயில் இன்னும் வராதிருக்க அந்தப் பத்து நிமிஷம் உதவியாகிறது.

பின்னால் போக சக்தியற்றிருந்தால்?...


மோட்டார் ஓட்டி தன் மோட்டாரை முன்னும் பின்னும் செலுத்த சக்தி பெற்றிருக்கிறான். ரயில் வண்டித் தொடரையும் முன்னும் பின்னும் செலுத்தலாம். ஆனால், சைக்கிளைப் பின்னால் செலுத்த முடிகிறதில்லை. சில ஜட்கா வண்டிக்காரர்களும், மாட்டு வண்டிக்காரர்களும் தங்கள் குதிரைமாடுகளைப் பின்னால் போகப் பழக்கி இருக்கிறார்கள். மனிதனும் பின்னால் நடந்துபோக முடியும். ஆனால், சைக்கிள் முதலிய வைகளைப்போல் மனிதனையும் பின்னால் போக சக்தி இல்லாதவாறு படைத்திருந்தால்.........?



முருகன் வகுப்பில் மிகவும் குறும்பு பண்ணுகிறான். வாத்தியார் கோபாவேசம் கொள்கிறார். பிரம்பைக் கையிலேந்தி துர்வாச முனிவர் அவதாரம் எடுக்கிறார். முருகனிடம் நெருங்குகிறார். பளீர் என்று ஒரு அறை போடுகிறார். முருகன் பின்னால் நடக்க முயற்சிக்கிறான்; முடிகிறதில்லை. அடிகள் சரமாரியாக விழுகின்றன. அவனுக்குப் பக்கத்தில் வழி எதுமில்லை. அவனுக்கு என்ன வழி உதிக்கிறது? உடனே நேராக வாத்தியாரின்மேல் பாய்ந்து அவரைத் தள்ளிவிட்டு ஓடுகிறான்.

ஃ

முத்து வாத்தியார் எப்போதும் நாற்காலியில் உட்காருவது திரும்பிப் பாராமலேதான். பின்னாலேயே நடந்துபோய் தன் ஸ்தானத்தில் உட்




காருவார். ஞாபக மறதியாய் நாற்காலியின் பக்கத்தில் இருப்பதாக நினைத்துக்கொண்டு பின்னால் கால் போடுகிறார். கால் பின்னால் போக மாட்டேன் என்கிறது. அதற்குள் சுப்பன் ஏதோ கேஸ் கொண்டுவந்ததினால் அதை விசாரிக்கிறார். பிறகு தன்னிடத்தில் உட்காருவதற்குக் குனிகிறார். அவர் உட்காருவது தரையில்தான். நாற்காலி இன்னும் நாலு அடி தூரத்தில் பின்னால் இருக்கிறது குட்டிக்கரணம் போட்டு விழுந்து அதை வகுப்புக்குக் காட்டுகிறார்.

ஃ

ஜம்பு ஐயர் எப்போதும் மனைவிக்கு அடங்கியேதான் பேசுவார். ஏதோ கிராசாரக் குறைவால் அன்று ஏதோ "நீதான் செய்யேன்" என்று கேட்டுவிட்டார். வந்தது அம்புஜமாளுக்குக் கோபம்! உடனே பக்கத்திலிருந்த விசிறியைத் தூக்கிக் கொண்டாள். சரமாரியாகப் பார்த்து

விற்குப் பரிசுகள் கொடுத்தாள். அவர் எப்போதும் இத்தியாதி சந்தர்ப்பங்களில் கையாளும் பின்னால் நடந்து வீதிக்கோ, சதவுப்பக்கமோ ஓடிவிடும் வித்தை இந்த சந்தர்ப்பத்தில் உதவாமற் போயிற்று. பாவம் அவர்



என்ன செய்வார்? முன்னாலாகிலும் போய் தப்பித்துக்கொள்ள அவருக்குத் தைரியம் உதிக்கவில்லை. இருந்த இடத்திலிருந்தே மனைவிக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்துவிட்டார்

ஃ

கோபாலய்யர் நல்ல சரீரம் படைத்தவர். அவர் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு சின்ன சந்து இருக்கிறது. அதன் வழியாகப் போனால் அடுத்த தெருவிற்கு சீக்கிரம் போய் விடலாம். இல்லாவிட்டால் தெருவைச்சுற்றிப் போகவேண்டும். அடுத்த தெரு சுப்பண்ணா வாத்தியாருக்கும் இவருக்கும் அதிக சினேகம். ஒரு நாளில் ஒருவரை ஒருவர் பார்க்காது தூங்கமாட்டார்கள். கோபாலய்யர் இருந்தாற்போலிருந்து சுப்பண்ணாவை நினைத்துக் கொண்டார். உடனே ஏதோ யோசித்துக் கொண்டே சந்தில் திருத் தொந்தியைத் தடவிக்கொண்டு நடக்கக் கால் வைத்தார். இதே சமயத்தில் சுப்பண்ணாவும் அதே சந்தில் வந்து கொண்டிருந்தார். இருவரும் ஏதோ யோசனையில்நடந்துகொண்டிருந்தார்களாகையால் இருவரும் முன்னால் வருபவரைக் கவனிக்கவில்லை. இருதிருத் தொந்திகளும் மோதின.



உடனே ஒரு குதி குதித்து என்ன என்று பார்த்தார்கள். ரோட்டிற்கு மிகவும் சமீபத்திலிருக்கும் கோபாலய்யர் பின்னால் போகலாமென்று கால் எடுத்து வைத்தார். அதனாலேயே அவர் மற்றொரு தடவையும் தமது தொந்தியை மோதிக்கொள்ளாமல் தப்பினார்.

ஃ

பின்னால் போகச் சக்தியற்றிருந்தால் ஆபத்துதான். ஒரு விஷயம் யோசிக்கையில் கொஞ்சம் பின்னே போய் நிதானித்துப் பார்ப்பதில் எவ்வளவோ நன்மைகளிருக்கின்றன வென்பது யாருக்குத்தான் தெரியாது. திருப்பித்தர மறந்துவிட்டஒருவன் கடன் கேட்க வருகிறான். பின்னே சற்றுத் தன்னை தள்ளிக்கொண்டு போய்க் கடன் தராதிருப்பதே மேலென்று நினைப்பதில் நன்மையே யிருக்கிறதல்லவா? ஒரு

இதன்தொடர்அடுத்தபக்கம்காண்க

கண்டெடுத்த புது நோட்டுகள்.

ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட்டொன்றாகும், எனையாளும் ஈசன்செயல் என்றபடி மானிடர்களாகிய நாம் இப்பூவுலகின்கண் எதன்பேரில் அதிக வாஞ்சைவைத்து நேசித்து வருகிறோமோ அதுவே சீக்கிரம் நசித்து விடுகிறது. நாம் எந்த விரோதியை ஒழிக்க வழி தேடுகிறோமோ அவனே சிரஞ்சீவியாக வாழ்ந்து நமக்கு இலக்காகாமல் தப்பி விடுகிறான். இது உலக இயற்கையாய் ஒவ்வொருவருக்குமே நடந்து வருவதானாலும், அதுவே நமது மனதைச் சிதறவைத்து துக்கஸாகரத்தில் அமிழ்த்தி விடுகிறது. நீலமேக முதலியார் மிக்க மனோதைரியம் பொருந்திய தீரராயிருந்தாலும் தனது அன்பிற் சிறந்த மனையாட்டி அம்ஸவல்லி இறந்தபின் இவ்வுலக வாழ்க்கையிலேயே ஒரு வெறுப்புக் கொண்டவரானார். தான் இருப்பது பூமிக்கு ஒரு பாரமே என்றும், அதை சீக்கிரம் ஒழித்து விடுவதே நலமென்றும் அவருக்கு அடிக்கடி தோன்றி வந்தது. முதலியாரை அத்துயருக்கு ஆளாக்கின அம்ஸவல்லி இறக்கும் தறுவாயில் தனது பிரதி பிம்பம் போன்ற ஒரு குழந்தையை விட்டுச் செல்லாத பக்ஷத்தில் முதலியார் அன்றே மேலுலகம் கண்டிருப்பார். துக்க ஸமயங்களில் அம்ஸவல்லியின் அருந்தவச் செல்வியான ஸரோஜினியைக் கண்டே தேறுதலடைந்து வந்தார் முதலியார். இருந்தாலும் முதலியாருக்கு வேலையிலிருந்த ஊக்கம் நாளடைவில் குறைந்து கொண்டே வந்தது.

ஃ

ஐப்பசி மாதத்தில் ஒரு நாள் மாலை 7-மணிசமயம் முதலியார் தான் வேலை பார்த்துவரும் ஆலையிலிருந்து வீடு நோக்கி வந்துகொண்டிருந்தார். வானம் இருண்டுலேசாய்த் தூறிக்கொண்டு இருந்தது. பகலில் பெய்த மழையால் வீதி யெங்கும் சேறாயிருந்தது. முதலியார் வேகமாய்த் தன் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தாலும் அவருடைய மனம் பல்வேறு எண்ணமிட்டுக்கொண்டிருந்தது. ஸரோஜினிக்கு இப்பொழுது பதினைந்து வயது நிரம்பி விட்டது. அவளுக்குத் தகுந்த கணவனைப் பார்த்து விவாகம் செய்விக்க வேண்டிய கவலையே முதலியாருக்குப் பெருங் கவலையாயிருந்தது. காளமேக முதலியாரின் குமாரன் அம்பலவாணனுக்கும் ஸரோஜிக்

(146-ம் பக்கத் தொடர்ச்சி.)

பெரும் சண்டை வீட்டுக்குள் நடக்கிறது. அந்த அற்ப சண்டையில் தன்னைப் பின்னுக்கே தள்ளிக்கொண்டு ஒதுங்கி யிருந்துவிடுவதில், பிறகு எவருடைய மனஸ்தாபமுமின்றித் தப்பித்துக்கொள்ள உதவியாகிறது. தான் புது மாப்பிள்ளையாகும்போதே சிலரை விலக்கிப் பின்னடைந்தால், பிறகு வீண் விருந்துச் செலவுகள் இருக்காதல்லவா? இப்படிப் பின்னுக்குப் போகவும் சில சமயங்களில் கபடமாகப் பழகியிருந்தால் தான் யாரிடமும் ரொம்ப ரொம்ப நல்ல மனிதனென்று பெயர் பெறலாம்.

S. விஜயலக்ஷ்மி அம்மாள்,

அவனாசி.

கும் பால்ய காலம் முதலே நேசமாயிருந்து வந்ததும், பிறகு அது காதலாக மாறியதும் நீலமேகருக்குத்தெரியும். அம்பலவாணனுக்குக் கொடுப்பதில் இவருக்குப் பூரண சம்மதமேயானுலும் காளமேகர் கேட்கும்ரூபாய்க்கு எங்கு செல்வது ? அம்பலவாணனே பி.ஏ. தேறியதும் பி. எல்லுக்குப் படிக்கும் இரண்டுவருஷமும் தனக்கு விவாகமே உதவா தென்றும், பிறகு ஸரோஜியையே மணம் புரிவதென்றும் சொல்லித் திரிகிருன். இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்படுவதானபல யோசுனைகள் அவர் மனதில் தோன்றி வருத்திக்கொண்டேயிருந்தன.

ஃ

இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டே பல வீதிகளின் வழியே சென்ற முதலியார் விட்டல் ராவ் அக்ரகாரத்தின் வழியாகச் செல்லும்போது திடீரென்ற எதோ தெருவில் விழுந்த மாதிரி முதலியாருக்குச் சத்தம் கேட்டது முதலியார் சட்டென்று குனிந்து பார்த்தார். ஏதோ பேபரில் கட்டப்பட்டிருப்பதுபோல் தோன்றிற்று. என்னவென்று தெருவிளக்கின் வெளிச்சத்தில்மேல் கடிதத்தைக் கொஞ்சம் தள்ளிக்கொண்டு பார்த்ததில் எல்லாம் நோட்டுகளாய் இருக்கக் கண்டு நடுக்கங் கொண்டார். திகில் கொண்டு திரும்பித் திரும்பி சுற்றுமுற்றும் பார்த்தார். வீதியில் ஒருவரும் தென்படவில்லை. சிறிது தைரியமுடையவராகி அக்கட்டை அப்படியே ஜேபியில் வைத்துக்கொண்டு அது விழுந்த ஜன்னலையுடைய 'விவேசபவனம்'' என்னும் ஹோட்டலுக்குட் சென்று அதன் மானேஜரைக் கண்டு ''இப்பொழுது ஐந்து நிமிஷங்களுக்கு முந்தி மேற்கு கோடி அறையின் வாசல் பக்கத்துப் பலகணியின் வழியாய் யாராவது ஏதாவது எறிந்ததுண்டா என்று தயவு செய்து விசாரியுங்கள்'' என்ருர். மானேஜர் அவ்வாறே செய்து திரும்பி வந்து ''ஒருவரும் ஒன்றும் எறியவில்லே அது என்ன சாமான் காட்டுங்கள் பார்ப்போம்'' என்ருர். ''தங்களுக்குக் காட்ட வேண்டியதில்லே, யாராவது ஏதாவது எறிந்துவிட்டதாகச் சொன்னுல் டெலிபோனில் என்னேக் கூப்பிடுங்கள்; நான் அவர்களிடம் அச்சாமானே நேரில் ஒப்பிவிக்கவேணும்'' என்று சொல்லிவிட்டு விடுதி திரும்பினுர் முதலியார்.

ஃ

''மடியில் கனமிருந்தால் வழியில்பய''முண்டல்லவா? இப்பொழுது தான் முதலியாருக்குத் திக்பிரமை குடிகொண்டது. திரும்பித் திரும்பி யாராவது தன்னேக்கவனிக்கிருர்களா என்று அடிக்கடி பார்த்துக்கொண்டார். சற்று நேரத்தில் பின்னுலிருந்து ஒருவன் பைஸிகிளில் வெகு வேகமாய் வந்து இவரைத் தாண்டி அப்பால் சென்ருன். அவன் அப்படிச் செல்வதற்குள் முதலியாருக்கு திகில் பிடித்து எண்ணுததெல்லாம் எண்ணிவிட்டார். இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டே தனது வீட்டை வந்தடைந்ததும், தனது அறைக்குள் சென்று கடிதக்கட்டைப் பத்திரமாய்ப் பெட்டியில் வைத்துப் பூட்டினர். பிறகு போஜன மருந்தி படுக்கைக்குச் செல்லும்போது டெலிபோனில் ஹோட்டல் மானேஜரைக் கூப்பிட்டுக் கேட்டார். அதுவரையில் எவ்வித தகவலுமே தெரியவில்லே என்ற பதிலே

மனமானது ஸந்தோஷத்தால் பூரித்திருந்தாலும், துக்கத்தில் அமுந்திக் கிடந்தாலும் அக்காலங்களில் ஆகாரம் ஏற்றுக்கொள்வது பிரயாசை.

திரும்பி வந்தது. முதலியாரும் படுத்துக்கொண்டார். தூக்கமே வரவில்லை. நோட்டுகளின் நினைவு மனதைவிட்டு அகலவில்லை. சிறிது நேரம் புரண்டு படுத்துக்கொண்ட பின் மறுபடி எழுந்து அறையின் கதவைத் தாளிட்டுப் பெட்டியைத் திறந்து அக் கடிதக் கட்டை வெளியில் எடுத்து மேல் கடிதத்தை பிரித்துப் பார்த்தார். எல்லாம் 100-ரூபாய் நோட்டுகளாகவே 30-நோட்டுகள் இருந்தன. அதைக் கட்டிப் பெட்டியில் வைத்துவிட்டுப் படுத்தார். நெடுநேரம் தூக்கம் பிடிக்கவில்லை. அம்பலவாணனின் தகப்பனார் காளமேகர் தனது குமாரனின் விவாகத்துக்குக் கேட்கும் வரதக்ஷணையும் அக்கட்டிலிருந்த தொகையும் ஒத்திருந்ததும், அவ்வளவு பெரிய தொகையை எறிந்துவிட்டு முயற்சிகள் எடுத்துக்கொள்ளாமலிருப்பதும் முதலியாருக்கு அளவுக்கு மிஞ்சின கலவரத்தையும், ஸந்தேகத்தையும், ஆச்சரியத்தையும் ஒருங்கே விளைத்தது. காலையில் விவரங்களைச் சொல்லிப் போலீஸாரிடம் ஒப்புவிப்போமென்றாலோ ஒருவரும் கேட்காதபக்ஷத்தில் அது துரைத்தனத்தாருக்குச் சேருவதில் என்ன பயன் என்றும் தோன்றிற்று. இவ்வளவு கலவரத் தோற்றங்களினிடையே மூத்தவள் வந்து முதலியாரிடம் குடிகொண்டாள்.

ஃ

பொழுது விடிந்து மணியும் எழு ஆயிற்று. முதலியார் எழுந்து கை கால் சுத்தம் செய்துகொண்டு டெலிபோனில் ஹோட்டல் மானேஜரைக் கூப்பிட்டார். "தனக்கு எவ்வித தகவலும் கிடைக்கவில்லை" என்ற பதிலே திரும்பி வந்தது. போஜன சாலைக்குட் சென்று பைங்கிளியாள் சரோஜியின் முகத்தைக் கண்டவுடனேயே முதல் நாள் நிகழ்ந்தவைகள் மனதில் வந்து கூத்தாடின. அதை ஒரு சமயம் ஒருவரும் கேட்காமலிருந்து அதனால் தனது தவச் செல்வியின் ஜீவிய வாழ்க்கையை இனிது நிறைவேற்றக் கூடாதா என்ற ஒரு எண்ணமும் தோன்றிற்று. காளமேகர் தனது குமாரத்தியை மணம் புரிந்து கொள்ளச் சம்மதிக்கும் தொகையும் இதுவும் ஒன்றாயிருப்பதைப் பார்த்தால் கடவுளே தன்பேரில் கிருபை கூர்ந்து அது தனக்கு கிடைக்கும்படி செய்திருக்கிறார் என்ற ஒரு சந்தேகமும் அடிக்கடி தோன்றி வதைத்தது.

ஃ

இப்படிப் பலமாதங்கள்கழிந்தன. முதலியார் முன்னிலும் அதிக ஊக்கமும் சுறுசுறுப்பாயும் உழைத்து வந்தார். அக் கடிதக் கட்டு சம்பந்தமாக எவ்வித தகவலும் தெரியவில்லை. முதலியார் நன்றாய் யோசித்து அக் கடிதக்கட்டை மேலாக முகர்வைத்து பாங்கியில் போட்டு விட்டு, இன்னும் இரண்டு வருஷம் கழிந்ததும் அத் தொகையைக் கொண்டே அம்பலவாணனுக்கும் ஸரோஜிக்கும் விவாகம் செய்வதென்றே தீர்மானித்தார். ஒரு நாள் அக்கடிதக் கட்டும் கையுமாய் பாங்காபீஸை அடைந்து அக் கட்டைப் பிரித்து மேலிருந்த ஒரு நோட்டை எடுத்து மானேஜரிடம் காட்டினார். மானேஜர் அது கள்ள நோட்டல்ல என்று சொல்லி திருப்பிக்கொடுத்தார். முதலியார் அதை வாங்கி மேலே வைத்து கட்டி முத்திரை வைத்து பாங்கில் தன் பேரில் பதிவு செய்து கொடுத்துவிட்டு வீடு திரும்பினார், அன்றையதினம் முதல் முதலியார் வேலையில் மிகுந்த ஜாக்கிரதையும் சுறுசுறுப்பு முள்ளவரானார்.

ஒரு சங்கதியும் வராதிருந்தால் நல்ல சங்கதியே.

இவர் அதுவரையிலிருந்து வந்தவிதமும், சென்ற சில மாதங்களாகக் காண்பிக்கும் வேலைத்திறமையும் இவருடைய சினேகிதர்களுக்கும் ஆச்சர்யத்தை உண்டாக்காமலிருக்கவில்லை. "ஜனோபகாரி மில்ஸ்" ஆங்கிலேய மானேஜரான வில்ஸன் பிரபுவும் இவரை மெச்சிக்கொண்டு நாளடைவில் படிப்படியாக உயர்தர உத்தியோகங்கள் கொடுத்து வந்தார்.

ஃ

இரண்டாண்டுகளும் கழிந்தன. அம்பலவாணனும் பி.ஏ., பி.எல்., ஆனான். நீலமேக முதலியார் இப்பொழுது மாதம் ரூ. 250-சம்பளத்தில் உதவி மானேஜராக வேலை பார்த்து வருகிறார். ஒவ்வொரு மாதமும் செலவழிந்ததுபோக பாக்கி ஸேவிங்க்ஸ் பாங்கியில் போட்டு வந்தார். அதுவும் நாளடைவில் ஒரு பெருந்தொகையாயிற்று. அம்பலவாணனும் ஸரோஜியைத் தனக்குரியவளாக்கிக் கொள்ள விருந்த ஒரு இடையூறும் நீலமேகர் நீக்கத்தக்க நிலைமையிலிருப்பதைக் கண்டு பெருமகிழ் வெய்தினான். பாங்கில் போட்டிருக்கும் பணத்தை அம்பலவாணனுக்குக் கொடுத்து ஸரோஜியை மணம் புரிவித்தால் அவள் பெருவாழ்வுடன் இனிது வாழ்ந்து வருவாள் என்னும் எண்ணமே நீலமேகருக்கு போதுமான ஊக்கத்தை அளித்து வந்தது. அம்பலவாணனுக்கு விவாகம் நிச்சயிக்கப்பட்டது. வருகிற பங்குனிமாதத்தில் தீர்மானித்துக் கொண்டு நீலமேகர் காலத்தை இனிது கழித்து வந்தார். மாசி மாதத்தில் ஒரு நாள் இனிது எதிர்பார்க்கப்படும் திருமணத்துக்குத் தேவையான பணத்திற்காகத் தான் முன்னே போட்டிருக்கிற கடிதக் கட்டை உபயோகப் படுத்திக்கொள்ள வேண்டு மென்ற எண்ணத்துடன் பாங்குக்குச் சென்றார். பாங்கு காரியதரிசியும் இவர் கையெழுத்துடன் குறிக்க வேண்டியவைகளைக் குறித்துக்கொண்டு இரும்புப் பெட்டியைத் திறந்து கடிதக் கட்டை எடுத்து வந்தார் முத்திரையை ஸரி பார்த்துக் கொண்டு கட்டை உடைத்து நோட்டுகளை எண்ணலானார். இரண்டாவது நோட்டு எண்ணும் பொழுது சற்றுத் தயங்கினார். மூன்றாவதில் இன்னும் சற்றுத் தயங்கினார். நான்காவது நோட்டை எடுத்தவுடன் திடுக்கிட்டு திக்பிரமை அடைந்து அந்தக் கட்டை அப்படியே கையில்எடுத்துக்கொண்டு சிறிது தூரத்தில் ஓர் அறையிலிருந்த பாங்கின் மானேஜிங் டைரக்டரான சரவண முதலியாரிடம் கொண்டு போய் விட்டார். சரவணரும் நீலமேகரும் நன்றாய்ப் பழகிய ஸ்நேகிதர்கள். இவர்களைக் கண்டவுடன் புன்னகை பூத்த முகத்துடன் நீலமேகருக்கு ஒரு ஆஸனங் காட்டினார். நீலமேகருக்குத் தாங்கொணாத் துயரமும் தீராத் கலவரமும் ஒருங்கே சேர்ந்து வதைக்கத் தொடங்கின. தான் முதலில் கடிதக்கட்டைப்பாங்கியில்கொடுத்தபோது மேல் நோட்டைப்பார்த்து நோட்டுகளெல்லாம் உண்மையான நோட்டுகள் என்று காரியதரிசிசொன்னது நன்றாய் ஞாபக மிருந்தது. இவ்வாறான பல எண்ணங்கள் வாட்டின. காரியதரிசியிடமிருந்து விவரமறிந்து கொண்ட சரவணர்—"நீலமேகரே" "தங்களுக்கு இந்தக் கட்டு கிடைத்த விவரங்களைச் சொல்லுங்கள். இதில்

தங்களின் சுயநலத்திற்கு மதவிசுவாசத்தை மேலே இழுத்துப் போர்த்துக்கொள்ளுதலானது மகா பெரிய மயக்கடியான ஜாலவித்தை. உலகம் வெகுவாய் இதில் ஏமாறுகிறது. விழித்து உண்மை கண்டவர் எங்கேயோ ஒருவர் தான்.

இந்த மேல் நோட்டு ஒன்று தவிர பாக்கி 29-ம் கள்ள நோட்டுகள். விவரங்களைப் பயமின்றி சாவதான மாய்ச்சொல்லுங்கள்" என்றார். எதிரிலிருந்த நீலமேகருக்கு அக்கடைசி வார்த்தை செவியில் விழுந்தவுடன் இப்பூமியானது தனது கண்கள்முன் விர்ரென்று சுற்றுவதுபோல் ஒரு தோற்றம் உண்டாயிற்று. பெரும் பீதியும் கலவரமும் பிடித்துக் கொண்டது. சிறிது நேரத்தில் சரவணர் ஏதாவது எண்ணிக் கொள்வார் என்றஞ்சி ஆதிமுதல் விவரங்களை சாங்கோபாங்காய்ச்சொன்னார். சரவணர் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்து பிறகு கடைசியில் "இவைகளெல்லாம் ஸந்தேகமின்றிக் கள்ளநோட்டுக்களே; நீர் சொல்லும் விவரங்களையெல்லாரும்நம்பமாட்டார்கள்' என்று சொல்லிக் கொண்டே யிருக்கையில் நீலமேகர் தடுத்து, "முதலியாரவர்கள் சொல்லியபடி செய்ய எனக்கு எவ்வித ஆக்ஷேபணையு மில்லை; எனக்கு நோட்டுகளும் வேண்டாம்; என்னை விட்டால் போதும்" என்று கூறி நீலமேகர் வெளிவந்து வீட்டையடைந்தார். அவருக்கு நோட்டுகள் வீணானதின்மேல் வருத்தமே யில்லை. அவைகள் கள்ளநோட்டுகளாகப்பிறகு வெளிவராமல் அழித்துவிடப் பட்டாலும், அவைகள் முதலியாரின் மனதில் உண்டாக்கின ஊக்கத்தின் பயனாக அதைப்போல் இரண்டு பங்கு சேர்த்து விட்டார். அதைக்கொண்டு ஸரோஜி அம்பலவாணன் மணம் சீர்பெறநடந்ததென்பதிலையமில்லை. எவ்விதமேனும் மனுஷ்யனுக்கு ஒரு புது உற்சாகம் உண்டானால், அதுவொன்றே எவ்வளவோ காரியங்களைத் தீரத்துடன் சாதிக்கப் போதுமானது.

ஜெகன்னாதாச்சாரி.

[இந்தப் பழைய அன்பர் தமது விலாஸத்தை நமக்குத் தெரிவிப்பாராக. ப-ர்.]

என் நேசனே! நின் அன்பு என்னே!

என்னிடத்திலில்லாத பெருமையை நீயே எனக்குக் கற்பித்து ஆகாசத்திலுயர்த்துகிறாய். நீ என்னைக் கண்டதும் எழுந்து நிற்கும்படியான அவ்வளவு தாழ்மையையும் பணிவையும் உன்னுள்ளே காட்டி, அந்த வகையிலும் எனக்கு அதிக மரியாதை தருகிறாய். என் முனபாக உன்னை மிகவும் குறைவு பட்டவனாகவும் தோற்றுவித்துக்கொண்டு என்னை ஒரு பெரியோனாக்குகிறாய். இதை நீ வேண்டுமென்று செய்வதா? அன்றி, அன்பில் உன்னை மறந்துமயங்கிச் செய்வதா?

தன்னுடன் பிறந்த ஸகோதரனை கண்ணுக்கு உதவி செய்வதற்காக மூக்குக்கண்ணாடியின் பாரத்தை மூக்கும், அதன் கம்பிகளைச் செவியும் ஏற்றுக்கொண்டு துணையாகின்றன. இவ்விதமே நம்தேக உறுப்புகள் அவை தம்முள் எத்துணையோ ஒற்றுமையுடன் கலந்து வேலைசெய்து மூளையாகிய தலைவனுக்கு அடங்கி நடக்கின்றன. இவற்றைக் கவனிக்கும் நாம் நம் குடும்பத்துடன் எத்துணை ஒத்து அடங்கி வாழவேண்டுமென்பதைச் சிந்திக்கக்கடவோம்.

சென்றமாதம்

ஒரே தினத்தில் நால்வர் பிரிவு:--

"என் பெற்ற தாயாரும் என்னைப் பிணமென்று இகழ்ந்துவிட்டாள்" என்று கூறும்படியான நாள் ஒன்றும் பின்னுக்கு இருக்கவே செய்கிறது. ஒரு துரதிர்ஷ்ட சம்பவம் நேரின், அதைத் தொடர்ந்து பல நிகழ்ந்து விடுவதும் உலக இயல்பே. சென்ற ஏப்ரல்மீ 24-ம் தேதியில் தர்மிஷ்டரான ஹாஜி ஸர் இஸ்மாயில் சேட், வைத்திய சிரேஷ்டரான டாக்டர் என். ரங்காச்சாரி, ஐகோர்ட் ஜட்ஜ் பதவிகளில் விளங்கிய ஸர். சி. வி. குமாரசாமி சாஸ்திரியார்; ஸர். சி. சங்கரன் நாயர் இந்நால்வரும் தங்களின் இவ்வுலகத்திய ஊர்வலம் முடிந்து மூலஸ்தானத்துக்குச் சென்றுவிட்டனர். செத்தாரைச் சாவார் சுமந்து செல்லும் உலகம் இது. இறந்தவர்களின் பொருட்டு நாம் ஏங்குகிறோம். இறந்தவர்கள் எத்தனை பேர்களுக்கு ஏங்கினரோ? நமக்காக ஏங்க இனி எத்தனைபேர்கள் காத்திருக்கின்றனரோ?

ஃ

சட்டசபைப் பிரவேசம் :—

"போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்துடன்" என்பது போல, முன்பு வெறுக்கப்பட்ட சட்டசபைப் பிரவேசத்தை இப்பொழுது யாவரும் போற்ற முற்பட்டுள்ளார். இந்தியா சட்டசபை கலைந்து புதுத் தேர்தல்கள் நடக்கையில் சட்டசபையை எட்டிப் பிடித்துவிட வேண்டுமென்கின்றனர். இதனால் ஸ்வராஜ்ய சித்தி பெறலாமென்கின்றனர். காங்கிரஸ்தேவி கடைசி வரைக்கும் சென்று முயன்று ஸ்வராஜ்யம் காணாது உள்ளம் உருகிச் சோர்ந்து மூர்ச்சித்துவிட்டனள். இப்பொழுது சட்டசபைக் கட்சியார் தோன்றி சட்டசபைப் பிரவேசத்தால் ஸ்வராஜ்ய தரிசனம் கண்டுவிடலாமென உத்ஸாகப்படுகின்றனர். உலக மாந்தரின் ஆவலாதிகட்குத் தாம் ஒரு தடையாகஇருக்கவொண்ணாதென்று காந்திஜீயும் ஜனங்கள் போகிறபோக்கில் தாமும் போக முயல்கின்றார். ஒரு வியாபாரி தான் வைத்த கடையில் வியாபாரம் சரிவர இன்றி நஷ்டமே கண்டு கடையை மூடிவிட, மற்றொரு புது வியாபாரி அதே கடையைத் தான் தொடங்கி லாபம் அடைந்துவிடலாமென்று புது வியாபாரத்தை அந்தக் கடையிலேயே ஆரம்பிக்கின்றார். முந்திய வியாபாரிக்கு நஷ்டம் விளைத்த அந்தக் கடை பிறகு வந்த வியாபாரிக்குக் கனத்த லாபம் காண்பிப்பதுமுண்டு. ஒரு வழியிற் சென்று காரியம் சித்தி தராவிடில், மற்றொரு வழியில் முயற்சி நாட ஆவலாதிகள் கொள்வது சர்வ சாதாரணம். கைகளுக்கு ஏதாவது ஒரு வேலை வேண்டாமா? சும்மா அது இருக்குமா ?

ஃ

சட்டசபை புதுமாப்பிள்ளைகள்:--

"அத்தானுக்கு வந்த வைபோகம் எத்தனையடி" என்று புகழும்வாறாகப் புது மாப்பிள்ளையாவோர் எவர் மனமும் நோகாதவாறும், தாம் எவரையும் அலக்ஷியம் செய்து புண்

படுத்தாவாறும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எல்லோரிடமும் ஆசீர்வாதத்தையே பெறப் பார்க்க வேண்டும். தம்மீது அன்பு வைத்தோர் கண்ணீர் விட்டு ஏங்குமாறும், நெஞ்சம் ஏமாறித் துடிக்குமாறும் செய்துவிடுவது மஹா அபசாரமாகும். சட்டசபை மாப்பிள்ளைகள் தங்களை நம்பிச் சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கும் ஜன ஸமூகத்தின் அன்பைத் தமது புது மாப்பிள்ளை ஸ்தானத்தில் அலக்ஷியம் செய்துவிட வொண்ணுது. அந்தப் பக்கத்திலுள்ள துரைத்தனத்தாருக்கும் மதிப்புடன் நடந்து காட்டவேண்டும். புது மாப்பிள்ளைகளுக்கு வேண்டிய புது உடுப்புகள் புது புது அலங்காரங்கள் யாவும் இப்போதே தயார் செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் இந்தியா சட்டசபை விவாக தினத்தையும் எதிர்பார்க்கலாம். சட்டசபையின் பழய மாப்பிள்ளைகள் வெற்றி பெறத் தவறியதைப் புது மாப்பிள்ளைகளேனும் அடைவராக.

ஃ

நீதி விசாரணை:—

"நெல்லுக்கு உமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு, புல்லிதழ் பூவுக்குமுண்டு" என்பதுபோல் எதிலும் ஒரு குறை ஒட்டியேயிருக்கும். லாகூர் ஹைகோர்ட் சீப் ஜட்ஜ் ஜட்ஜிஸ் யங் தமது பதவியினின்றும் விலகி இங்கிலாந்து செல்லுகையில் பின்வருமாறு கூறினர். கோர்ட்டில் செய்யப்படும் சத்தியப் பிரமாணத்தை வெகு சாதாரணமாகப் பாவித்து விடுகின்றனர். கங்கா ஜலம் நிறப்பிய ஸ்தாலியை ஹிந்துக்களிடமும், குர்ஆனை முஸ்லிம்களிடமும் கொடுத்துப் பிரமாணம் செய்யச்சொல்ல வேண்டும். நீதி விசாரணையில் தாமதம் கூடாது. பயனற்ற சாட்சி விசாரணையில் தற்போது காலம் வியர்த்தமாகிறது. தாமதித்து நியாயம் வழங்குவதில் யாருக்கும் நன்மையில்லை. "நியாயம் என்பதை யாருக்கும் விலைக்குக் கொடுக்க மாட்டோம். யாருக்கும் நியாயம் வழங்க மறுக்கமாட்டோம்; நியாயம் வழங்குவதில் தாமதம் செய்யமாட்டோம்" என்ற தர்மம் இந்தியா சம்பந்தப்பட்ட வரை அனுஷ்டானத்தில் இல்லையென்றே சொல்லலாம் என்ருர்.

ஃ

ஒரு குடும்பத்தின் ஸர்வ நாசம்:--

"ஒரு கை விரிக்க, ஒன்பது வாய் திறக்க" என்பதுபோல, ஒருவனைக் கொண்டே, அவனையே ஆதாரமென நம்பி ஒவ்வொரு குடும்பமும் வாழ்கின்றது. குடும்பத்தின்ஜீவநாடி அந்த ஒருவனிடமே மறைந்து நிற்கின்றது. அந்த ஒருவனுக்கு வேலை போனுல், அல்லது அவன் கைதியானுல், அல்லது பிணியுற்ருல் அந்தக் குடும்பமே தத்தளிக்கின்றது. பாலக்ககட்டையடுத்த பட்டாஞ்சேரி வாசியான மொண்டி ராமு ஒரு குற்றத்திற்காகப் போலீசாரால் சிறையானுன். சிறையில் அவன் தன்னிடமிருந்து கத்தியால் குத்திக்கொண்டு மாண்டான். இதை யறிந்த அவன் தந்தை புத்திர சோகத்தால் தூக்கிட்டுக் கொண்டு மடிந்தார். கணவனையும் குமாரனையும் இழந்த நங்கை கிணற்றில் விழுந்து முடிந்தாள்! ஹா! ஒரு குடும்பத்தின் ஜீவநாடி எங்கு இருந்தது பாருங்கள்! பேனுவின் முனை சிறிதே எனினும், அதுதான் பேனுவின் ஜீவநாடி. பேனுவின் முனை கெட்ட பிறகு பேனுவுக்கு மகிமையில்லை.

கணபதி ஐயரின் உத்தரவு.

தொந்திக் கணபதி ஐயருக்கு வயிறு பெரிதுதான். இல்லாவிட்டால் அப்பெயர் அவருக்கு லேசில் கிடைக்குமா? போஜனப் பிரியரென்றால் அவரைத்தான் சொல்லவேண்டும். காலையில் படுக்கையை விட்டு எழுந்தவுடன் நேராக அவர் தன் வயல்களைப் பார்க்கப் போவார். போகும்போது பக்கத்திலிருக்கும் ஒரு வேலமரத்திலிருந்து ஒரு குச்சியை ஒடித்துக்கொண்டு தன் பற்களில் சொருகிய வண்ணமே தன் வயல்களை நோக்கி நடப்பார். சூரியன் நடு உச்சிக்கு வந்த பின்தான் தன் வீட்டை நோக்கித் திரும்புவார். வந்தவுடன் தன் இல்லக்கிழத்தி சமைத்து வைத்திருப்பதை மிக மிக ஆவலுடன் உண்பார். இவ்வாறு பல நாட்கள் நடந்துகொண்டே வந்தது. ஒருநாள் கணபதி ஐயருக்கு வயலில் இருக்கும்போதே வயிறு பசியால் கிள்ள ஆரம்பித்தது. அண்ணாந்து வானத்தை நோக்கினார். இன்னும் சூரியன் உச்சி அடையவில்லை ஆனாலும் என்ன? வீட்டை நோக்கி நடந்தார். இல்லக்கிழத்தியை "சாதம் ஆகி விட்டதா?" என்று மிகவும் பணிவுடன் வினவினார். "ஆய் விட்டது" என்று அம்மை சொன்னது தான் தாமதம். மறுவினாடி ஒரு இலையைத் தூக்கிப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து விட்டார். அம்மை என்ன செய்வாள்? மறு நிமிஷமே சாதத்தை இலையில் கொட்டி தன் கணவனுக்கு மிகவும் பிரியமான கத்திரிக்காய்க் கூட்டை வட்டித்தாள். பசியின் மிகுதியால் கணபதி ஐயர் கூட்டைப் பிரட்டி முக்கால் இலைக்கு இழுத்து விட்டார். பிறகுதான் தலையை நிமிர்த்தினார். "குழம்பு ஊத்திக்கில்லையா?" என்று அவருடைய மனைவி பணிவுடன் கேட்டாள். கணபதி ஐயர் அப்போதே துர்வாச முனிவர் அவதாரம் எடுத்தார். "என் முன்னமேயே சொல்லக் கூடாது? கூட்டு மாத்திரம் தான் செய்திருக்கிறாயென்று சாப்பிட்டுவிட்டேன். குழம்பும் இருக்கிறதென்று என் சொல்லக்கூடாது?" என்று கர்ஜித்தார். அவருடைய மனைவிக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஒரே மௌனம் சாதித்தாள். ஏனென்றால் கணபதி ஐயர் மிகவும் முன்கோபக்காரர். "நாளையிலிருந்து நீ என்னென்ன சமைக்கிறாயோ அதெல்லாம் முதலில் இலையில் வைத்த பிறகுதான் நீ சாதம் வட்டிக்கவேண்டும். தெரிகிறதா?" என்று ஒரு அவசரச்சட்டம் போட்டு விட்டார். "சரி. அப்படியே ஆகட்டும்" என்று கணபதி ஐயருடைய ஆர்டரை ஊர்ஜிதப்படுத்தினாள். மறுநாள் தொந்திக் கணபதி ஐயர் வயலிலிருந்து திரும்பி வந்தார்.

தனக்கு மிகவும் வேண்டியவர்கள் வந்துவிடும்போதுதான், அந்தப் பிரமிப்பில் எதுவும் பேசவோ கேட்கவோ கூடாமல் வாயடைத்துப்போய், நினைவுக்கும் பல சங்கதிகள் வராமல் தடைபட்டுவிடுகிறது. வந்தவர்கள் போன பின்பு எல்லா ஞாபகங்களும் உண்டாகி, அவர்களிடம் அதை இதைக் கேட்காமல் போனோமே என்று மனம் தவிக்கிறது.

சாப்பாட்டிற்கு இலை போடப்பட்டிருந்தது. கணபதி ஐயர் சாவதானமாக மணையைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார். கணபதி ஐயருடைய மனைவி அவர் போட்ட முன்னுள் உத்தரவுப் பிரகாரம். நெய், உப்பு, ரசம், மோர், சாதம், பச்சடி, ஊறுகாய் முதலியவை எல்லாம் கொஞ்சம் கொஞ்சம் இலையில் வைத்து விட்டு சாதத்தை எடுத்து வரப்போனுள். கணபதி ஐயர் ஒரு தடவை இலையை ஒரு பார்வை பார்த்தார். அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. "ஏன் இந்த மோர், ரசம், சாதம் இவைகளை யெல்லாம் வைத்தாய்?" என்று கேட்டார். "தங்களுடைய நேற்றேய உத்தரவுப் பிரகாரம் தான் நான் செய்திருக்கிறேன். தப்பிதம் ஏதாவது உண்டா?" என்று வினயமாகக் கேட்டாள். தொந்திக் கணபதி ஐயருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. "சரி" என்று சொல்லிவிட்டு தன் போஜன யுத்தத்தை ஆரம்பித்தார்.

ஃ

பர்த்தாவின் மனமறிந்து விநய சாதுர்யங்களுடன் உட்படிந்து நடந்து கொள்பவர்க்கு எல்லா மங்களங்களுமுண்டு. ஆடவரின் மனம் நிமிஷத்திற்கு ஒருவிதமாக மாறுந் தன்மையது. அம்மாறுதலுக் கேற்ப இசைந்து திருப்தி செய்வதில்தான் குடும்ப சாமர்த்தியம் இருக்கிறது.

S. ஸ்ரீரங்கராஜு,

'ஜெகன்னுதபாக்', சைதாபேட்டை.

களவும் கற்று மற.

நீ தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களைப் பிற நூல்களினின்றும், பெரியோர்களது பிரஸங்கங்களிலிருந்தும் வேண்டியவரையில் களவுசெய்து மனப்பாடமாக்கிக் கொள். அவற்றை உனக்குச் சொந்தமாய் விடும்படி நன்றுகக் கற்றுத் தேர்ச்சிபெறு. பிறகு அவற்றை யெல்லாம் மறந்துவிடு. நீ கண்ட நூல்களிலிருந்த விஷயங்களின் வாசக நடையையும் மறந்துவிடு. இவ்விதம் மறந்துவிட்டு, நீ கற்ற விஷயங்களின் பயனுக, உன் சொந்தமாய் உள் மனத்திலிருந்து எழுகிற சிந்தனு ஊற்றுகளையும் புது புதுக் கற்பனைகளையும் நீ வேண்டியவரையில் எழுதிக்கொள். அவை உன்னுடைய சொந்த சொத்தேயாகும். (1) முதலில் களவு. (2) பிறகு களவாடிய உயரிய விஷயங்களைக் கற்பது. (3) பின் அவற்றை அப்படியே குருட்டுப்பாடம் ஒப்புவியாமல் மறந்துவிட்டுச் சுயயோசனையோடு சொந்தமாய்த் தானே எழுதத் தொடங்குவது. இதற்கே 'களவுங் கற்றுமற' என்று கூறப்பட்டதாகவும் ஒரு பொருள் கொள்ளலாம்.

மாயமாய்ப்போன மங்கை.

பால விவாகம்

சாரதாச் சட்டம்.

(79-வது பக்கத் தொடர்ச்சி.)

ஒரு பெண்மணி எழுதியது.

அந்த ஜமீனுடைய காரியங்களைத் தானே கவனிக்கலானாள். அவள் மிகுந்த புத்திசாலியும் தைரியசாலியுமானதால் மிகவும் ஸாமர்த்தியத்தோடு அவ்வூர் ஜனங்களை வசியப் படுத்திக்கொண்டு யாவரிடத்திலும் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டாள். தன் குழந்தைக்கும் சரியான ஆசிரியரைக் கல்வி கற்பிக்க ஏற்படுத்தினாள். தான் ஸ்திரீயாயிருந்து ஜமீன் காரியங்களைக் கவனிப்பதால் அவ்வூரிலுள்ள ஸ்திரீகளுக்கெல்லாம் கௌரவம் ஏற்படுத்தி அவர்களை முன்னுக்குக் கொண்டுவர ஆவல் கொண்டு அதற்கேற்பாடு செய்து அவர்களை முன்னுக்குக் கொண்டு வந்தாள். அவர்களுடைய கஷ்ட நிஷ்ரங்களை நேரில் கேட்டறிந்து தன்னாலான உதவிகள் புரிவதிலேயே மிகவும் ஊக்கம் கொண்டிருந் தாள். தவிர, அந்த ஊரில் அதிக பாலியத்திலேயே விவாகம் செய் யும் வழக்கத்தை ஒழிக்க அவளாலானமட்டும் பாடுபட்டும் முடியாத காரியமா யிருந்தது. விவாகம் என்ற பதத்தை நினைத்தாலே அவ ளுக்குப் பெருந் துபரா யிருந்தது.

ஒரு ஸ்திரீ விவாகம் செய்துகொண்டு வாரிக்கொள்ளும் சுகம் எனக்குத்தான் தெரியும். பிறந்தபடியே வளர்ந்திருந்து இறந்து விட்டால் மிக்க நல்லது. சம்சாரம் கவலையே ஒழியவேறில்லை யென்று தன்னைக் காணவருவோரனைவரிடமும் முதல் பேச்சாகப் பேசுவாள். உலகத்தில் தன் கஷ்டம் போலத்தான் எல்லாரும் கஷ்டப்படுவார்க ளென்பது அவளெண்ணம். அதிலும் கணவனை யிழந்த இளங் கைம் பெண்களென்றால் அவர்களைக் கண்டு அவள் படும் கவலை சொல் லியே முடியாது. அவர்களுக்காக ஒரு தொகை ஏற்படுத்தி அவர் கள் இன்ன விதமாக இருக்க வேணுமென்று சட்டதிட்டம் செய்து அவர்களை நல்வழிப்படுத்த முயன்றாள். முக்கியமாக அந்த ஊரில் ஸ்திரீகளின் கற்பைக் காப்பதே தன் விரதமாகக் கொண்

டிருந்தாள். கற்பழிந்த பெண்களைக் கண்டாலும் ஸகிக்காமல் அவர்களுடன் முகங் கொடுத்துப் பேசாமலும் அவர்கள் திருந்துமாறு ஆணிபோன்ற வார்த்தைகளால் அவர்களைத் திருத்துவதிலேயே எண்ணமாயிருப்பான். அவளிடம் அநேகம் நற்குணங்கள் குடிகொண்டிருந்தன. இருந்தாலும் பிடிவாதம் என்ற ஒரு குணம் மட்டும் அவளை விட்டு அகலாமலிருந்தது. அதனால் அவள் அனேகம் காரியங்களை சாதித்ததுண்டு. அது சில சமயங்களில் அவளைச் சேர்ந்த மனிதருக்கு மிகவும் அவஸ்தையாயிருந்தது. அவள் தன் மட்டில் மிகவும் சாதரணமாகவே இருப்பாள். தன் ஒரே வேளை உணவும் மிகவும் சாதாரணமாயிருக்கும். தான் உடுக்கும் ஆடையும் மிக சாமானியமானதாயும் அழகாயுமிருக்கும். அவ்வூரினுள்ள அனாதரவான குழந்தைகளை யெல்லாம் தன் அரண்மனையிலேயே அன்னமளித்துக் கல்விபயில ஏற்படுத்தியிருந்தாள்.

இவ்விதமாக அவள் காலம் நல்ல சத் காலக்ஷேபமாகவே நடந்து கொண்டிருந்தது. அவ்வூரிலுள்ள பல பெரிய பிரபுக்கள் முதல் பிச்சைக்காரன் வரையில் அமராவதியை அதிக மதிப்பா யெண்ணிவந்தார்களே யொழிய கொஞ்சமாவது கேவலமாகப் பேச இடமில்லாமலிருந்தது அதிசயமே. அந்தப் பிடிவாதகுணம் ஒன்றால் அநேகர் அவளிடம் அச்சங்கொள்ள வேண்டியதா யிருந்தது. அவளுடைய எண்ணமெல்லாம் தன் சிறு பாலன் சீக்கிரம் பெரியவனாய் க்ஷேமமாக வாழவேணுமென்பதும், தான் எண்ணிய பெண்ணையே அவன் விவாகம் செய்துகொள்ள வேணுமென்பதுமே நோக்கமாயிருந்தாள்.

இவ்விதமாகக் கவலையைக் காலமாகிய மரக்கலத்தால் கடந்து அக்கரையாகிய சாந்தியைப் பெற்றுக் காலந் தள்ளலானாள்.

---

3. குடும்பக் குழப்பங்கள்.

ஏண்டீ! அதென்ன அவ்வளவு திமிரோ? எவ்வளவு துணிச்சவிருந்தால் நீ இப்படி பதில்கூடச் சொல்லாமல் உம்மணாம் மூஞ்சியைப்போல நிற்பை? ரொம்ப நன்றாயிருக்கடீ, பாரு - குட்டிச்சுவர் போல நிற்பதை என்று கிழவி சொல்ல, அவள் மகளும்—ஆமாம் அவளை அருவா மனையாலேயே நறுக்கணும், துளுத்துப் போச்சு கட்டை என்று கையில் வைத்துக்கொண்டிருந்த அருவாமனைக் கட்டையால் நறுக்கென்று தலையில் ஒரு அடி அடித்தாள். அய்யோ

பாவம்! அப்பெண் தலை வலியைத் தடவிக் கொடுத்துக் கொள்வதற்குக்கூட பயந்து ஒடுங்கி நின்றது. அதைப் பார்த்து அவள் ஏண்டி நிக்கரே, காரியங் கிடக்கு, குழாயண்டை புடவையெல்லாம் வைத்திருக்கு, தோச்சுப் பிழிஞ்சிண்டுவா, சோத்தைத் தின்னலாம். என்று கோபித்தாள். பாவம் பதினுன்கு வயதுடைய அப்பெண் ஒன்றும் பேசாமல் துணிகளை யெல்லாம் உவைத்துப் பிழிந்து உலர்த்திவிட்டு அவர்களிடும் கட்டளையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தும், அக் கிழவிகளில் ஒருத்தி ஏன் நிற்கனும்? அந்தப் பழையதை எடுத்து வைத்துக்கொண்டு நிற்கிறது தானே? மேற்கத்தி மாடாட்டமா நிக்க வாண்டாம். உடனே அந்தப் பெண் பழைய சாதத்தை ஒரு சிறிய இலையில் பிழிந்து வைத்துக்கொண்டு கொஞ்சம் மோர் எடுத்து சாதத்தில் விட்டுக்கொண்டது. அவ்வளவு தான் தாமதம் அந்தச் சின்னக் கிழவிக்குக் கோபம் பொங்கிவிட்டது. குடுகுடென்று ஓடி வந்து மோர்ப் பாத்திரத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டுப் பரவாயில்லே. ஏது மோரில்லாவிட்டால் இறங்காதோ? உங்கப்பன் வீட்டுச் சொத்தோ? சுழுதை புளிச்ச தண்ணியுஞ் சோறுந் தண்ணியும் போராதாக்கும். எவ்வளவு பணிக்கை. சும்மாத்தானே. ஒரு முறங் கொட்டிக்கல்லயோ தெய்வமென்று பாவம் உத்தியோகத்திலிருக்கான். அவனுக்குக்கூடப் பச்சைத் தண்ணி மோரைக் குத்தரேன். எல்லாங் கிடக்க கிழவியைத் தூக்கி மணையிலெ வெச்சாளாம். அதுபோல் இதென்ன துணிச்சலடி? நாளைதொட்டு இந்தமாதிரி சோறுகூட மோர் கூடாது, இன்றுபோனுல் போகிறது. நாளை தொட்டு இந்த மாதிரி செய்யாதே தெரியுமா ஸமாசாரம். இரண்டாம் பேரறியாமல் தின்றுவிட்டு எழுந்திரு. ஊர்கூடி செக்குத் தள்ளும்படியாக வைக்காதே என்று கையை ஆட்டியும் தலையை ஆட்டியும் அடிவயிற்றிலிருந்து ஆங்காரத்துடன் சொல்லி அப்பெண் சாப்பிடுவதைக் கண்கொடாமல் பார்த்துக்கொண்டே நின்றுகொண் டிருந்தாள். அப்பெண்ணுக்கோ பசி வருத்த துக்கம் நெஞ்சை யடைக்கக் கண்ணீர் ததும்பிக் கண்களைமறைக்க அவளெதிரில் சாப்பிடுவதால் வெட்கம் ஒருபுற மிருக்க, அந்தச் சாதத்தை மெள்ள மெள்ள உள்ளே செலுத்தினுள். பல எண்ணம் நெஞ்சில் உதித்தது; ஈசுவரா! நான் பிறந்த அருமை யென்ன! வளர்ந்த அருமை யென்ன! இப்பொழுது நான் படும் சிறுமை யென்ன. இதை என் தாய் பார்த்தால் ஸஹிப்பாளா. என் புருஷனேயோ இவர்கள் ப்ச்சைக் குழந்தையைப்போல

ஆட்டிவிடுகிறுர்கள். அவர் என்ன செய்வார்? பாவம்! அவரிடம் இவ் விஷயங்களை நான் துணிந்து இதற்குள் சொன்னுல் என்மீதே அவருக்கு ஸந்தேகமேற்பட்டாலும் ஏற்படலாம். தாயிடத்துள்ள பிரியத்தால் என் வார்த்தை எனக்கே தீங்காயும் முடியலாம். இந்த ஆறு மாத காலமாக இவர்களுக்கு என்மீது சிறிதுகூடத் தயவில்லை. எத்தனை நாள் இப்படி யிருக்குமோ என் கஷ்டம் என்று அவர்களிடும் வேலைகளை அதிக கவனத்துடன் செய்து கொண்டிருந்தாள். மாலை ஐந்து மணிக்கெல்லாம் பஞ்சநாதம் ஆபீசிலிருந்து ஒரு பொட்டலம் பூவும் கையுமாக வந்தாள். தான் கொண்டுவந்த பொட்டலத்தை மேஜையின்பேரில் வைத்துவிட்டு அக்கா திங்கிரத்துக்கு என்ன வைத்திருக்காய் என்ருன்.

அதற்கு அவன் தமக்கை பையா சீடையிருக்கு தின்கிரையா நாளைக்கிவேண்ணு முறுக்குச் சுத்திப்போடறேன் என்ருள் அதற்குள் பெரிய கிழவியாகிய தாயார் குழந்தே ஆபீஸூ விட்டாளப்பா தின்கிறத்துக்கா ஒக்காறே அடீ சிவாமூ குழந்தைக்கி சீடெகொண்டு வந்து கொடுடீம்மா என்ருள். உடனே அவன் தமக்கையாகிய சிவகாமு ஒரு தட்டில் சீடையும் ஒரு டம்ளரில் குடிக்கத் தண்ணீரும் கொண்டு வந்து வைத்தாள். பஞ்சாநதத்துக்கோ அதைத் தின்னவும் பிடிக்கவில்லை விடவும் மனதில்லை என்ன அக்கா இந்தச் சீடைதானுவேறே ஒன்றுமே நம்மாத்தில் செய்வதில்லை. போதாக்குறைக்கு நாளைக்கு அம்மா விளக்கெண்ணெய் வைத்து முறுக்குச் சுத்துவளாம் இதென்ன வேண்டியிருக்கு தண்ட இழவு எனக்குப் பிடிக்கவேயில்லை.

சிவகாமி:—என்னடா அம்பி கோவிச்சுக்கிரெ! உத்தியோகம் பண்ணிஞ கோவிச்சுக்கனுமா? மத்த பக்ஷணமெல்லாம் விலை உசந்த பக்ஷணம் இது தானப்பா குடித்தனத்துக்கேத்த பக்ஷணம். அடங்காப் பிடாரியும் அவலச் சமத்துப்பிள்ளையு மிருந்தால் குடித்தனம் உருப்பசிமாடா நீ அறியாதவன் அந்தப் பொண்ணே சொல்லி முடியாத சமத்து. உங்க ரெண்டு பேரையும் தனியா இந்த மைலாப்பூர்லே தனிக்குடித்தனம் வெச்சா உருப்படுமா? நீ காப்பி ஹோட்டலுக்குக் குடுக்கவும் ஒன்னும்படையாள் ஸோப்பும் வில்க்கும் வாங்கத்தான் போகும். உன் சம்பளம். அதுக்காகத்தான் போரும். நாங்கள் ரெண்டு கட்டைகள் இங்கே கிடந்து கஷ்டப் படறும் இல்லாவிட்டால் சிவசிவான்னு தங்கம்போல ஊருலெ நெல்லும் நீருமா தங்கம் பாலுமா மக்களும் மனுஷாளுமா ஜாம் ஜாமென்று இருப்போம். எல்லா நீ முன்னுக்கு வரணும் முன்னுத்தான்டாப்பா நாம் படாத பாடெல்லாம் அக்கியானம் கேக்கறதா. (தொடரும்.)

"அமிர்த குணபோதினி"

பவஹஸ்த்திய வைகாசி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
ம-அ	14	1	திங்	பிர-32-37, கிரு-21-37, ரிஷபரவி 14-47, துவாபர யுகாந்தம்.
அ-சி	15	2	செவ்	துவி-35-59, ரோ-26-17.
சி	16	3	புத	திரி-40-35, மிரு-32-12, வார்த்தாக கௌரீவிரதம்.
ம-அ	17	4	வியா	சது-46-13, ஆரு-39-8.
சி-உ	18	5 (ரிஷபம் 5—3)	வெ	பஞ்-52-27. புந-46-44, ஸ்ரீ சங்கரஜயந்தி.
சி-ம	19	6	சனி	ஷஷ்-58-55, பூச-54-33, ஷஷ்டி விரதம்.
சி	20	7	ஞா	ஸப்-60-0. ஆயி-60-0, கரிநாள், கங்கோத்பத்தி.
சி. ம	21	8	திங்	ஸப்-4-53, ஆயி-1-56, மிதுனயனம் 46-50, சிங்க
				பெருமாள் கோயில் கருடன்.
சி	22	9	செவ்	அஷ்-9-49, மக-8-22, தஞ்சை கருடன்.
அ	23	10	புத	நவ-13-12, பூர-13-19, திருக்கண்ணபுரம் கருடன்.
ம-அ	24	11	வியா	தச-14-37, உத்-16-23, கூர்மஜயந்தி.
அ-சி	25	12	வெ	ஏகா-13-54, ஹஸ்-17-24, ஸர்வைகாதசி.
ம-அ	26	13	சனி	துவா-11-10, சித்-16-22, பிரதோஷம்.
சி-உ	27	14	ஞா	திர-6-37, ஸ்வா-13-33, வரதர், சித்ரகூடம்கருடன்.
ம-சி	28	15	திங்	சசி-0-36, உப○52-53. விசா-9-19, ஸம்பதகௌரீ
				அர்த்தநாரீசுவர விரதம் நரஸிம்ம ஜயந்தி.
சிஉஅ	29	16	செவ்	பிர-45-40, அநு-4-2, உப-54-5, கரிநாள்.
ம-அ	30	17	புத	துவி-37-29, மூல-52-0, கரிநாள்.
சி	31	18	வியா	திரி-29-21, பூரா-46-3, சஞ்சி ரதம்.
சி-ம	1	19	வெ	சது-21-43. உரா-40-35, திதிதுவயம்.
சி	2	20	சனி	பஞ்-14-46, ஸ்ரீவ-35-55, வாஹனமேற.
ம-சி	3	21	ஞா	ஷஷ்-8-45, அவி-32-13.
சி	4	22	திங்	ஸப்-3-50, உப-56-8. சத-29-40.
ம-அ	5	23	செவ்	நவ-57-20, பூட்-28-16.
சி-உ	6 (ஜூன்)	24	புத	தச-55-50, உட்-28-7.
சி-அ	7	25	வியா	ஏகா-55-28, ரே-28-59,
				ஸர்வைகாதசி.
அ-சி	8	26	வெ	துவா-56-15, அசு-31-4.
சி-அ	9	27	சனி	திர-58-7, பர-34-11, பிரதோஷம்.
சி	10	28	ஞா	சசி-60-0, கிரு-38-21, கிருத்திகாவிரதம், சிவராத்
				திரி, ஸ்ரீமுஷ்ணம் வராஹஜயந்தி.
அ	11	29	திங்	சசி-1-0, ரோ-43-31, சோமவார அமாவாசை.
சி-ம	12	30	செவ்	●-4-57, மிரு-49-38, ஸங்கீதம் கற்க, பிரதமதிதி.
சி	13	31	புத	பிர-9-51, ஆரு-56-35, துவிதியாதிதி ஜ்யேஷ்ட
				சுத்தம்.

	சுக்	ர-பு குஜ	
சனி	15உ-உதயத்திற்கு ராசி		கே
ராகு			
			குரு

Printed & Published by the Proprietor E. M. Gopalakrishna Kone;
At the Amirtha Gunabodhini Press, 158-A, Broadway, Madras.